# உறவின் உரசல்கள்

(குடும்பம் பற்றிய விவிலிய, சமூக, உளவியல் பார்வை)



தமிழ் நேசன்

கலையருவி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவின் உரசல்கள்

(குடும்பம் பற்றிய விவிலிய, சமூக, உளவியல் பார்வை)

**தமிழ் நேசன்**

**கலையருவி வெளியீடு**

**மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம்,**

**இல. 116/3, புனித சூசையப்பர் வீதி,**

**பெற்றா, மன்னார்,**

**இலங்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் முகம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | உறவின் உரசல்கள் |
| ஆசிரியர் | : | தமிழ் நேசன் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | குடும்பம் |
| முதற்பதிப்பு | : | 2014 டிசம்பர் |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கங்கள் | : | XVIII + 124 = 142 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | கலையருவி |
| அட்டைப்படம் | : | எஸ். சதீஸ் |
| தட்டச்சு | : | செல்வி. எஸ். குமுதினி குரூஸ்,<br>செல்வி. எஸ். துளசி |
| அச்சகம் | : | சைபர் சிற்றி, மன்னார் |
| விலை | : | 300/= |
| தொடர்புகளுக்கு | : | அருட்திரு. தமிழ் நேசன்,<br>கலையருவி,<br>மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு<br>அருட்பணி மையம், இல. 116/3,<br>புனித சூசையப்பர் வீதி, பெற்றா, மன்னார். |

| | | |
|---|---|---|
| Title | : | URAVIN URASALKAL |
| Author | : | Thamil Nesan |
| Language | : | Tamil |
| First Edition | : | 2014 December |
| Pages | : | XVIII + 124 = 142 |
| Copy Rights | : | Author |
| Publishers | : | Kalaiyaruvi Publications |
| Press | : | Cyber City |
| Cover Page | : | S. Sathees |
| Prize | : | 300/= |
| Contact | : | Office : 023- 2250789, 023–3233276<br>Mobile : 0777420811<br>Email : nesanmnr@gmail.com<br>Web : mannardiocese.net, manna.lk |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

## அமரர் அருட்பணியாளர் நி. பாக்கியரஞ்சித் அடிகளாருக்கு



ரஞ்சித்!
உன்னோடு வாழ்ந்த நினைவழியா நாட்கள்
இன்னும் நெஞ்சில் நிழலாடுகின்றன!
துன்புறும் மானிடத்தின் துயர்துடைக்கப் பறந்துசென்ற நீ
பாதிவழியில் பலிகொள்ளப்பட்டாய்.
ஆடுகளுக்காக உயிர்கொடுத்த
நல்ல ஆயன் வழியில் நீயும் தடம்பதித்தாய்.
மானிட சேவையில் இரத்தம் சிந்திய
நீயும் ஒரு மறைசாட்சியே!
உன் நீங்கா நினைவுகளுக்கு
இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

- நேசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்நூலானது குடும்பங்களை மையமாக வைத்து எழுதப் பட்டுள்ளது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, அம்மா, அப்பா, பெற்றோர், பிள்ளைகள், சகோதரங்கள், மூத்தோர் என்று குடும்பத்தில் பல்வேறு வகிபாகங்களை (கடமை, பொறுப்புக்களை) ஏற்றிருக்கும் அனைத்துத் தரப்பினரையும் விழித்து, முன்னிலைப்படுத்தி இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

குடும்பம் பற்றிய இந்நூலை விவிலிய, சமூக, உளவியல் பார்வையில் எழுதியுள்ளேன். சாதாரண மக்களைத் தூண்டும் வகையில் சுருக்கமாக, சுவையாக விடயங்களை முன்வைக்க முயற்சித்திருக்கிறேன்.

இந்நூலில் நடைமுறைசார்ந்த குடும்பப் பிரச்சினைகள் உண்டு, குடும்பங்கள் பற்றிய பத்திரிகைச் செய்திகள் உண்டு, விவிலிய வார்த்தைகள் உண்டு, குட்டிக் கதைகள் உண்டு. நகைச்சுவைத் துணுக்குகள் உண்டு. உளவியல் உண்மைகள் உண்டு, பொருள்பொதிந்த பொன்மொழிகள் உண்டு. சமூகக் கண்ணோட்டங்கள் உண்டு. குடும்ப வாழ்வு பற்றிய அடிப்படை உண்மைகளை, கிறிஸ்தவப் படிப்பினைகளை பல்வேறு வழிகளில் இலகுதமிழில் வழங்குவதற்கு முயன்றிருக்கின்றேன்.

**குடும்பம் தொடர்பான இந்த நூலை நான் எழுதுவதற்கு சில காரணங்கள் இருந்தன:**

1. 2014ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள தமிழ் மறைமாவட்டங்களில் ‘மனித மாண்பும் குடும்பமும்’ என்ற கருப்பொருள் அருட்பணிகளின் மையப் பொருளாக்கப்பட்டு பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இக்கருப்பொருளை மையப்படுத்தி மன்னார் மறைமாவட்டச் சமூகத்தொடர்பு அருட்பணி மையமாகிய கலையருவியினால் பங்குகளில் நிழற்படக் காட்சியின் (Multi Media – Power - Point Presentation) உதவியோடு பல்வேறு உரைகளை வழங்கினோம். அந்த உரைகளின் விரிவாக்கமே இந்த நூலாக மலர்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 2015ஆம் ஆண்டை 'அர்ப்பண வாழ்விற்கான ஆண்டு' அல்லது 'துறவியர் ஆண்டு' (The Year of Consecrated Life) எனத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்துள்ளார். மன்னார் மறைமாவட்டத்தில் இந்த 'அர்ப்பணிக்கப்பட்டவர்களின் ஆண்டிற்கான அருட்பணித் திட்டங்கள் குடும்பங்களை மையப்படுத்தியதாகவே வகுக்கப்பட்டுள்ளன. எனவே மன்னார் மறைமாவட்டத் திருச்சபையின் அருட்பணித்திட்ட முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் நோக்கோடு இந்த நூலை எழுதினேன்.

3. 2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரை நடைபெற்ற உலக ஆயர்கள் மாமன்றம் (Synod of Bishops) "திருச்சபையும் கத்தோலிக்க குடும்பங்கள் சந்திக்கும் சவால்களும்" என்ற கருப்பொருளை தனது விவாதப்பொருளாக எடுத்து விவாதித்தது. இந்த மாமன்றத்தின் இரண்டாவது விவாதம் 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை இடம்பெறும். அகில உலகத் திருச்சபையின் இன்றைய கவனம் 'குடும்பம்' பற்றியதாக இருக்கும் நிலையில், எமது தமிழ்க் கிறிஸ்தவ மக்களும் தமது குடும்ப வாழ்வை இறைவார்த்தையின் ஒளியில் சீர்தூக்கிப் பார்த்து செப்பனிட உதவியாக ஒரு நூலை எழுதுவது பயனுடையது என நினைத்தேன்.


4. 2015ஆம் ஆண்டு கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் திருத்தந்தை அறிவித்த 'அர்ப்பண வாழ்விற்கான ஆண்டு' குடும்ப ஆண்டாகவும் சிறப்பிக்கப்படுகின்றது. "குடும்பத்தில் புனித வாழ்வு வாழ்வதற்கான அழைப்பிற்குப் பதிலளித்தல்" என்ற தலைப்பில் இந்த ஆண்டு அருட்பணித் திட்டங்கள் அங்கு முன்னெடுக்கப்பட்டுள்ளன. கொழும்பு மறைமாவட்டத்தின் இந்தத் திட்டமும் இந்நூல் வெளிவருவதற்கான உந்துதலை எனக்குக் கொடுத்தது.

சிந்தனைக்கு விருந்தாக, சந்தேகங்களுக்கு மருந்தாக இந்நூல் அமையவேண்டும் என்பதில் நான் அதிக கவனம் செலுத்தியுள்ளேன். இனிமையான இல்லறத்திற்கான திரவியத்திரட்டாக இது அமைய வேண்டும் என்பதில் முழு முயற்சி எடுத்துள்ளேன். இதை வாசிக்கும் ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் வளமும் நலமும் பெற்று மகிழ்வோடு வாழவேண்டும் என்பதே என் இதய வேட்கையும் செபமும்.

**நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களுடன்,**
**அருட்பணியாளர் நேசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசியுரை

**மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை**
**மன்னார் மறைமாவட்ட ஆயர்,**
**மன்னார்**

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் கிறிஸ்து நேசரெட்னம் அவர்கள் தமிழ் இலக்கிய உலகில் 'தமிழ் நேசன்' என்று அறியப்படுகின்றார்.

இயல்பாகவே மொழி, கலை, இலக்கியத் துறைகளில் ஆற்றலும் ஆர்வமும் கொண்டு விளங்கும் இவர், தனது திறமைகளை எமது மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் பயன்படுத்தி வருகின்றார்.

ஏற்கனவே சில நூல்களை வெளிக்கொணர்ந்து எமது மறைமாவட்ட மக்களின் ஆன்மீக வாழ்வுக்கு வழிவகுத்த இவர், காலத்தின் தேவை அறிந்து தற்போது குடும்பங்களை முன்னிலைப்படுத்தி ஒரு சிறந்த நூலைப் படைத்துள்ளார்.

குடும்பங்கள் இன்று பல்வேறு சவால்களைச் சந்திக்கும் சூழ்நிலையில் குடும்பங்களுக்கு ஓர் அரிய வழிகாட்டியாக இந்நூல் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

உயிரின் மதிப்பை உணராத பல தம்பதியர் சர்வசாதாரணமாக கருவிலே மனித உயிர்களைக் கொலைசெய்கின்றனர்; கருவறையில் குழந்தைகளுக்குக் கல்லறை கட்டுகின்றனர். தாயின் வயிற்றில் கரு உருவாகிய நாளிலிருந்து அது ஒரு மனித உயிராகவே கணிக்கப்பட வேண்டும். கருவை அழிப்பது ஒரு மனித உயிரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைசெய்வது என்பதை எமது மக்கள் ஆழ உணர்ந்து செயற்படவும் குடும்ப உறவினைப் பேணிக்காக்கவும் இந்நூல் அருமையாக வழிகாட்டுகின்றது.

குடும்பத்தில் பல்வேறு பொறுப்புக்களை கொண்டிருக்கும் கணவன், மனைவி, தாய், தந்தை, பிள்ளைகள், மூத்தோர் என ஒவ்வொருவருக்கும் காத்திரமான செய்திகளை இந்நூல் தாங்கிவருகின்றது. விவிலிய மேற்கோள்களோடு, நடைமுறைவாழ்வின் பிரச்சினைகளை இனங்காட்டி, உளவியல் கருத்துக்ளை உட்புகுத்தி, நகைச்சுவை மிளிர நேசன் அடிகளார் இந்நூலை உருவாக்கியுள்ளார்.


அவருடைய இந்த மேலான முயற்சிக்காகவும், மன்னார் மறைமாவட்டத்தில் அவர் முன்னெடுக்கும் பல்வேறுபட்ட நற்பணிகளுக்காகவும் அவரை நான் பாராட்டுகின்றேன். இதுபோன்ற இன்னும் பல படைப்புக்களை அவர் நமக்குத் தரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

ஒவ்வொரு குடும்பமும் இந்நூலை வாங்க வேண்டும்; ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் இந்நூலை வாசித்துப் பயன்பெற வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதை வாசிக்கும் ஒவ்வொருவருடைய குடும்ப வாழ்வும் அர்த்தமுள்ளதாக, ஆழமுள்ளதாக, மகிழ்ச்சி நிறைந்ததாக மலரவேண்டும் என வாஞ்சிக்கின்றேன். இறையாசீர் வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை

அருட்பணி. எஸ். கே. தேவராஜா,
இயக்குனர்,
குடும்பநல பொதுநிலையினர்
ஆணைக்குழு,
மன்னார் மறைமாவட்டம்.

மனித வாழ்வு குடும்பத்தில் மொட்டாகி, சமூகத்தில் மலர்ந்து, உலகில் மணம் வீசுகின்றது. குடும்பம்தான் மனிதவாழ்வின் பல்வகைப் பரிமாண வளர்ச்சியின் துவக்கப்பள்ளி.

ஆம்! குடும்பத்தில் மனிதன் பெறும் அனுபவங்களின் தன்மையைப் பொறுத்துத்தான் அவனது எதிர்காலம் நிச்சயிக்கப்படுகின்றது. இன்று குழந்தைகள் குடும்பத்தில் எதை அனுபவிக்கிறார்களோ, கற்றுக்கொள்கின்றார்களோ அவையே அவர்களின் நாளைய வாழ்வை நிர்ணயிக்கின்றன.

இவ்வாறு மனித வாழ்வின் மகத்தான முக்கியத்துவம் பெறும் குடும்பத்தை, விவிலிய சமூக உளவியல் பார்வையில் புடமிட்டுப் பார்க்கிறார் அருட்பணியாளர் நேசன்.

இந்நூலிலே குடும்ப வாழ்வில் தம்பதியர்களுக்கிடையே இருக்கவேண்டிய அன்பு உரசல்களையும், கணவன் மனைவி இருவருக்குமே இருக்கவேண்டிய தனித்துவமான ஆழுமை அசைவுகளையும், குடும்ப உறவைக் குலைக்கும் பிரச்சினைகளையும் புரட்டிப் பார்க்கிறார் நூலாசிரியர்.

இந்நூலின் தனிச்சிறப்பு என்னவென்றால், குடும்பத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வையும், உலக நாட்டு நடப்புக்களையும் படம்பிடித்துக் காட்டி, பல்வேறு அனுபவக் கதைகள் வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் உளவியல் கண்ணோட்டத்தோடு உற்றுநோக்கி மனித மனதின் ஆழத்தை படம்பிடித்துக் காட்டும் சுவாரஸ்யம்தான்!

நல்ல கிறிஸ்தவக் குடும்பங்கள் எப்படி அமையவேண்டும் என்பதற்கான வழிமுறைகள் இந்நூலில் தூவப்பட்டிருக்கின்றன. அந்தவகையில் இந்நூல் கிறிஸ்வதர்களுக்கு மட்டுமல்லாமல் கிறிஸ்தவரல்லாதவர்களுக்கும் பயன்படக்கூடிய சிறந்த நூல்.

குடும்ப வாழ்வில் ஈடுபட்டிருப்போருக்கும் குடும்ப வாழ்வைத் தொடங்கவிருப்போருக்கும் இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டி. மனஒருமையும், இறைபயமும், மகிழ்ச்சியும் கொண்ட குடும்பங்களால் மண்ணகமும் விண்ணகமாய் மாறவேண்டும் என்ற நோக்கில் படைக்கப்பட்டது இந்நூல்.

குடும்பப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் சமய சமூகப் பணியாளர்களுக்கும் இந்நூல் சிறப்பாக உதவும் என்பது என் எளிய நம்பிக்கை.

***இவருடைய நூலைப் படித்துப் பயன்பெறுக!***
***எம் மறைமாவட்டத்தில் குட்டித் திருச்சபைகள் வளர்க!***

குடும்பநலப் பணிமையத்திற்கு பயன்படக்கூடிய இந்தப் பெரும் முயற்சிக்கு என் மனமார்ந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

**திருமதி. பெப்பி. விக்ரர் லெம்பேட்,**
**உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்),**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**மன்னார்**

அருட்பணியாளர் தமிழ் நேசன் அவர்கள் 1997ம் ஆண்டு வங்காலைப் பங்கின் உதவிக்குருவாகப் பணியாற்றிய காலத்திலிருந்து எனக்கு அறிமுகமானவர். சமயத்துக்கும், தமிழுக்கும் தொண்டாற்றிய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் போன்றவர்களின் வழியில் மன்னார் மண்ணிலிருந்து சமயத்துக்கும் தமிழுக்கும் பணியாற்றும் முக்கியமான ஒரு கத்தோலிக்க குரு! தனது மறைமாவட்டம் சார்ந்த சமய, சமூகப் பணிகளுடன் தமிழுக்கும் அவர் காத்திரமான பணியாற்றிவருவது நம் அனைவருக்கும் மகிழ்ச்சிதரும் சிறப்பான விடயமாகும்.

அடிகளாருடன் நான் பழகிய காலத்திலிருந்து அவரின் பரந்துபட்ட பணிகளைக் கண்டு நான் பெருமையும், மகிழ்வும் அடைவேன். இவர் மறைக்கல்வி இயக்குனராக இருந்தவேளையில், நான் மறையாசிரியராக இருந்து பல அனுபவங்களை அவரிடமிருந்து பெற்றுள்ளேன். அடிகளாரை ஆளுமை, ஆற்றல்மிக்க குருவாக மட்டுமின்றி, பெரும் நிகழ்வுகளைச் சிறப்பாகத் திட்டமிட்டு ஒழுங்கமைக்கும் முகாமையாளராகவும், தமிழ் வளர்க்கும் தமிழறிஞராகவும், சிறந்த கலைஞராகவும், அனுபவமுள்ள படைப்பாளியாகவும் நான் பார்த்திருக்கிறேன்.

அடிகளாரின் சிறந்த படைப்புக்களான 'தண்ணீருக்குள் தாகமா?' மற்றும் 'வெளிச்சத்தின் வேர்கள்', ஆகிய ஆன்மீக நூல்கள், 'நெருடல்கள்' என்ற கவிதை நூல், 'கல்வாரிக் காலடிகள்', 'சிலுவையின் பாதையில் சின்னக் காலடிகள்' மற்றும் 'அன்பின் அதிர்வுகள்' போன்ற சிலுவைப் பாதைச் சிந்தனை நூல்கள், இன்னும் இவர் மலராசிரியராக இருந்து தொகுத்த பல பிரமாண்டமான மலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல்வேறு வெளியீடுகள் மூலம் இவரின் உள்ளார்ந்த திறன்களை ஏற்கனவே நாம் அறிந்துள்ளோம்.

அடிகளார் சொல்வதைச் செய்வார்; செய்வதைச் சொல்வார். இவருடைய பன்முகம் கொண்ட ஆற்றல்கள் தேசிய மட்டத்தில் மட்டுமல்ல தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் அறியப்பட்டவை. இவருடைய செயற்திறன் எம்மையெல்லாம் வியக்கவைக்கின்றது. 2010ஆம் ஆண்டு இவர் தலைவராக இருக்கும் மன்னார் தமிழ்ச்சங்கத்தின் ஊடாக நான்கு நாட்கள் நடாத்திய 'தமிழ்ச் செம்மொழி மாநாடு', 2013ஆம் ஆண்டு மன்னார் தமிழ்சங்கத்தின் ஊடாக மூன்று நாட்கள் இவர் நடாத்திய 'தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா', 2014ஆம் ஆண்டு இவர் இயக்குனராக இருக்கும் 'கலையருவி'யினால் முன்னெடுக்கப்பட்ட 'மாபெரும் கரோல் பாடல் போட்டி' மற்றும் பல்வேறு .கருத்தமர்வுகள், விழாக்கள் போன்றவை இவரின் தனித்துவமான திறமைகளுக்கும், சிறந்த திட்டமிடலுக்கும் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

இவர் மன்னாரில் பல இலக்கிய விழாக்களை, நூல் வெளியீட்டு விழாக்களை நடாத்தி சக எழுத்தாளர்களை ஊக்குவிக்கின்றார். பல்வேறு விழாக்களில் கலந்துகொண்டு சிறந்த உரைகள் ஊடாக தனது காத்திரமான கருத்துக்களை முன்வைக்கின்றார். அதுமட்டுமன்றி நாட்டின் ஏனைய மாவட்டங்களில் நடைபெறுகின்ற தமிழ் விழாக்கள், நூல் வெளியீட்டு விழாக்களுக்கும் இவர் வளவாளராக, விருந்தினராக அழைக்கப்படுகின்றார்.

இவர் மன்னார் மறைமாவட்டத்தில் சர்வமத விவகாரங்களுக்குப் பொறுப்பாகவும் இருக்கின்றார். மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவையின் தலைவராக இருந்து மாவட்டத்தின் இன, மத நல்லிணக்கத்திற்காக, புரிந்துணர்வுக்காக, சமாதானத்திற்காக அயராது பாடுபட்டு வருகின்றார். நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம்செய்து நாட்டில் உள்ள பொறுப்புவாய்ந்த பல சர்வமதத் தலைவர்களுடன் தொடர்பையும், உறவையும் வளர்த்துவருகின்றார்.

நீண்டகாலமாக 'மன்னா' என்ற மன்னார் மறைமாவட்டப் பத்திரிகையின் ஆசிரியராக இவர் இருந்து சிறப்பான பணியாற்றிவருகின்றார். இவர் மன்னாவின் தரத்தை மிக உயர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் தொடர்ந்து தக்கவைத்திருப்பது நாம் அனைவரும் நன்கு அறிந்ததே. இப்பத்திரிகை மன்னார் மறைமாவட்டத்தில் மட்டுமல்லாமல் நாட்டின் ஏனைய மறைமாவட்டங்களில் உள்ள தமிழ்க் கத்தோலிக்க மக்களாலும், புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ்க் கத்தோலிக்க மக்களாலும் விரும்பி வாசிக்கப்படும் 'சர்வதேச தமிழ்க் கத்தோலிக்க பத்திரிகை' என்று கூறுமளவுக்கு இது உலகளாவிய வாசகர்களைக்கொண்டு விளங்குகின்றது. இது அடிகளாரின் பத்திரிகைத்துறைசார்ந்த திறமைக்கும், கடின உழைப்பிற்கும் சிறந்த சான்றாகும்.

தற்போது இவர் பணிபுரியும் மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான 'கலையருவி' என்ற அமைப்பின் மூலம் ஊடகங்கள் மற்றும் கலை வடிவங்கள் வாயிலாக நற்செய்திப் பணியை ஆற்றிவருகின்றார். பாடல் இறுவட்டுக்கள், குறும் திரைப்படங்கள், மற்றும் வானொலி, தொலைக்காட்சி, தேசிய பிராந்திய பத்திரிகைகள் மூலம் இறைவார்த்தையை, நற்செய்தி விழுமியங்களை மக்கள் மத்தியில் பரப்புகின்ற பணியில் தன்னை முற்றும் அர்ப்பணித்துள்ளார். இவருடைய அண்மைக்கால முயற்சிகளாக குடும்பக் குவலயம் என்ற பெயரிலான பாடல் இறுவட்டும், 'நான், அம்மா, அப்பா' என்ற பெயரிலான குறும் திரைப்படமும் வெளிவந்துள்ளன.

அதுமட்டுமன்றி மன்னார் மண்ணின், கலை கலாச்சாரங்களை அழியவிடாது பாதுகாக்கும் கைங்கரியத்தையும் அடிகளார் செய்துவருகின்றார். நமது கலை இலக்கியங்கள், நாட்டுக் கூத்துக்கள் போன்றவை நமது முதுசம் என்று உணர்ந்து அவற்றைப் பாதுகாப்பதிலும், வளர்த்தெடுப்பதிலும் அதிக கவனம் செலுத்தி வருகின்றார். 'மன்னார் மறைமாவட்ட அருங்காட்சியகம்' ஒன்றையும் "மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க நூல் நிலையம்" ஒன்றையும் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

2014ஆம் ஆண்டின் மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் கருப்பொருளான 'மனித மாண்பும் குடும்ப வாழ்வும்' விடயத்தை மையப்படுத்தி இந்த நூலினை வெளிக்கொணர்ந்துள்ளார். குடும்ப ஆண்டினை நிறைவுசெய்து அர்ப்பண ஆண்டை வரவேற்கவிருக்கும் இவ்வேளையில் அடிகளார் எழுதிய 'உறவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரசல்கள்' என்ற இந்நூல் காலத்தின் தேவையை உணர்ந்து வெளியீடு செய்யப்படுகின்ற சிறப்பான ஒரு படைப்பாகும். குடும்பம் பற்றிய பல்வேறு கருத்துக்களை விவிலிய, சமூக, உளவியல் பார்வையில் தருகின்றார்.

இந்நூலை நான் வாசித்தபோது என் உள்ளத்தில் எழுந்த முதல் சிந்தனை, "இந்நூல் திருமணம் முடிக்கின்ற ஒவ்வொரு புதிய தம்பதிகளுக்கும் திருவிவிலியத்துடன் சேர்த்துக் கட்டாயம் கொடுக்கப்படவேண்டிய ஒரு நூல்" என்பதாகும். குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு தரப்பினரும் தம் வாழ்வை வளப்படுத்த வேண்டியப் பல அருமையான கருத்துக்கள் இந்நூலில் அழகாகச் சொல்லப்பட்டுள்ளன. குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் வாசிக்கவும், யோசிக்கவும், தம் வாழ்வைச் சீரமைத்துக்கொள்ளவும் இந்நூல் பல்வேறு காத்திரமான கருத்துக்களை முன்வைக்கின்றது.

நூலின் உள்ளே காணப்படும் 16 இயல்களும் இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து எழுதப்பட்டுள்ளன. சவால்களைச் சந்திக்கின்ற குடும்பங்களின் யதார்த்தம்பற்றி இதில் விபரிக்கப்படுகின்றது. கவலையிலும், கண்ணீரிலும் வாழும் குடும்பங்கள்பற்றி இதில் சிலாகிக்கப்படுகின்றது. இக்குடும்பங்கள் அமைதி இழந்த ஆன்மாக்களாக வாழுகின்றனர் என்று இங்கு குறித்துக்காட்டப்படுகின்றது.

'அறிவியல் வளர்ச்சியும் குடும்ப வாழ்வும்' என்ற உபதலைப்பில் "கொம்பியூட்டரில் காதல்பண்ணி, இன்ரநெற்றில் கலியாணம்செய்து, குளோனிங்கில் குழந்தை பெற்றுக்கொள்கின்ற காலம் இது" என்று அடிகளார் இன்றைய நவீன யுகத்தின் யதார்த்தத்தை அழகாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

இயல் 2இல் வீடு (House), இல்லம் (Home) என்ற பதங்களுக்கு பொருள் தருகின்றார். "வீடு என்பது வெறும் கட்டடம்; சில நபர்கள் வாழ்வார்கள்; உறவு - நெருக்கம் இங்கு இல்லை. ஆனால் இல்லம் என்பது வெறும் கட்டடம் அல்ல; அங்கு வாழ்பவரிடையே உறவு, அன்பு, அக்கறை புரிந்துணர்வு நிலவும்" என்று விளக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் என்பது "சமய விதையை விதைக்கும் நாற்றுமேடை" என்றும், "ஒழுக்கத்தை ஆற்றுப்படுத்தும் அறிவகம்" என்றும் "பண்புகளின் பண்ணை வீடு" என்று கூறி, குடும்பத்தை அடிகளார் உயர்வாக மதிப்பிடுகின்றார். இந்நூலில் திருமணம் என்றால் என்ன? என்று பல கிறிஸ்தவக் கருத்துக்களை முன்வைத்து இறுதியில் "திருமணம் ஒரு அருட்சாதனம்" என்றும் அது "ஒரு மறைபொருள்" என்றும் எடுத்துக்காட்டுகின்றார்.

இந்நூலைப் படிக்கும் இளம் குடும்பங்கள் 4ஆம் இயலில் காட்டப்படும் "வெற்றி நிறைந்த குடும்ப வாழ்வுக்கான வழிகளைப் படித்து பயனடையலாம்; தம் வாழ்வை இன்பமாக்கிக்கொள்ளலாம். விவிலியம் காட்டும் தோபி – சாரா தம்பதிகளின் வாழ்வு இன்றைய தம்பதிகளுக்கு நல்ல எடுத்துக்காட்டு.

மனைவி ஒரு துணைவி, நல்ல மனைவி ஆண்டவரின் கொடை, பண்புள்ள மனைவி தன் கணவனுக்கு மணிமுடி என்று அடிகளார் எடுத்துக்காட்டுகின்றார். நீதிமொழிகள் நூல், "விவேகமுள்ள மனைவியோ ஆண்டவர் அளிக்கும் கொடை" என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றது. ஒரு நல்ல மனைவி ஒரு நல்ல கணவனை உருவாக்குகின்றாள் என்ற அடிகளாரின் கூற்று ஆழமான சிந்தனைக்குரியது. 'குடை ஞானம்' என்ற தலைப்பிலான நகைச்சுவை பெண்களுக்கு நல்ல சவுக்கடி போன்று அமையலாம். நல்ல மனைவியின் நற்பண்புகளை விவிலிய மேற்கோள்களுடன் அடிகளார் எடுத்துக்காட்டுவது அழகாக உள்ளது.

கண்ணியம்மிக்க கணவர் என்ற தலைப்பிலான இயலில், "தேனுக்கு மலர் பாதுகாப்பு, மலருக்கு தென்றல் பாதுகாப்பு, நீருக்கு நிலம் பாதுகாப்பு, மனைவிக்கு கணவன் பாதுகாப்பு" என்று கூறுகின்றார்.

கணவன் மனைவியின் பிரமாணிக்கமின்மை பற்றிய இயலில், கைத்தொலைபேசி மூலம் இடம்பெறும் கள்ளக்காதல் பற்றி எடுத்துக்காட்டுகின்றார். "காதலுக்கும் கலியாணத்திற்கும், என்ன வித்தியாசம்? என்ற வினாவை எழுப்பி, "காதல் என்றால் பஸ்சில போறமாதிரி விருப்பமில்லாவிட்டால் எந்த நேரத்திலும் இறங்கிவிடலாம். ஆனால் கலியாணம் என்றால் பிளேனில் போறமாதிரி விருப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிட்டாலும் நினைத்தமாதிரி இறங்க முடியாது. போய்ச்சேரவேண்டிய இடம் வந்தால்தான் இறங்கலாம்'' என்று கூறுகின்றார். ''நம்பிக்கைத் துரோகத்தை ஆண்டவர் வெறுக்கின்றார்'' என்று இறைவார்த்தையின் மூலம் அடிகளார் வாசிப்போருக்கு நல்ல படிப்பினையை வழங்குகின்றார்.

''யார் அப்பா? என்பதுதான் பிரச்சினை!'' என்ற பகுதி நல்ல சுவாரசியமான நகைச்சுவை ஆகும். குடும்பத்தைக் குலைக்கும் பல்வேறு பேய்களை அடிகளார் இனம்காட்டுகின்றார், பிடிவாதப் பேய், பழிவாங்கும் பேய், சந்தேகப்பேய், குடிவெறிப் பேய் என பல பேய்களை உள்ளத்தைத் தொடும்வகையில் எடுத்துக்காட்டுகின்றார்.

''சந்தேகக் கோடு, அது சந்தோசக் கேடு'' என்ற வார்த்தைகள் சந்தேக மனப்பான்மையின் தீய விளைவைக் காட்டுகின்றது. சந்தேகத்தால் பிரிந்துள்ள குடும்பங்களுக்கு அடிகளார் நல்லதொரு பாடம் புகட்டுகின்றார். ''கறை கட்ட ஒருவன் பிறந்துவிட்டால் அந்தக் கண்ணகி வாழ்விலும் களங்கமுண்டு'' என்ற வரிகள் இத்தலைப்புக்கு வலுச்சேர்க்கின்றது.

நல்லதொரு விளம்பரத்தை நோக்குகின்றேன்.
*மது அருந்துங்கள்; சிகரட் புகையுங்கள்; பரிசுகளை வெல்லுங்கள்!*
*முதல் பரிசு – மரணம்*
*இரண்டாம் பரிசு – புற்றுநோய்*
*மூன்றாம் பரிசு – காசநோய்*
*ஆறுதல் பரிசு – பண நஸ்டம்''* என்கிறார்.

இயல் 9இல் மனித உயிரைப் பேணுவதில் குடும்பங்களின் பொறுப்பை கோடிட்டுக் காட்டுகின்றார். குறிப்பாகக் கருவழிப்பு தொடர்பாக இந்த இயலில் அடிகளார் ஆராய்கின்றார். விஞ்ஞான ரீதியான விளக்கங்களுடன் இந்தப் பிரச்சினையின் தாற்பரியத்தை சுட்டிக்காட்டுகின்றார்.

இயல் 10இல் ''இல்லற வாழ்வு ஒரு இறை அழைத்தல்'' என்று விளக்குகின்றார். விவிலியத்தில் வரும் இணைபிரியாத தம்பதிகளான, 'ஆதாம் - ஏவாள்', 'ஈசாக்கு –ரெபேக்கா', 'தோபியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– சாரா', 'பிரிஸ்கா –அக்கிலா', 'அனனியா – சப்பிரா' ஆகியோரை இன்றைய தம்பதிகளுக்கு முன்னுதாரணமாகக் காட்டுகின்றார்.

இயல் 11இல் தாய் தந்தையின் தனித்துவத்தை அழகாகச் சித்தரிக்கின்றார். ஒரு குடும்பத்தில் தாயின் வகிபாகம் என்ன? தந்தையின் வகிபாகம் என்ன? என்பதை எடுத்துக்காட்டுகின்றார். திருக்குடும்பம் இன்றைய குடும்பங்களுக்கு ஒரு மேல்வரிச்சட்டம் எனக் காட்டும் அடிகளார், "நசரேத்தூர் குடும்பம் என்பது நசரேத்தூர் பல்கலைக்கழகம்" என்று கூறுகின்றார்.

இயல் 12இல் பொறுப்புள்ள பெற்றோர் பற்றியும், இயல் 13இல் பணிவுள்ள பிள்ளைகள் பற்றியும் விளக்கியுரைக்கின்றார். "அறியாமையில் முதுமையில் இகழாதே", "தொப்புள் கொடி உறவா, தாலிக்கொடி உறவா?" என்ற பகுதியில், வீட்டில் தாலிக்கொடி உறவு (மனைவி) வந்ததும் தொப்புள் கொடி உறவு (தாயின் உறவு) தரையில் தள்ளப்பட்டு மிதிபடுகிறது என்ற வார்த்தைகள் இன்றைய யதார்த்தத்தை படம்பிடித்துக்காட்டுவதாக உள்ளது. மனைவியின் பேச்சைக்கேட்டு சில பிள்ளைகள் தங்களுடைய பெற்றோரை வீட்டைவிட்டே விரட்டுகின்றனர் என்பது இன்றைய யதார்த்தம் அல்லவா?

தங்களுடைய வீட்டிற்கு "அன்னை இல்லம்" என்று பெயர் சூட்டிவிட்டு, தங்களுடைய அன்னையை அனாதை இல்லத்துக்கோ, முதியோர் இல்லத்திற்கோ விரட்டிவிடுகின்றனர் என இன்றைய உண்மை நிலையை உள்ளத்தில் உறைக்கும்படி கூறுகின்றார். பெற்றோரை மதிப்பதால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் இந்நூலை வாசித்தபின்பாவது நமது பிள்ளைகளுக்குக் கிடைக்கட்டும்.

"சருகாகும் சகோதர உறவுகள்" இன்று மலிந்துவிட்ட நிலையில், இயல் 14இல் இதுபற்றி அடிகளார் ஆராய்கின்றார். ஊதாரிப்பிள்ளையின் உவமையில் வரும் மூத்த மகனை ஒரு மோசமான சகோதரனுக்கு உதாரணமாக அடிகளார் காட்டுகின்றார். "அடுத்தடுத்து வாழுகின்ற அந்நியர்கள் வேண்டாம்; அடுத்தவர்க்காய் வாழுகின்ற அண்ணன் தம்பிகள் வேண்டும்" என்று அடிக்கடி அடிகளார் தனது மறையுரைகளில் குறிப்பிடுவதை இங்கும் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 15இல் “முதுமை இறைவனின் ஆசிகளுள் ஒன்று”, “நரைமுடி மதிப்பிற்குரிய மணிமுடி” என்று கூறி, முதுமைக்கு மரியாதை காட்டவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். “வயதான ஒரு தாயின் மனக்குமுறல்” என்ற கவிதை என் மனதை ஆழமாகத் தொட்டது.

இயல் 16ல் “குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை”, “குடும்பம் மீட்பை வழங்கும் ஒரு சமூகம்”, “குடும்பம் அருள்வாழ்வுக்கு அழைக்கப்படுகிறது”, “குடும்பமும் செபமும்”, “குடும்பமும் அருளடையாளங்களும்”, “குடும்பம் பணிவாழ்வுக்கு அழைக்கப்படுகிறது”, “திருக்குடும்பமா? தெருக்குடும்பமா?” போன்ற விடயங்கள் மிகத்துல்லியமாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

தனது நிறைவுரையில், நல்ல குடும்பம் உடனே கனிதரும் என்று கூறி, நல்ல குடும்பத்தின் இலக்கணங்களை அழகாக வரையறுக்கின்றார். நல்ல குடும்பம் - அன்புக் களஞ்சியம், நன்மக்களை உருவாக்கும் பயிற்சிப்பாசறை, குணக்குன்றுகளின் பிறப்பிடம், ஒளிமயமான சமுதாயத்தின் அடித்தளம், திருச்சபையின் உயிர் அணு என்கிறார்.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, தமிழ் நேசன் அடிகளார் துறவியாக இருந்தாலும் குடும்பத்தைப்பற்றி விலாவாரியாக அறிந்தும் தெரிந்தும் வைத்திருக்கின்றார். அவருடைய அறிவாற்றலை ஒருமுகப்படுத்தி இந்நூலைப் படைத்துள்ளார். சமுதாயச் சூழலில் தான் கண்ட, கேட்ட, வாசித்த விடயங்களை நமது குடும்பங்கள் “வாழ்வுபெற வேண்டும்” என்ற உயரிய நோக்கோடு இங்கே அரிய விருந்தாகப் படைத்துள்ளர்.

அடிகளாரின் அறிவு, அனுபவம், தேடல் ஆகிய இம்மூன்றும் இணைந்து “உறவின் உரசல்கள்” என்ற அர்த்தமுள்ள பெயரில் ஒரு நூலாகப் பருணமித்துள்ளது. இதை வாசித்து வாழ்வாக்குவது ஒவ்வொருவரின் கடமையாகும். அடிகளாரின் பன்முகப் பணிகள் தொடரவும், ஆன்மீக, உடல், உள, பலத்துடன் வாழவும், இறைவேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | முகப்பு | I |
| 02. | நூல் முகம் | II |
| 03. | சமர்ப்பணம் | III |
| 04. | என்னுரை | IV |
| 05. | ஆசியுரை | VI |
| 06. | வாழ்த்துரை | VIII |
| 07. | அணிந்துரை | X |
| 08. | உள்ளடக்கம் | XVIII |
| இயல் | 1. குடும்ப வாழ்வு - இன்றைய யதார்த்தம் | 1 |
| இயல் | 2. குடும்பம் - சில கருத்துக்கள் | 7 |
| இயல் | 3. திருமணம் - சில தெளிவுகள் | 13 |
| இயல் | 4. வெற்றி நிறைந்த குடும்ப வாழ்வு | 21 |
| இயல் | 5. மாண்புடைய மனைவி | 29 |
| இயல் | 6. கண்ணியம் மிக்க கணவர் | 39 |
| இயல் | 7. கணவன் மனைவியின் பிரமாணிக்கமின்மை | 45 |
| இயல் | 8. குடும்பத்தைக் குலைக்கும் பேய்கள் | 55 |
| இயல் | 9. மனித உயிரும் குடும்பமும் | 65 |
| இயல் | 10. தடம்பதிக்கும் தம்பதியர் | 71 |
| இயல் | 11. தாய் தந்தையின் தனித்துவம் | 77 |
| இயல் | 12. பொறுப்புள்ள பெற்றோர் | 85 |
| இயல் | 13. பணிவுள்ள பிள்ளைகள் | 93 |
| இயல் | 14. சருகாகும் சகோதர உறவுகள் | 103 |
| இயல் | 15. முதுமை ஆசியா? சாபமா? | 109 |
| இயல் | 16. குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை | 115 |
| நிறைவுரை | | 122 |
| உசாத்துணை நூல்கள் | | 123 |
| ஆசிரியரின் பிற நூல்கள் | | 124 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 1

# குடும்ப வாழ்வு இன்றைய யதார்த்தம் !



## சவால்களைச் சந்திக்கும் குடும்பங்கள்

குடும்பங்கள் இன்று பல்வேறு சவால்களைச் சந்திக்கின்றன. பல குடும்பங்களில் உண்மையான அமைதி, மகிழ்ச்சி, நிம்மதி இல்லை. போரின் கொடுமையால் உயிர் - உடமை - உறவுகளை இழந்து ஆறாத்துயரில் மூழ்கியுள்ள குடும்பங்கள், உழைப்பாளிகளை இழந்த நிலையில் அன்றாட வாழ்க்கையோடு போராடும் குடும்பங்கள், குடிவெறிக்கு அடிமையாகிப்போன கணவன்மாரால் குட்டிச்சுவராக்கப் பட்ட குடும்பங்கள், பொருளாதார வறுமையால் - கடன் தொல்லைகளால் அவதிப்படும் குடும்பங்கள், வருத்தங்கள் வியாதிகளால் அலைக்கழிக்கப்படும் குடும்பங்கள், சொல்வழி கேட்காத பிள்ளைகளால் கவலையில் மூழ்கியிருக்கும் குடும்பங்கள், பிரமாணிக்கமற்ற வாழ்க்கைத்துணையினால் குழப்பத்தில் வாழும் குடும்பங்கள் என்று இத்தகைய குடும்பங்களின் பட்டியல் தொடரும்.

## வீட்டுக்கு வீடு வாசல்படி

வீட்டுக்கு வீடு வாசல்படி என்பதுபோல ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு வகையான பிரச்சினைகள்! வெளியே பார்த்தால் ஏதோ எல்லாம் சுமுகமாகப் போவதுபோல தெரியும். ஆனால் உள்ளே பல்வேறு எரிமலைகள் குமுறிக்கொண்டு இருக்கும். குழப்பம் நிறைந்த, சோகம் நிறைந்த சூழல்களே இன்று பொதுவாகக் குடும்பங்களில் காணப்படுகின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமை, பற்றாக்குறை, நுகர்வுக் கலாச்சாரம், போதைப் பழக்கங்கள், கடன் தொல்லை, பெற்றோர் பிள்ளைகளிடையே தலைமுறை இடைவெளி, புரிந்துகொள்ளாமை, நோய்கள், மருத்துவச் செலவுகள், உணவு, உடை, உறைவிடம் இல்லாமை, பொருளாதாரப் பிரச்சினைகள், தொடர்பு சாதனங்களின் தாக்கம், ஆடம்பரச் செலவு, குழந்தைகளின் கல்வி - வேலைவாய்ப்பு - திருமணம் - எதிர்கால வாழ்வு பற்றிய கவலை, உறவில் விரிசல்கள், ஆண் - பெண் சமத்துவமின்மை, கிறிஸ்தவ நம்பிக்கையில் தளர்ச்சி.... என இன்றைய குடும்பங்கள் சந்திக்கும் பிரச்சினைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

## சொர்க்கத்தில் நிச்சயம்; நரகத்தில் வாழ்வா?

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் திருமணங்கள் நரகத்தில்தான் வாழப்படுகின்னவா? என்ற நியாயமான கேள்விகள் இன்று எழ ஆரம்பித்துள்ளன.

ஒருநாள் ஒரு பெரியவர் வீதியில் வந்துகொண்டிருந்தார். ஒரு வீட்டிலே அரைக்கம்பத்தில் கொடி பறந்துகொண்டிருப்பதை அந்தப் பெரியவர் கண்டார். (அரைக்கம்பத்தில் கொடி பறக்கவிடப்படுவது கவலையின் - சோகத்தின் அடையாளம் என்பது நமக்குத் தெரியும்) அந்த வீட்டின் கேற்றைத் திறந்து உள்ளே சென்றார். அந்த வீட்டின் தலைவரிடம் (அப்பாவிடம்), "ஏன் உங்கள் வீட்டில் அரைக்கம்பத்தில் கொடியைப் பறக்கவிட்டிருக்கின்றீர்கள்?" என்று அந்தப் பெரியவர் கேட்டார். அதற்கு அந்த வீட்டின் தலைவர் சொன்னார், **"இன்று என்னுடைய திருமண நாள்!"**

## குடும்பத்தில் குழப்பங்கள்

இன்று குடும்பங்களில் குழப்பங்கள் மலிந்துவிட்டன. இன்று அனேக குடும்பங்கள் கவலையிலும் கண்ணீரிலும் தம் வாழ்நாட்களை நகர்த்துகின்றன. அமைதி இழந்த ஆன்மாக்களாக, உணர்விழந்த நடைபிணங்களாக குடும்பங்களில் மனிதர்கள் வாழ்கின்றனர். குடிவெறியும், விபச்சாரமும், சந்தேக மனப்பான்மைகளும், வைராக்கிய உணர்வுகளும் இன்று குடும்ப வாழ்வை பெரிதும் சீரழிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்கள் இன்று படிப்படியாக – ஆனால் படைபடையாக சிதைந்து வருகின்றன. குடும்பத்தின் அமைப்பும் வடிவமும் முதியோர் இல்லங்களாக, பெண்கள் விடுதிகளாக, அனாதை இல்லங்களாக மாறிவருகின்றது.

குடும்பங்கள் சிறப்பாக இருந்தால் சமூகக் குற்றங்கள் ஏது? அநாதை இல்லங்கள் ஏன்? முதியோர் இல்லங்கள் ஏன்? அன்னை தெரேசாக்கள் எதற்காக?

சிதையும் குடும்பங்களால் சிதறும் மனிதர்களைக் காக்க குடும்பம் சீராக இருக்க வேண்டும். இல்லறமாம் நல்லறத்திற்கு மூன்று முகங்கள் உண்டு. அவை: கணவரின் பாதுகாப்பு, மனைவியின் ஒத்துழைப்பு, குழந்தையின் பணிவு.

## குடு + இன்பம் = குடும்பம்

திருமணம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்ட நிறுவனம். குடும்பம் என்ற வார்த்தையைப் பிரித்துப் பொருள் கொண்டால் குடு + இன்பம் = குடும்பம் எனவும் சிலர் பொருள்கொள்வர். (இது தமிழ் இலக்கண சொல் வகுப்புக்குள் வராது.) அதாவது இன்பத்தையும் மகிழ்ச்சியையும் கொடுப்பது, சுரங்கமாகக் கொண்டிருப்பது குடும்பம். இன்றைய நாகரீக உலகில் நம்முடைய குடும்பங்கள் பல இந்த இன்பத்தை, மகிழ்ச்சியைத் தொலைத்துவிட்டு நிற்பது கண்கூடு.

கூட்டுக்குடும்பம் போய் தனிக்குடித்தனம், ஒரு வருமானம் போய் இரு வருமானம், பல குழந்தை போய் ஒரு குழந்தை, அதிகரிக்கும் விவாகரத்து, உயர்ந்துகொண்டிருக்கும் பிரமாணிக்கமின்மை, பெருகிக்கொண்டிருக்கும் குடிப்பழக்கம் என குடும்பங்களின் நிலைமைகள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கின்றன.

## உள்வாரிப் பிரிவுகள்

வெளிநாடுகளில் எடுத்ததெற்கெல்லாம் கணவனோ மனைவியோ விவாகரத்துக் கோருவார்கள். கணவன் குறட்டைவிட்டுத் தூங்கினால் மனைவி விவாகரத்துக் கேட்டு நீதிமன்றத்தில் நிற்பார். வெளிநாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதைப்போல் எடுத்ததற்கெல்லாம் விவாகரத்துக் கோருகின்ற நிலைப்பாடுகள் இங்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் இன்று நம்மத்தியிலே பல குடும்பங்கள் மனதளவில் பிரிந்து உடலளவில் ஒரே வீட்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற நிலைமையை நாம் பார்க்கின்றோம். இதை 'உள்வாரிப் பிரிவுகள்' (Internal Divorce) என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சேர்ந்து வாழ விருப்பம் இல்லை. ஆனால் ஊர் உலகம் என்ன சொல்லும் என்பதற்காக ஒரே வீட்டில் வேண்டா... வெறுப்போடு.... கணவனும் மனைவியும் வாழுகின்ற நிலைமைகளை சில குடும்பங்களில் பார்க்கின்றோம். சமூக அந்தஸ்துக்காக, பிள்ளைகளுக்காக, ஒரே வீட்டில் வாழுகின்ற நிலை! வாழ்க்கையில் பிடிப்பற்றவர்களாக, விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டவர்களாக இவர்கள் வாழ்கின்றனர். சில பெற்றோர் அடிக்கடி சொல்லுகின்ற வார்த்தை, "என்ன செய்வது பிள்ளைகளுக்காக வாழ வேண்டி உள்ளது!"

## ஆளுக்கொரு நீதி

கணவன் தனக்கொரு நீதி, மனைவிக்கொரு நீதி என்று வாழுகின்ற சூழ்நிலைகளைப் பார்க்கின்றோம். கணவன் அரசாங்க வேலை பார்ப்பவர். ஒருநாள் மனைவியிடம் சொல்கிறார், "இதோ பார், இந்த மாதம் , சம்பளக் காசு உனக்குத் தரமாட்டேன். சம்பளக் காசுக்குப் பதிலாக உனக்கு 100 முத்தம் தருகிறேன்". மனைவி சொன்னாள், "இந்த மாதம் சம்பளக் காசு தரமாட்டிங்கள். அதற்குப் பதிலாக 100 முத்தங்களைத் தரப்போறியள். சரி, உங்கட சம்பளக்காச வைச்சித்தான் நான் சில ஆக்களுக்குக் காசு குடுக்கவேணும். அப்படியெண்டா நீங்க தாற அந்த 100 முத்தங்களை நான் வாங்கி, நான் பணம் கொடுக்கவேண்டியவர்களுக்கு பிரிச்சுக் கொடுப்பதில் உங்களுக்கு ஆட்சேபனை இல்லையா.... ? மின்சாரக்காரனுக்கு 10 முத்தம் ! பலசரக்குக் கடைக்காரனுக்கு 15 முத்தம்! தொலைபேசிக் கட்டணக்காரனுக்கு 7 முத்தம்! வீட்டு வாடகைக்காரனுக்கு 12 முத்தம்! பால்காரனுக்கு 3 முத்தம் ...! என்று பிரித்துக்கொடுக்கிறேன். இதில் உங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால் நீங்கள் தரும் முத்தத்தை நான் வாங்கிக்கொள்கிறேன்." என்றாள். கணவன் திருதிருவென முழித்தான். "அடி பாவி....." என்றான் கணவன். தனக்கொரு நீதி, மனைவிக்கொரு நீதி என்று செயற்படக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைக்கிள் எல்லாம் கவரிங்ல கிடைக்காதே

நகரத்துக்குப்போய் வீடு திரும்பிய கணவன் தன் மனைவியைப் பார்த்து, "இந்தா பார், இண்டைக்கு உனக்கு வடிவான நெக்லஸ் ஒன்று வாங்கி வந்திருக்கிறேன்" என்று சொல்லி தான் கடையிலிருந்து வாங்கிவந்த நெக்லஸை மனைவியின் கையில் கொடுத்தான். நெக்லஸைக் கையில் வாங்கிய மனைவி சொன்னாள், "அப்பா இந்த நெக்லஸ் நல்ல வடிவா இருக்கு....! தாங் கியூ... நீங்க நெக்லஸ் வாங்கித் தந்தது எனக்கு நல்ல சந்தோசம். ஆனால் நான் இப்ப வேலைக்குப் போக ஆரம்பித்திருக்கிறபடியால் எனக்கு அவசரமா ஒரு லேடிஸ் சைக்கிள்தான் வேணும். இந்த நெக்லஸ் வாங்கிய நீங்க, ஒரு லேடிஸ் சைக்கிள் வாங்கியிருக்கலாம்தானே......" என்றாள். அப்போது கணவன் சொன்னான், "சைக்கிள் எல்லாம் இன்னும் கவரிங்ல வரயில்லையே..." என்று. அவன் வாங்கிவந்த நெக்லஸ் கவரிங் என்று அவனுக்குத்தான் தெரியும்..!

## அறிவியல் வளர்ச்சியும் குடும்ப வாழ்வும்

இன்றைய அறிவியல் வளர்ச்சி குடும்ப வாழ்வின் நிலையை எங்கேயோ கொண்டுபோய் விட்டுள்ளது. உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் இவற்றினால் திருமண உறவுகள் வியாபாரமாக்கப் படுகின்ற சூழ்நிலையில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். அன்பு உறவுகள் அர்த்தம் இழந்துபோகின்றன. ஆல்போல் தழைக்கவேண்டிய குடும்ப உறவுகள் சில நாட்களில் சிதறிச் சின்னாபின்னமாகின்றன. தாயை மதிக்காத மகனும், தந்தையால் பாதிக்கப்பட்ட மகளும், சொத்துக்காக ஒருவரை ஒருவர் கொலைசெய்கின்ற சகோதரர்களும் இன்றைய கணனி யுகத்தில் யதார்த்தங்களாக உள்ளனர்.

இன்றைய நுகர்வுக் கலாச்சாரச் சூழ்நிலையில் "பயன்படுத்து, தூக்கி எறி" (Use and Throw) என்ற பயன்பாட்டு அறநெறி உறவு வாழ்விலும் புகுந்துவிட்டது. 'தனித்திரு' அதுவே சிறந்த வாழ்வுக்கான வழி என்ற மனநிலை இன்று புதிய தலைமுறையினரிடம் உருவாக்கப்படுகின்றது. இவைகளின் விளைவு அதிகமான மணமுறிவுகள்! கலாச்சாரச் சீரழிவுகள்!

## தொழிநுட்பசாதனங்களில் அன்பை வழங்க முடியுமா?

கொம்பியூட்டரில் காதல் பண்ணி, இன்ரநெற்றில் கலியாணம் செய்து, குளோனிங்கில் குழந்தை பெற்றுக்கொள்கின்ற காலம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இயந்திரங்கள் மூலம் காதலிக்கலாம், கலியாணம் செய்துகொள்ளலாம், பிள்ளை பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலை இன்று தோன்றியுள்ளது. ஆனால் இன்றைய நவீன தொழில்நுட்ப சாதனங்களிடமிருந்து ஒருவர் அன்பை, அக்கறையை, கண்டிப்பைப் பெறமுடியுமா? குடும்பத்தில் இருந்துதான் ஒருவர் இவற்றைப் பெறமுடியும். புத்தகத்தில் இருந்து அறிவையும், ஊடகத்தில் இருந்து செய்தியையும், வலைத்தளத்திலிருந்து தகவல்களையும் பெறமுடியும். இப்படி இருக்கும்போது குடும்பத்தில் இருந்துதான் ஒருவர் அன்பையும், அக்கறையையும் பெறமுடியும்.

## வெற்றிகரமான திருமண வாழ்வு ஒரு சாதனையே!

"உமக்கு திருமணம் ஆகிவிட்டதா?" என்று ஒருவரைக் கேட்டதற்கு அவர், "அந்த விபத்து நடந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன" என்றார். பலருக்குத் திருமணம் என்பது எதிர்பாராமல் நிகழ்ந்துவிட்ட ஒரு விபத்து!

ஒரு மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டுவதற்குமுன் இழுத்து மூச்சுவிட்டார். ஏன்? என்று கேட்டதற்கு, "என் வாழ்வில் நான் சுதந்திரமாக விடும் கடைசி மூச்சு" என்றார். சிலருக்குத் திருமண வாழ்வு சுதந்திரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறது.

ஓர் இளைஞன் ஓர் இளம் பெண்ணைத் திருட்டுத்தனமாகப் பார்த்து இரசிப்பதுண்டு. இதைக் கண்ட ஊர்ப் பெரியவர்கள் அவன் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்யாவிட்டால், அவனுக்குப் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்கும் என்று பயமுறுத்தினர். அவனும் பயந்துகொண்டு அப்பெண்ணைத் திருமணம் செய்துகொண்டான். பத்து ஆண்டுகள் கழித்து அவன் கூறினான், "நான் இந்தப் பெண்ணை திருமணம் செய்யாமல் சிறைக்குச் சென்றிருந்தால், தற்போது விடுதலையடைந்திருப்பேன். அவ்வாறு செய்யாமல் அவளைத் திருமணம் செய்துகொண்டதால் நான் இப்போது ஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கின்றேன்".

திருமணத்தை ஒவ்வொருவரும் பார்க்கும் விதம் வித்தியாச மானது. எதிர்பாராத விபத்தாக, சுதந்திரத்திற்கான முற்றுப்புள்ளியாக, ஆயுள் தண்டனையாக இத்திருமணம் பார்க்கப்படுகின்றது. ஆனால் வெற்றிகரமான திருமண வாழ்வு என்பது ஒரு சாதனையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 2

# குடும்பம் சில கருத்துக்கள்



குடும்பம் என்பது மனிதத்தின் பிறப்பிடம். வாழ்க்கையை வளப்படுத்த வேண்டிய சிறப்பிடம். சமூக உணர்வைச் சக்தியுடைய தாக்கும் உறைவிடம். சமூக சமய நற்பண்புகளையும் ஒழுக்கத்தையும் ஆற்றுப்படுத்தும் அறிவகம். சமுதாயத்தின் சாரம். அன்பைப் பிறப்பிக்கும் சாதனம்.

குடும்பம்! மனிதகுல நாகரீகத்தின் உற்பத்தித் தளம். ஆரோக்கியமான பாலுறவிற்கு அங்கீகரிக்கப்பட்ட களம். குடும்பம் என்றால் என்ன? என்று ஐக்கிய நாடுகள் சபை இவ்வாறு வரையறை செய்கின்றது. "ஒத்த குறிக்கோளுடன் ஒரே வீட்டினுள் வசிக்கும் நபர்களின் இணைப்பே குடும்பம்".

## குடும்பம் - பாரம்பரியமான ஒரு அமைப்பு

குடும்பம் என்பது கலாகாலமாக இருந்துவருகின்ற மிகவும் பழமையான ஒரு அமைப்பு. இந்தக் குடும்பத்தில் இருந்துதான் ஒருவருக்குரிய அடையாளம் வருகின்றது. ஒரு தனிநபரை நாம் தனிநபராக மட்டும் பார்ப்பதில்லை. அத்தனிநபரை அவருடைய குடும்பப் பின்னணியில் வைத்துத்தான் பார்க்கின்றோம். உதாரணமாக, தூர இடத்தில் ஒரு ஆணுக்கோ அல்லது ஒரு பெண்ணுக்கோ திருமணம் பேசுகின்றபோது அந்நபரைப்பற்றி மட்டும் நாம் விசாரிப்பதில்லை. அவருடைய குடும்பம் எப்படிப்பட்டது? என்ற கேள்வியும் இயல்பாகவே எழுகின்றது.

இவர் யார்? இவர் எந்தக் குடும்பத்தில் இருந்து வருகிறார்? எப்படியான குடும்பப் பின்னணியில் இவர் வளர்க்கப்பட்டார்? போன்ற கேள்விகள் ஒரு குடும்பத்தை மையப்படுத்தியே எழுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பம் - சமுதாயத்தின் சாரம்

குடும்பம் என்ற அலகை – அமைப்பைச் சமுதாயத்தின் சாரம் எனலாம். இந்த உலகத்தில் பல அமைப்புக்கள், ஸ்தாபனங்கள், கழகங்கள், சங்கங்கள் இருக்கலாம். அனத்திற்கும் அடிப்படையான அமைப்பு குடும்பம். அனைவராலும் அறியப்பட்ட ஓர் உலகளாவிய அமைப்பு ஐ.நா. என்று சொல்லப்படுகின்ற ஐக்கிய நாடுகள் சபை. இதைவிட பலவித உலக மட்ட அமைப்புக்களைப் பார்க்கின்றோம். தேசிய ரீதியில், மாகாண ரீதியில், மாவட்ட ரீதியில், பிரதேச ரீதியில், கிராமிய ரீதியில் எனப் பல்வேறு மட்டங்களில் பல அமைப்புக்களைப் பார்க்கின்றோம். இவை அனைத்திற்கும் அடிப்படையான அமைப்பாக, சமுதாயத்தின் சாரமாக இருப்பது குடும்பம்.

## குடும்பம் - அன்பைப் பிறப்பிக்கும் சாதனம்

ஒரு மனிதன் முதன் முதலில் அன்பை, பாசத்தை, அக்கறையை அனுபவிப்பது குடும்பத்தில்தான். முதலில் தாயிடமிருந்தும் பின்னர் தந்தை, சகோதரங்கள், உற்றார் உறவினர் என அன்பை, பாசத்தை ஒரு குழந்தை அனுபவிக்கின்றது. அன்பைப் பெறுவதும் கொடுப்பதுமாகிய பரஸ்பர அன்புப் பரிமாற்றம் முதலில் குடும்பத்தில் இருந்தே ஆரம்பிக்கப்படுகின்றது.

குடும்பம் ஆள்நிலை சார்ந்த உறவுகளால் அமைந்துள்ளது. மனித அன்பு இறைமகன் இயேசுவின் மீட்புச் செயலால் மீட்படைந்தது. அதே அன்பு இன்றும் மீட்புப் பணியைத் தொடர்ந்து நிகழ்த்தும் கருவியாக உள்ளது. இந்த மனித அன்பின் தனித்தன்மையானதொரு வெளிப்பாடு திருமண அன்பாகும். அன்பாகவே இருக்கும் இறைவன் மனிதனைப் படைத்து, அன்புசெய்யம் ஆற்றலை அவனுக்கு அளித்து, அதைப் பாதுகாத்து வருகிறார். எனவே, அன்புதான் ஒவ்வொரு மனிதனுடைவும் அடிப்படையான அழைத்தலாக உள்ளது.

## குடும்பம் - அன்பின் பாசறை

குடும்பம் அன்பை வாழ்வாக்கும் நெருங்கிய உறவுச் சமூகமாக இருக்கின்றது. எனவே இக்குடும்பம் அன்பைப் பாதுகாக்கின்ற, அன்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கையிடுகின்ற, அன்பைப் பகிர்ந்துகொள்கின்ற பணிப்பொறுப்பைப் பெற்றுள்ளது. குடும்பம் அன்பின் பாசறை; பாசத்தின் பிறப்பிடம்; அன்பின் களஞ்சியம்.

“திருமணத்தில் கணவனுக்கும் மனைவிக்குமிடையே உள்ள அன்பு, அவ்வன்பிலிருந்து பிறந்து விரிந்து சென்று ஒரே குடும்பத்திற்கென வாழும் வெவ்வேறு உறுப்பினரை இணைக்கும் அன்பாகும். அதாவது, பெற்றோர், பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர் ஆகியோரிடையே நிலவும் அன்பு – உள்ளார்ந்த சக்திவாய்ந்ததொரு நிலையான தூண்டுதலால் உயிரோட்டம் பெற்று உந்தப்படுகிறது. இவ்வாறு குடும்பம் நாளும் விரிவான, ஆழமான உறவு ஒன்றிப்பை நோக்கி இட்டுச்செல்லப்படுகிறது. இந்த உறவு ஒன்றிப்புத்தான் திருமண, குடும்ப உறவுச் சமூகத்தின் அடித்தளமும் உயிருமாகும்” (குடும்ப வாழ்வு எண். 18 – 1994ஆம் ஆண்டு அகில உலகத் திருச்சபையில் கடைப்பிடிக்கப்பட்ட குடும்ப ஆண்டை முன்னிட்டு திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் ‘குடும்ப வாழ்வு’ என்ற தலைப்பில் எழுதிய அப்போஸ்தலிக்க மடல்)

## குடும்பம் - பாலுறவிற்கு அங்கீகரிக்கப்பட்ட களம்

குடும்பம்! மனிதகுல நாகரீகத்தின் உற்பத்தித்தளம் எனச் சொல்லப்படுகின்றது. திருமணத்திற்குப் புறம்பான உடலுறவு, பாலுறவு சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை, திருச்சபையால் அங்கீகரிக்கப்படுவதில்லை. அது ஒழுக்கக்கேடாகக் கருதப்படும். விபசாரமாக விமர்சிக்கப்படும். இந்நிலையில் ஆரோக்கியமான பாலுறவிற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு களமாகக் குடும்பம் விளங்குகின்றது.

## குடும்பம் - கடவுளின் படைக்கும் பணியில் பங்கேற்கின்றது

படைத்தவராம் இறைவனோடு ஒருங்கிணைந்து புதிய மனித உயிர்களைப் படைக்கும் பணி குடும்பத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. ஒரு குழந்தையை இந்த உலகில் பிறக்கவைப்பதன் மூலம் பெற்றோர் கடவுளுடைய படைப்புப் பணியில் பங்கேற்கின்றனர். மனித உயிர்களைப் பேணி வளர்த்து, அறநெறி – அருள்நெறி சார்ந்த உறவுகளை வழங்குவது குடும்பமாகும். உயிரைப் பிறப்பிக்கின்ற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த உயிரைப் பேணி வளர்க்கின்ற மாபெரும் பொறுப்பை குடும்பம் கொண்டிருக்கின்றது.

## குடும்பம் - ஆளுமைப் பண்புகள் தீர்மானிக்கப்படும் இடம்

ஒரு மனிதனுடைய ஆளுமைப் பண்புகளில் 85 வீதமானவை அவனுடைய முதல் ஐந்து வயதுக்குள் தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு குழந்தை பிறந்து வளர்ந்துவரும் குடும்பச் சூழ்நிலையில் இருந்து அந்தக் குழந்தை பார்ப்பது, கேட்பது, உணர்வது, அனுபவிப்பது எவையோ அவைதான் அந்தக் குழந்தையின் ஆளுமைப் பண்பாக மாறுகின்றது.

அந்தக் குழந்தை வளர்ந்து பெரியவனாக – பெரியவளாக மாறும்போது அந்த நபரில் காணப்படுகின்ற ஆளுமைப் பண்புகளில் 85 வீதமானவை அந்நபர் குழந்தையாக இருக்கும்போது (முதல் ஐந்து வயதிற்குள்) பெற்றுக்கொண்ட அனுபவங்களில் இருந்து உருவாகியவையே! மிகுதி 15 வீதமான ஆளுமைப் பண்புகள் அக்குழந்தை வளர்ந்து பெரியவராகியபின் தான் வாழும் சமூகத்தில் இருந்து பெற்றுக்கொண்டவை.

"குடும்பம் இல்லாவிட்டால் ஒருவர் முழுமை அடைய முடியாது" (Without having a family no person is complete") என்று சொல்லப்படுகின்ற வார்த்தைகள் எவ்வளவு முக்கியமானவை என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ள முடிகின்றது. இந்த முழுமை என்பது ஒரு நல்ல குடும்பப் பிணைப்பில் இருந்தே வருகின்றது.

## குடும்பம் - உறவால் இணைக்கப்பட்டவர்களின் உறைவிடம்

நாம் எல்லோருமே ஒரு குடும்பத்தில் பிறந்திருக்கின்றோம். இந்தக் குடும்பம் நம்மை ஒன்றாக இணைக்கின்றது, குடும்பம், பந்த பாசம், நேசம் என்று நாம் ஒரு குடும்பப் பிணைப்பிலே கட்டுண்டு இருக்கின்றோம். ஆங்கிலத்தில் 'House' என்ற வார்த்தையும் 'Home' என்ற வார்த்தையும் வித்தியாசமான அர்த்தம் கொண்டவை. ஆங்கிலத்தில் House என்ற சொல்லை தமிழில் நாம் 'வீடு' என்று அழைக்கலாம். Home என்ற வார்த்தையை 'இல்லம்' என்று அழைக்கலாம். வீடு என்பது வெறுமனே ஒரு கட்டிடத்தைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கட்டிடத்தில் சில நபர்கள் வாழ்வார்கள். அவர்களுக்கிடையே உறவோ நெருக்கமோ இருக்கவேண்டியதில்லை. ஆனால் இல்லம் என்பது வெறும் கட்டிடம் அல்ல, அங்கே வாழ்பவர்களுக்கிடையே உண்மையான அன்பு, அக்கறை, புரிந்துணர்வு, அன்னியோன்னியம் போன்றவை வாழ்வாக்கப்படும்.

## குடும்பம் - சமய நம்பிக்கையை விதைக்கும் நாற்று மேடை

ஒரு மனிதனுடைய இதயத்தில் இறைநம்பிக்கை முதன் முதலில் விதைக்கப்படும் நாற்றுமேடையாக குடும்பம் விளங்குகின்றது. இறைவனைப் பற்றிய, சமயத்தைப் பற்றிய அறிவை ஒரு குழந்தை முதன் முதலில் குடும்பத்தில் இருந்துதான் பெற்றுக்கொள்கின்றது.

ஒரு கத்தோலிக்க குழந்தையை ஒரு தாய் ஆலயத்திற்குக் கொண்டுபோய் ஆண்டவரின், அன்னை மரியாவின், புனிதர்களின் திருச்சுருபங்களைக் காண்பித்து இறைஉணர்வைப் பிஞ்சு உள்ளத்தில் பதிக்கின்றார். குழந்தையின் கையைப் பிடித்து “பிதாச் சுதன் …” அடையாளம்போடக் கற்றுக்கொடுக்கின்றார். ஆலயத்திற்குப் போகவும், செபிக்கவும் சொல்லிக்கொடுக்கின்றார். இவ்வாறு சமய நம்பிக்கைய விதைக்கும் நாற்றுமேடையாகக் குடும்பம் விளங்குகின்றது.

## குடும்பம் - ஒழுக்கத்தை ஆற்றுப்படுத்தும் அறிவகம்

ஒரு குழந்தையின் நற்பண்புகளையும், ஒழுக்கத்தையும் ஆற்றுப்படுத்தும் அறிவகமாக குடும்பம் திகழ்கின்றது. எதைச் செய்ய வேண்டும்? எதைச் செய்யக்கூடாது? என்பதை முதன் முதலில் குடும்பத்தில் இருந்துதான் ஒரு குழந்தை கற்றுக்கொள்கின்றது. சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை எவை? ஏற்றுக்கொள்ளப் படாதவை எவை? தக்கவை எவை? தகாதவை எவை? என்பதைக் குடும்பத்தில் இருந்துதான் ஒரு குழந்தை அறிந்துகொள்கிறது, தெரிந்துகொள்கிறது. நல்ல குடும்பத்தை பல்கலைக்கழகம் என்று சொல்வார்கள். இந்தப் பல்கலைக்கழகத்தில்தான், இந்த அறிவாலயத்தில்தான் ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் வாழ்க்கைக் கல்வியைக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பம் - பண்புகளின் பண்ணை வீடு

நற்பண்புகள், மதிப்பீடுகள் பயிராகும் மானிடப் பாத்தி குடும்பம். அதனால்தான் குடும்பத்தை பண்புகளின் பண்ணை வீடு என்கிறார்கள். ஒரு குழந்தை நற்பண்புகளை, மானிட மதிப்பீடுகளை முதன் முதலில் குடும்பத்தில் இருந்துதான் கற்றுக்கொள்கிறது; பெற்றுக்கொள்கிறது.

## குடும்பம் - சமுதாயத்தின் உயிர் அணு

ஒரு சமூகத்தில் பலதரப்பட்ட மனிதர்கள் வாழ்கிறார்கள். இவர்களைப் பெற்றுத் தருவது குடும்பம். மேலும் இவர்களை உருவாக்கித் தருவதும் குடும்பம்தான். பல குடும்பங்களைக் கொண்டதுதான் சமூகம். ஆதலால், குடும்பம் இல்லாமல் சமூகம் இல்லை. எனவே குடும்பத்தை சமூகத்தின் உயிரணு என்கிறோம். குடும்பம்தான் உலக சமுதாயத்தின் உயிர் அணு. குடும்பம் என்ற சமூகத்தில்தான் குழந்தைகள் ஒழுக்கநெறிகளைக் கற்று கடவுளையும், மனிதரையும் அன்புசெய்யப் பழகுகின்றனர். குடும்பம் என்ற சமுதாயத்தின் வழியாகவே மனிதர் உலக சமுதாயத்தில் நுழைகின்றனர்.

## குடும்பம் சமூக வாழ்வின் பள்ளிக்கூடம்

சமூக வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத பண்புகள் சில உள்ளன. இந்தப் பண்புகளை உருவாக்கிப் பயிற்றுவிக்கும் முதல் பள்ளிக்கூடம் குடும்பமே. அன்பு செய்தல், மன்னித்தல், ஏற்றுக்கொள்ளல், விட்டுக்கொடுத்தல், உதவிசெய்தல், பகிர்வு எண்ணம், ஒற்றுமை உணர்வு, உரையாடல், பொறுப்புணர்வு, சமூக உணர்வு, மனித மாண்பு, மனித உரிமைகள், நீதியின்பால் வேட்கை, கற்பில் வளர்ச்சி, உயிரின் மேன்மை போன்ற விடயங்களை முதலில் அறிந்துகொள்கின்ற முதல் பள்ளிக்கூடம் குடும்பமாகும். குடும்பத்தில் உருவாக்கப்படுகின்ற மதிப்பீடுகள்தான் சமூக வாழ்வைக் கட்டியெழுப்புகின்றன.

இப்பண்புகள், மதிப்பீடுகளை ஒருவர் கற்றுக்கொள்வதற்கு குடும்பத்தைவிடச் சிறந்த இடம் வேறு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 3

# திருமணம் சில தெளிவுகள்



## திருமணம் என்றால் என்ன?

திருமணம் என்றால் என்ன? என்ற கேள்வி இந்த இயலில் ஆராயப்படுகின்றது. இருமனங்கள் இணைந்து ஒருமனமாவதே திருமணம் என்று பொதுவாகச் சொல்லப்படுகின்றது. இங்கே இரண்டு மனங்களின் இணைப்பு, ஒருங்கிணைப்பு வலியுறுத்தப்படுகின்றது. திருமணம் பற்றிய பொதுவான பார்வைகளும், கிறிஸ்தவத் திருணம் பற்றிய சிறப்புக் கண்ணோட்டங்களும் இந்த இயலில் சுருக்கமாக நோக்கப்படுகின்றன.

## திருமணம் - கடவுளின் திட்டம்

திருமணம் என்பது மனிதத் திட்டமோ அல்லது மனித ஏற்பாடோ அல்ல. அது கடவுளின் திட்டம்! தாம் படைத்த அனைத்தையும் கடவுள் நோக்கினார். அவை எல்லாமே நன்றாய் இருந்தன. எல்லாம் நன்றாய் இருந்தன, ஆனால் ஒன்று மட்டும் நன்றாய் இருக்கவில்லை. எல்லாம் நிறைவுடையதாய் இருந்தது, ஆனால் ஒன்றுமட்டும் கடவுளுடைய பார்வையில் குறைவுடையதாய் இருந்து. என்ன அந்த நிறைவின்மை? என்ன அந்தக் குறை? அதுதான் ஆதாமின் தனிமை!

"மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று" (தொநூ 2:18) எனக் கண்ட கடவுள், "அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்" (தொநூ 2:18) எனக் கூறி கடவுள் ஆதாமின் விலா எலும்பிலிருந்து முதல் பெண்ணை உருவாக்கினார். ஆம், ஆதாமுக்குத் துணையாகக் கடவுள் ஏவாளைப் படைத்தார். ஆணுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையாகக் கடவுள் பெண்ணைப் படைத்தார். ஏவாளைக் கண்ட ஆதாம், "உன்னிலே என்னைக் கண்டேன்" என்ற மகிழ்ச்சியுடன், "இவள் என் எலும்பின் எலும்பு, சதையின் சதை" (தொநூ 2:23) என்று கூறுகிறார். இதுதான் உலகத்தில் தோன்றிய முதல் காதல் பாடலாக இருக்க முடியுமோ?

ஆகவே திருமணம் என்பது படைப்பின் தொடக்கத்தில் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு. இது இறைவனின் திட்டமே அன்றி மனிதனின் ஏற்பாடு அல்ல.

## திருமணம் - ஒப்பந்தமா? உடன்படிக்கையா?

திருமணம் மணமக்களிடையே நிகழும் வெறும் ஒப்பந்தமா (Contract)? அல்லது அவர்களிடையே உருவாகும் ஒரு நிலையான உடன்படிக்கையா (Covenant)? இதைப் பார்க்கும்போது பட்டிமன்ற விவாதத்திற்குரிய தலைப்பைப்போல் தோன்றலாம். இந்த ஆய்விற்கு முன் இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை அறிந்திருப்பது அவசியம்.

ஒப்பந்தம் வியாபார நோக்குடையது, உடன்படிக்கை தன்னலமற்றது. ஒப்பந்தம் இலாபநட்டக் கணக்குப் பார்ப்பது, உடன்படிக்கை புனிதமானது. ஒப்பந்தத்திற்கு மனித சாட்சியம் போதுமானது, உடன்படிக்கைக்கு இறை சாட்சியம் தேவை. ஒப்பந்தம் தற்காலிகமானது, உடன்படிக்கை நிரந்தரமானது. ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளலாம், ஆனால் உடன்படிக்கையை முறிக்க முடியாது. ஒப்பந்தம் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது, உடன்படிக்கை இறையியலை அடிப்படையாகக் கொண்டது.

கிறிஸ்துவத் திருமணங்கள் இறைவனைச் சாட்சியாக வைத்து, அவர் முன்னிலையில் ஏற்படுத்தப்படும் உடன்படிக்கை. எனவே, இறைவன் அவர்களது திருமண வாழ்வு முழுவதிலும் மூன்றாவது ஆளாக இருந்து அவர்களோடு பயணிக்கிறார்; அவர்களை வழிநடத்துகிறார். விவிலியத்தில் இறைவன் உடன்படிக்கையின் இறைவனாகவே காட்டப்படுகிறார். திருமண அன்பு பழைய ஏற்பாட்டில் இறைவனுக்கும் இஸ்ரயேல் மக்களுக்குமிடையே உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படிக்கையையும், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையேயுள்ள உடன்படிக்கையையும் வெளிப்படுத்துகிறது என்று அறுதியிட்டுக் கூறுகிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம்.

## திருமணம் - ஓர் அருள்சாதனம்

திருமணம் ஒரு அருள்சாதனம் (அருளடையாளம்). திருமணம் புனிதத்தின் வாய்க்கால். இந்த அருட்சாதனத்தின் மூலம் மணமக்கள் கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் இடையேயுள்ள உடன்படிக்கை அன்பிற்குச் சான்றுபகர்கின்றனர். ஒருவரை ஒருவர் அன்புசெய்யவும், ஒருவருக்கு ஒருவர் பிரமாணிக்கமாய் இருக்கவும், குழந்தைகளைப் பெற்று வளர்க்கவும் தேவையான அருளைத் திருமணத்தின் மூலம் பெறுகின்றனர்.

திருமணம் என்னும் அருள்சாதனத்தின் வழியாக மணமக்கள் இறைவனைச் சந்திக்கின்றனர். இறைவன் மணமக்கள் நடுவில் பிரசன்னமாயிருந்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்களைத் தம் வரங்களாலும் அருள்கொடைகளாலும் நிரப்புகிறார். அவர்களோடு என்றும் தங்கி வாழ்கிறார். இதனால் இறைவனுக்கும் மணமக்களுக்குமிடையே நெருக்கமான அன்புறவு ஏற்படுகிறது. இந்த அன்புறவே மணமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அன்புசெய்யவும் ஏற்றுக்கொள்ளவும் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாய் வாழவும் வழிவகுக்கின்றது. குழந்தைகளைக் கிறிஸ்துவ நம்பிக்கையிலும் ஒழுக்கத்திலும் வளர்க்கவும் தேவையான அருள்வரங்களைப் பெற்றுத்தருகின்றது.

திருமணத் திருவருட்சாதனத்தின் மறைபொருளையும், அதன் மேன்மையையும் பவுலடியார் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார் (வாசிக்கவும் : (எபே 5: 25 –32)

இதையே 2ஆம் வத்திக்கான் பொதுச்சங்கம் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றது. “கிறிஸ்துவ மணமக்கள் தங்களின் நிலைமையிலிருந்து எழும் கடமைகளையும் மாண்பையும் செயல்படுத்துவதற்குத் தனிப்பட்டதோர் அருளடையாளத்தின் வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுப்பெறுகின்றனர், ஒருவகையில் திருநிலைப்படுத்தப்படுகிறார்கள். இந்த அருளடையாளத்தின் ஆற்றலால் அவர்கள் தங்களின் திருமண மற்றும் குடும்பக் கடமைகளை நிறைவேற்றுகின்றனர், நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகியவற்றால் தங்களின் வாழ்வு முழுவதையும் நிறைத்து நிற்கும் கிறிஸ்துவின் ஆவியால் நிரப்பப்படுகின்றனர்." (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் : இன்றைய உலகில் திருச்சபை, எண் 48)

## திருமணம் - ஒரு மறைபொருள்

திருமணத்தைக் குறித்துப் பேசும் பவுலடியார், "இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது" (எபே. 5:32) என்கிறார். திருமணம் ஒரு மறைபொருள். எப்படியெனில், அது இறைவனின் மீட்புத் திட்டத்தை தன்னகத்தே உள்ளடக்கிய மாபெரும் மறையுண்மை. நற்கருணை மறைபொருளைப் போலவே திருமணமும் இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் ஆகிய முக்காலங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது.

கிறிஸ்துவின் மன்னிப்பையும், மீட்பையும் ஒருவர் ஒருவருக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் வழங்க அருள்வளம் அளிப்பதால் அது நிகழ்காலமாகிறது. மீட்பு நிகழ்ச்சியை, உடன்படிக்கையின் அன்பை நினைவுகூர்வதால் அது எதிர்காலமாகிறது. உலக முடிவில் வரவிருக்கும் கிறிஸது என்ற ஒப்புயர்வற்ற மணவாளனைச் சந்திக்கும் நம்பிக்கையை எடுத்துரைப்பதால் அது எதிர்காலமாகிறது. இவ்வாறு திருமணம் ஒரு மறைபொருளாக முக்காலங்களையும் அடக்கியுள்ளது. "இறைவனின் மீட்புத் திட்டத்தைத் தன்னகத்தே உள்ளடக்கிய மாபெரும் மறைபொருள் திருமணம்"

## தம்பதியர் - ஒருவரை ஒருவர் நிறைவுசெய்கின்றனர்

"கடவுள் மனிதரை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்" (தொ நூ 1:27) மனித இனம் ஆணுமில்லை, பெண்ணுமில்லை. மாறாக, ஆணும் பெண்ணும் சேர்ந்தது. ஆண்மையும், பெண்மையும் ஒன்றுக்கொன்று எதிரான சக்தி அல்ல. மாறாக, ஒன்றையொன்று நிறைவுசெய்யும் சக்தி. கடவுள் பெண்ணை ஆணுக்குத் துணையாக மட்டுமல்ல, இணையாகப் படைத்தார். எனவே, ஆணும் பெண்ணும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் சாயலையும் மாண்பையும் பொறுத்தமட்டில் சரிநிகரானவர்கள். அவாகளிடையே உயர்வு தாழ்வு என்ற வேறுபாடில்லை.

இருப்பினும், ஆண், பெண் இருவருமே பாலியல் அடிப்படையில் வேறுபட்ட குணநலன்களைக் கொண்டுள்ளனர். உண்மையில், மாறுபட்ட குணங்கள்தான் வாழ்க்கைக்குச் சுவை தந்து மெருகூட்டுகின்றன. எதிரும் புதிருமாக இரண்டு மாறுபட்ட சக்திகளைக் கொண்டுதான் இப்பிரபஞ்சமும் (Universe) மனித வாழ்வும் இயங்குகின்றன. அணுவை எடுத்துக்கொண்டால் அதில் புரொட்டான் - எலக்ட்ரான் எனப்படும் நேர் மின்துகள் - எதிர்மின்துகள் என்னும் இரண்டு வேறுபட்ட சக்திகள் தனித்தும் இணைந்தும் செயல்படுகின்றன. நேர்மின் சக்தியும் எதிர் மின்சக்தியும் இணைந்தே மின்சக்தி உருவாகிறது. மனித வாழ்விலும் ஆண் என்னும் ஜீவன் தனித்தும் இயங்குகின்றது. பெண் என்ற மற்றோர் ஜீவனுடன் இணைந்தும் இயங்குகிறது. இயற்கையில் நிகழ்வதே இல்வாழ்விலும் நிகழ்கிறது.

ஆண் உடல் வலிமை மிக்கவன், பெண்ணோ மெல்லிய இயல்புடையவள். ஆண் புறமுகத்தினன், பெண்ணோ அகமுகத்தினள். ஆண் உணர்ச்சி குன்றியவன், பெண்ணோ உணர்ச்சி மிக்கவள். ஆண் ஆட்கொள்ளும் தன்மையுடையவன், பெண்ணோ ஆட்படும் தன்மையுடையவள். ஆணை மூளை - அதாவது, அறிவு ஆட்சி செய்கிறது. பெண்ணை இதயம் - அதாவது அன்பு ஆட்சி செய்கிறது. ஆண் காம உணர்வு மிக்கவன், பெண் காதல் உணர்வு மிக்கவள்.

கணவன் தன் மனைவியின் உள்ளத்தை மகிழ்வித்து அவளது உடலைப் பெறவேண்டும். மனைவியோ தன் கணவரின் உடலை மகிழ்வித்து அவன் உள்ளத்தைப் பெறவேண்டும். தாம்பத்திய வாழ்வில் வெற்றியின் இரகசியம் இதுதான். இந்த இரகசியத்தைக் கண்டுபிடித்த தம்பதிகள் உண்மையில் பேறுபெற்றவர்கள்!

## திருமணத்தின் இரண்டு நோக்கங்கள்

திருமணத்தின் இரண்டு நோக்கங்கள், **ஒன்று மணமக்களின் நலன்** அதாவது தம்பதியரிடையே உருவாகும் நெருக்கமான உறவின் சங்கமம். **மற்றொன்று குழந்தைப்பேறும் குழந்தை வளர்ப்பும்.** இவ்விரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களுக்காகவே மனிதப் பாலியல்பு உள்ளது. இவ்விரு நோக்கங்கள்தான் திருமணத்தின் பண்பும் பயனுமாகும் என்று திருச்சபைச் சட்டம் தெளிவாகக் கூறியுள்ளது.

திருமண உடன்படிக்கையால் ஓர் ஆணும், ஒரு பெண்ணும் தங்கள் வாழ்வு முழுவதற்குமான ஓர் உறவு சமூகத்தைத் தங்களிடையே ஏற்படுத்துகின்றனர். இவ்வுடன்படிக்கை, தன் இயல்பிலேயே மணமக்களின் நலனுக்காகவும், மகப்பேறு மற்றும் குழந்தை வளர்ப்புக்காகவும் அமைந்துள்ளது (திருச்சபைச் சட்டம் 1055. ப. 1).

திருமணத்தின் பண்பையும், பயனையும், பாலியல்பின் நோக்கத்தையும் பற்றிச் சரியாக உணர்ந்து ஏற்றுக்கொள்பவர்கள் மோக பாவத்திலோ, விபசாரத்திலோ ஈடுபட மாட்டார்கள். அத்தகையவர்கள் தங்கள் பாலியல்பை ஒரு சுகமாகவே கருதுவர்.

## திருமணம் - உறவின் சங்கமம்

திருமணத்தின் முதலாவது நோக்கத்தை சற்று விளக்கமாக நோக்குவோம். "ஒரு காதலிக்கும் ஒரு நண்பனுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?" என்று ஓர் அறிஞரைக் கேட்டதற்கு அவர் கூறிய பதில் "உடைந்துபோன உள்ளத்தை நண்பனிடம் கொடு. அதை அவன் ஒட்டிக் கொடுப்பான். ஒரு முழுமையான உள்ளத்தை ஒரு காதலியிடம் கொடு. அதை அவள் சுக்குநூறாக உடைத்துக் கொடுப்பாள்." இங்கே காதலைவிட நட்பின் சிறப்பு சிலாகிக்கப் படுகின்றது.

தொடக்க நூலில் சொல்லப்பட்டுள்ள இறையியல் அடிப்படையில், திருமணத்தின் நோக்கம் பாலுறவு அல்ல. மாறாக, நட்புறவு. மனிதனுடைய தனிமை உணர்வைப் போக்குவதற்காகவே கடவுள் ஆணுக்குத் துணையாகப் பெண்ணைப் படைத்தார்.

"தோழா...தோழா..." என்ற திரைப்படப் பாடலில், 'காதல் காதல்தான், நட்பு நட்புதான். காதல் மாறலாம், நட்பு மாறாது' என்ற வரிகள் அழகான வரிகள். காதல் என்றும் நீடிக்காது, ஆனால் நட்பு என்றும் நீடிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுக் கிறிஸ்து தம் சீடர்களிடம், "உங்களை நான் நண்பர்கள் என்றேன். ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்" (யோவா 15:15) என்றார். நட்பின் இலக்கணம் நண்பர்களுடன் அனைத்தையும் பகிர்ந்துகொள்ளும் தன்மையாகும். கணவனும், மனைவியும் சிறந்த நண்பர்களாக மாறாதவரை அவர்களது மணவாழ்வு மனவளம் நிறைந்த வாழ்வாக அமையாது, மாறாக அது தோல்வியையே காணும்.

## பலுகிப் பெருகுங்கள்!

திருமணத்தின் இரண்டாவது நோக்கமும் ஆழமாகப் புரிந்துகொள்ளப்படவேண்டியது. கடவுள் மனிதருக்கு இரண்டு அடிப்படையான உணர்வுகளைக் கொடுத்தள்ளார். ஒன்று பசியுணர்வு, இது மனிதன் தன் உயிரைப் பாதுகாக்கத் தேவைப்படுகிறது. மற்றொன்று பாலுணர்வு, இது சமுதாயத்தைப் பாதுகாக்கத் தேவைப்படுகிறது. இவ்விரு உணர்வுகளும் இல்லையென்றால், தனிமனிதனும் அழிந்துவிடுவான். சமுதாயமும் இனப்பெருக்கின்றி அழிந்துபோகும்.

திருமணத்தின் மாபெரும் செல்வம் குழந்தைகள். பிறப்பினால் உலகம் அணிசெய்யப்படுகின்றது. "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்" (தொநூ 1:28) எனும் இறைவாக்கு முதல் பெற்றோர்களுக்கு கடவுள் வழங்கிய ஆசியும் ஆணையுமாகும். இந்த ஆணையை நிறைவேற்றும் பொறுப்புவாய்ந்த பெற்றோர்கள் கடவுளின் படைக்கும் அலுவலில் பங்கேற்பதுடன் கடவுளை மாட்சிமைப்படுத்துகின்றனர் என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகிறது (இன்றைய உலகில் திருச்சபை, எண். 50)

திருமண அன்பு இனப்பெருக்க வளத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. திருமண அன்பு கணவன், மனைவி ஆகிய இருவர் அடங்கிய ஒரு குறுகிய வட்டத்திற்குள் ஒடுங்கிவிடுவதில்லை. மாறாக, ஒரு புதிய உயிரை வரவேற்கும் திறந்த அன்பாக அமைந்துள்ளது. கணவன் தன்னையே மனைவிக்கும், மனைவி தன்னையே கணவனுக்கும் கையளிக்கும்போது இவர்களின் பரஸ்பரக் கையளிப்பின் கனிதான் குழந்தை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருமணம் என்பது வெறும் உடற் சேர்க்கையால் ஆனது அன்று. அது உணர்ச்சிகளின் சேர்க்கை. சிந்தனைகளின் சேர்க்கை. வாழ்க்கை வளங்களின் சேர்க்கை." என்கிறார் அறிஞர் காண்டேகர்.

## திருமணத் தயாரிப்பின் அவசியம்

திருமணத் தயாரிப்பின் அவசியத்தைப்பற்றித் திருத்தந்தை இரண்டாம் அருள்சின்னப்பர் குடும்ப வாழ்வு (Familiarizes Consortia) என்ற தனது திருமடலில் இவ்வாறு கூறுகின்றார்.

"கிறிஸ்தவ மணமக்கள், ஒருவகையில் திருநிலைப்படுத்தப் படுகின்றார்கள். குடும்ப வாழ்விற்கு நன்முறையில் தயாரிக்கப்பட்ட இளையோர், பொதுவாக மற்றவர்களைவிடவும் அதிக அளவு வெற்றியடைகிறார்கள் என்பது அனுபவத்தால் அறியும் உண்மை"

"திருமண வாழ்வு மற்றும் திருமண அன்பினால் உருவாகும் நெருங்கிய உறவுச் சமூகத்தை, படைப்பிற்குப்பின் கடவுள் ஏற்படுத்தினார். அதற்குரிய ஒழுங்குகளையும் அவரே அளித்தார். இந்த உறவுச் சமூகம், திருமண உடன்படிக்கையில், அதாவது ஆள்நிலை சார்ந்ததும் பின்வாங்கக்கூடாததுமான இசைவின்மேல் கட்டியெழுப்பப்படுகிறது.

கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையேயுள்ள அன்புநிறை உடன்படிக்கையின் உருவும் பங்கேற்புமாய் உள்ளதே திருமணம். இத்திருமணத்திலிருந்து கிறிஸ்தவக் குடும்பம் பிறக்கிறது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 4

# வெற்றி நிறைந்த குடும்ப வாழ்வு



திருமணத்தின் மேன்மையை, உயர்வைப்பற்றி பேசவிழைந்த பவுலடியார், "திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள். மணவறைப்படுக்கை மாசுறாமல் இருக்கட்டும்" (எபி 13:8) என உரைக்கின்றார். திருமணம் எதார்த்தமாக நடப்பது, ஆனால், திருமண வாழ்வு ஒரு சாதனை ஆகும்! (Marriage is an accident, but married life is an achievement!).

பலத்த எதிர்பார்ப்புகளோடு திருமண வாழ்க்கைக்குள் நுழைகின்ற பல ஆண்களும், பெண்களும் இறுதியில் ஏமாற்றத்தையும், விரக்தியையும் விலையாக வாங்கிக்கொள்கின்றனர். வாழ்வின் ஒரு கட்டத்தில் தமது எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகிவிட்டதை உணருகின்றனர். வெற்றி நிறைந்ததாக ஒரு திருமண வாழ்வு அமைய அடிப்படையாக இருக்கக்கூடிய சில விடயங்கள் இந்த இயலில் ஆராயப்படுகின்றன.

## ஒன்று மகிழ்ச்சி அல்லது தத்துவஞானி

சோக்ரட்டிஸ் உலகப் புகழ்பெற்ற ஒரு தத்துவஞானி! பலருடைய வாழ்வு வளம்பெற தத்துவங்கள் சொன்ன அவருடைய திருமண வாழ்வு அவருக்குச் சவாலானதாகவே இருந்தது. மணவாழ்வில் நடந்த கசப்பான சம்பவங்களைக்கொண்டு அவர் இப்படிச் சொன்னார், "தாராளமாகத் திருமணம் செய்துகொள். உனக்கு ஒரு நல்ல மனைவி அமைந்தால் நீ மகிழ்ச்சியாய் இருப்பாய். அப்படி அமையவில்லை என்றால் தத்துவ ஞானியாக மாறிவிடுவாய்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டபடி கழுத்தை நீட்டவோ, தாலிகட்டவோ கூடாது

திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர் என்பார்கள். எனவே வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் விடயத்தில் அவசரம் காட்டக்கூடாது. மிகுந்த கவனத்தோடும், பொறுமையோடும் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதில் எந்த அவசரத்திற்கும், நிர்ப்பந்தத்திற்கும் இடம்கொடுக்கக்கூடாது. பெற்றோர் மற்றோர் சொல்கிறார்கள் என்பதற்காக கழுத்தை நீட்டக்கூடாது அல்லது தாலி கட்டக்கூடாது. அன்புநிறைந்த, நல்ல விழுமியங்கள் கொண்ட, ஒருவரை வாழ்க்கை எனும் நீண்ட, நெடிய பயணத்தின் துணையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பொருத்தமான, நல்ல துணையை காதல் அடையாளம் காட்டலாம். அல்லது பெற்றோர், உற்றோர் மற்றோர் அடையாளம் காட்டலாம். எதுவாயினும் அவரைப்பற்றி அறிந்துகொண்டபிறகே, பேசிப் பழகித் தெரிந்துகொண்ட பிறகே திருமணத்திற்குச் சம்மதிக்க வேண்டும்.

## உதவியாய் இருப்பதும், உபத்திரம் தருவதும் குடும்பம்தான்

திருமணம் செய்துகொண்ட ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கையை உற்றுநோக்கும்போது சில உண்மைகளை அறிந்துகொள்ளலாம். சிலருக்கு எல்லாவற்றையும்விட அதிக நிம்மதியும் நிறைவும் தருவது அவர்களின் குடும்பம்தான். வேறுசிலருக்கு எல்லாவற்றையும்விட அதிக தொல்லையும் துன்பமும் தருவது அவர்களின் குடும்பம்தான்.

“குடும்பத்து உறவுகள் இல்லாவிட்டால் என்நிலை என்னவாகுமோ?” என எண்ணி மருளும் அளவுக்கு சிலரது குடும்ப உறவுகள் அன்பு மிகுந்தவையாய், சோர்ந்துபோகும் வேளையில் தாங்கிப் பிடிப்பவையாய், துன்பங்கள் தீண்டும்போது ஆதரவும் ஆறுதலும் தருபவையாய் அமைந்துள்ளன. நம்மைச் சுற்றி இருள்சூழும் வேளையில் ஒளி விளக்குகளாய் இக்குடும்ப உறவுகள் உள்ளன.

வேறு சில குடும்பங்களைச் சார்ந்தோரின் நிலை இதற்கு முற்றிலும் மாறானது. இவர்களது நிம்மதியைச் சீர்குலைத்து நாசமாக்கிய அனுபவங்களின் பின்னணியில் இருப்பது வேறு யாருமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவர்களின் குடும்பத்தினர்தான். "காயப்பட்டாலும் பறவாயில்லை, நிம்மதி வேண்டுமென்றால் இந்தத் திருமணச் சங்கிலியை உடைத்தாக வேண்டும். இந்தக் குடும்பம் என்னும் துயரச் சிறையில் இருந்து விடுதலை பெற்று நான் வெளியே பறந்தாக வேண்டும்" என்று ஏங்குகிற நிலையில் இவர்கள் உள்ளனர்.

## கணவன் மனைவியிடையே சமத்துவம்

"ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்துவந்தார். அப்பொழுது மனிதன், 'இதோ! இவள் என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள்'..... என்றான்." (தொநூல் 2:22- 23) மனிதன் தனியாக இருப்பது நன்றன்று எனக்கண்ட இறைவன் ஆதாமுக்குத் துணையாக ஏவாளைப் படைக்கின்றார். அதுவும் ஆதாமின் விலா எலும்பிலிருந்து ஏவாளைப் படைக்கின்றார்.

விலா எலும்பு இதயத்திற்கு அருகில் உள்ளது. அந்த இதயம் மனிதன் உயிர்வாழ இன்றியமையாதது. அதுபோன்று, ஆதாமின் வாழ்வுக்கு இதயம் போன்றவர் ஏவாள். இதயம் அன்பின் பிறப்பிடம். ஆதாமும் ஏவாளும் ஒருவரை ஒருவர் அன்புசெய்தனர். ஒருவரை ஒருவர் மதித்தனர், ஏற்றுக்கொண்டனர், ஒருவர் மற்றவர் நலனில் அக்கறைகொண்டு வாழ்ந்தனர். இவ்வாறு, முதல் குடும்பம் சமத்துவத்துக்கு எடுத்துக்காட்டான குடும்பமாக விளங்கியது. இதே சமத்துவ நிலை நம் குடும்பங்களிலும் நிலவவேண்டும்.

ஆணும் பெண்ணும் பலவிதங்களில் வேறுபட்டாலும் இருவருமே மனித மாண்புடையவர்கள். ஒரே இறைசாயலில் பங்கேற்பவர்கள். எனவே இருபாலருக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் அனைத்தும் மாறுபாடுகள் அன்று. மாறாக, ஒருவரை ஒருவர் நிறைவுசெய்யும் கூறுபாடுகளே. எனவே குடும்பத்தில் கணவனும் மனைவியும் எல்லாவிதத்திலும் சமத்துவத்துடன் வாழவேண்டும். குடும்பப் பொறுப்புக்களையும் கடமைகளையும் இருவரும் சேர்ந்து திட்டமிட்டுச் செயல்படுத்துவது சமத்துவ வாழ்விற்கு வழிவகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனோ அல்லது மனைவியோ ஒருவரை ஒருவர் அடக்கியாள முற்படுகின்றபோது அங்கே சமத்துவம் இல்லாதுபோவதுடன், குடும்ப அமைதியும் குலைந்துபோய்விடும். "அதிகாரம் பேச ஆரம்பிக்கும்போது உண்மை ஊமையாகி விடுகிது." என்ற வார்த்தையில் எவ்வளவு உண்மை இருக்கின்றது.

## திருமண வாழ்வினுடைய வெற்றியின் இரகசியம்

திருமண வாழ்வினுடைய வெற்றியின் இரகசியம் என்ன? சரியான பொருத்தமான நபரைத் தெரிந்தெடுப்பதில்தான் திருமண வாழ்வினுடைய வெற்றியின் இரகசியம் உள்ளது எனச் சிலர் நினைக்கலாம். ஓர் ஆண் தனக்கு ஏற்ற, பிடித்த, பொருத்தமான பெண்ணைத் தெரிந்தெடுப்பது - அல்லது ஒரு பெண் தனக்கு ஏற்ற, பிடித்த, பொருத்தமான ஆணைத் தெரிந்தெடுப்பது! இது எப்போதும் சாத்தியமானது அல்ல.

**எனவே திருமண வாழ்வினுடைய வெற்றியின் இரகசியம் என்பது சரியான நபரைத் தெரிந்தெடுப்பதில் அல்ல, மாறாக சரியான நபராக இருப்பதில் - சரியான நபராக வாழ்வதில்தான் உள்ளது.**

## ஒருவர் மற்றவரைக் குறித்த தவறான எதிர்பார்ப்பு

இன்று கணவன் மனைவிக்கிடையில் கருத்து முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றன. காரணம் ஒவ்வொருவரும் தம் எதிர்பார்ப்புக்கு ஏற்ற ஆளாக மற்றவர் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். பொதுவாக "நான் எதிர்பார்க்கும் ஆளாக நீ இருக்க வேண்டும்" என்றுதான் கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவரைக் குறித்து எதிர்பார்க்கின்றனர்.

இங்கேதான் பிரச்சினைக்கான அடித்தளம் உருவாகின்றது. நாம் எதிர்பார்க்கும் ஒருவராக மற்றவர் இருக்க முடியாது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த எதிர்பார்ப்புத்தான் குடும்பங்களுக்குள் குழப்பத்தையும், சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றது.

கணவன் மனைவியாக திருமண உறவில் இணைக்கப்பட்ட ஆணும் பெண்ணும் வெவ்வேறு குடும்பச் சூழ்நிலைகளில் பிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தவர்கள். அவர்கள் ஒவ்வொருவடைய சிந்தனை, விருப்பு, வெறுப்பு, ஆசைகள், கனவுகள் போன்றவை வித்தியாசப்படும். இரண்டு வெவ்வேறு ஆளுமைகள் திருமணத்தில் ஒன்றாக இணைக்கப்படும் போது அங்கே உணர்வுரீதியான முரண்பாடுகள் எழுவது இயல்பானது.

## "நீ நீயாக இரு". "நான் நானாக இருக்கிறேன்"

"நீ நீயாக இரு. உன்னை நீயாகவே ஏற்றுக்கொள்கிறேன்." அதுபோல் "நான் நானாக இருக்கின்றேன். என்னை நானாக நீ ஏற்றுக்கொள்" என்று சொல்லக்கூடிய ஒரு நிலை – மனப்பக்குவம், மனமுதிர்ச்ச்சி ஏற்படும்போது அந்தக் குடும்பத்தில் உண்மையான புரிந்துணர்வு, அன்பு, அமைதி ஏற்படும்.

## ஆரம்பம் முக்கியமல்ல, முடிவே முக்கியம்!

திருமண வாழ்வை எப்படி ஆரம்பிக்கின்றோம் என்பது முக்கியமல்ல, எப்படி வாழ்கின்றோம் என்பதுதான் முக்கியம். தம் திருமணம் தமது வாழ்வில் மறக்கமுடியாத அனுபவமாக இருக்கவேண்டும் என்பதற்காக சிலர் தம் திருமணங்களை வித்தியாசமான இடங்களில் நடத்துகின்றார்கள். சில காதல் ஜோடிகள் மலை உச்சியில் திருமணம் செய்கின்றார்கள், சிலர் கடலுக்கடியில் செய்கின்றார்கள், சிலர் ஆகாயத்தில் விமானத்தில் பறக்கும்போது செய்கின்றார்கள். இருந்தும் என்ன? பல திருமணங்கள் விவாகரத்தில்தான் முடிகின்றன.

இந்த நூற்றாண்டில் மிகவும் ஆடம்பரமாக நடத்தப்பட்ட திருமணம் பிரித்தானிய அரச குடும்பத்தினரின் சாள்ஸ் - டயானா திருமணம். அந்தத் திருமணம் விவாகரத்தில் - துன்பத்தில் - டயானாவின் மரணத்தில் முடிவடைந்ததை முழு உலகமுமே அறியும்.

## மனம்திறந்த உரையாடல் இல்லாமை

"பல திருமணங்கள் கொலைசெய்யப்படுகின்றன. வன்முறைகளால் அல்ல, மௌனம் காப்பதால்" ("More marriages are killed by silence than violence") என்று சொல்லப்படுகின்றது. பல குடும்பங்களில் பெற்றோர் ஒருபுறம்..., பிள்ளைகள் மறுபுறம் ....., எப்போதுமே பிஸியாகவே இருப்பார்கள். ஒரே பிஸி...! பிஸி...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் வேலை.... வேலை.... என்று ஓடிக்கொண்டிருப்பார்கள். பிள்ளைகள் படிப்பு..... படிப்பு.... என்று ஓடிக்கொண்டிருப்பார்கள்.

கணவன் மனைவி தமக்கிடையில், பெற்றோர் பிள்ளைகள் தமக்கிடையில் ஆற அமர இருந்து வெளிப்படையாகப் பேசுவதில்லை, உரையாடுவதில்லை. தமது உணர்வுகளை, எதிர்பார்ப்புக்களை, மனக்கவலைகளை வெளிப்படையாகச் சொல்வதில்லை. இதனால் ஒருவர் மற்றவருக்கிடையில் மனதளவில் இடைவெளிகள் அதிகரிக்க ஆரம்பிக்கின்றன. ஒவ்வொருவரும் தமது உணர்வுகளை, மனக்கவலைகளை மனதுக்குள் போட்டு அடக்கி அடக்கி வைப்பதனால் அந்த அடக்கிவைக்கப்பட்ட உணர்வுகள் காலப்போக்கில் விரிவடைந்து மன அழுத்தமாக (Depression) இன்னும் தலையிடி, அல்சர், கட்டிகள், நோவுகள் என பல்வேறு உடல் ரீதியான வருத்தங்களாக வெளிப்படுகின்றன.

## வேண்டாம் விவாகரத்துக்கள்!

ஒரே கிறிஸ்து, ஒரே திருச்சபை. அவ்வாறே ஒரே கணவன், ஒரே மனைவி. அதேபோன்று கிறிஸ்தவத் திருமணங்கள் முறிவுபடாத்தன்மையை உறுதிசெய்கின்றன. உண்மையான செல்லுநிலைத் திருமணம் (Valid Marriage) மணமக்களிடையே பாலுறவில் முழுமை அடைந்துவிட்டது என்றால், அதன்பின் அத்திருமணத்தை மணமக்களோ அல்லது நீதிமன்றமோ முறிக்க முடியாது.

கிறிஸ்தவத் திருமணங்கள் விவாகரத்துக்கு உட்பட்டவை அல்ல. மணமுறிவு (Divorce) என்பது கிறிஸ்தவ அகராதியில் இல்லை. உண்மைக்காதல் நிரந்தரமானது, நிபந்தனையற்றது, மாறாத்தன்மை உடையது. மரணம் மட்டுமே திருமணத் தளையை முறிக்கவல்லது என்றாலும் உண்மைக்காதல் மரணத்திற்குப் பின்னும் நீடிக்கிறது என்பது நம்மவரின் கருத்தாகும்.

## அடுத்த ஆண்டும் நீங்களே என் கணவராக வேண்டும்!

புதிதாகத் திருமணமான கணவனும் மனைவியும் ஆலயத்திற்குச் சென்று செபித்துக்கொண்டிருந்தார்கள். மனைவி மிகவும் உருக்கமாகச் செபித்தாள். ஆலயத்திற்கு வெளியில் வந்ததும் கணவன் கேட்டான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன அப்படி உருக்கமாகச் செபித்தாய்" என்று. மனைவி சொன்னாள், "அடுத்த ஆண்டும் நீங்களே என் கணவராக இருக்க வேண்டும் என்றுதான்!" 'அடுத்த ஜென்மத்திலும் நீங்களே எனக்குக் கணவராக வாய்க்க வேண்டும்' என்ற நிலை மாறி, அடுத்த ஆண்டு என்னும் அளவிற்கு மணவாழ்வின் ஆயுள்காலம் குறுகிவிட்ட பரிதாப சூழ்நிலை!

## பிரமாணிக்கமான நீண்டகால வாழ்க்கை சாத்தியமே

இன்றும்கூட பல தம்பதிகள் ஒருவர் ஒருவருக்குப் பிரமாணிக்கமாக நீண்ட காலம் வாழ்கின்றார்கள். "62 ஆண்டுகள் வாழ்ந்த தம்பதி மரணத்திலும் பிரியவில்லை" என்ற தலைப்பில் அண்மையில் பத்திரிகையில் வெளிவந்த செய்தி பலருடைய கவனத்தையும் ஈர்த்தது.

தோபியா தம் மனைவி சாராவோடு திருமண வாழ்வைத் தொடங்கியபோது முதுமை அடையும்வரை இணைபிரியாது வாழும் வரத்தையே வேண்டினார். "இறைவா, இப்பொழுது என் உறவினள் இவளை நான் மனைவியாக ஏற்றுக்கொள்வது இச்சையின் பொருட்டன்று. நேர்மையான நோக்கத்தோடுதான். என்மீதும் இவள்மீதும் இரக்கம் காட்டும்; நாங்கள் இருவரும் முதுமை அடையும்வரை இணைபிரியாது வாழச்செய்யும்" (தோபி 9:7).

## உன்னைப்போல் உனது துணையையும் நேசி

நமது நலனில், மகிழ்வில், முன்னேற்றத்தில் நாம் காட்டும் அக்கறைக்குச் சமமாக மற்றவர் நலனிலும் மகிழ்விலும் முன்னேற்றத்திலும் அக்கறை காட்டவேண்டும். இதற்குப் பெயர்தான் உண்மையான அன்பு. கணவனும் மனைவியும் தமக்கிடையில் உள்ள உறவுதான் உலகில் உள்ள மற்ற எல்லா உறவுகளிலும் முதன்மையானது என்பதை செயல்களால் உறுதிப்படுத்த வேண்டும். வேறு எந்த உறவும் தமது திருமண உறவுக்குத் தடையாய் - இடையூறாய் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மனம்விட்டு எல்லாவற்றையும்பற்றிப் பேசவேண்டும். துணைவர் பேசுவதைக் கவனமாகக் கேட்கவேண்டும். எல்லாவற்றையும் நமது இடத்தில் நின்று, நமது கோணத்தில் நின்று பார்க்க முயல்வது இயல்புதான். ஆனால் நமது துணையைப் புரிந்துகொள்ள அவரது கோணத்திலிருந்து பார்க்க முயல்வது மிகவும் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடலும் உள்ளமும்

உறவில் உள்ளத்திற்கும் உடலுக்கும் உள்ள பங்கைத் தொடக்கத்திலிருந்து புரிந்துகொள்ளவேண்டும். உள்ளத்தை மட்டும் அங்கீகரித்து உடலைப் புறக்கணிப்பவர்கள் மனிதராக இருந்துகொண்டு ஆவிகளைப்போல வாழத் தேடுபவர்கள். உடலை மட்டும் தேடி உள்ளத்தைப் புறக்கணிப்பவர்கள் இருக்கவேண்டிய இடம் வீடு அல்ல அது காடு, விலங்குகள் வாழும் காடு.

திருமண வாழ்வில் உடலுறவுக்குள்ள இடத்தை மிகைப் படுத்துகிற மனவிகாரமும், அதனை அலட்சியம் செய்கிற முட்டாள்தனமும் ஆபத்தானவை என்பதை தம்பதியர் புரிந்துகொள்ளவேண்டும். இயல்பான காமத்தின் தேடலாக மட்டும் இது இல்லாமல் அன்பின் ஆனந்தக் கொண்டாட்டமாய் அமையுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

## திருமணத்திற்குப் பின்னரும் காதல் செய்வீர்

திருமணத்திற்கு முன்னர் காதலிக்கும் காலத்தில் பெற்றோருக்கு, பெரியோருக்குத் தெரியாமல் ஒழித்து ஒழித்துக் காதலித்தவர்கள், மணிக்கணக்காக நேரிலும், தொலைபேசியிலும் பேசிக்கொண்டிருந் தவர்கள், திருமணம் முடித்தபின்னர் காதலுக்கு முற்றுப்புள்ளிவைத்து வேலை, குழந்தைகள் என்று காலில் சில்லுப்பூட்டிக்கொண்டு ஓடுகின்றனர். திருமணத்திற்குப் பின்னரும் கணவனும் மனைவியும் ஒருவர் ஒருவரைக் காதலிக்க வேண்டும்.

இந்தியாவைச் சேர்ந்த பிரபல முன்னாள் உச்சமன்ற நீதிபதி எ.பி.எஸ். அய்யர் அவர்கள் பாலிய மணம் முடித்தவர். தன் இளம் மனைவியை அழைத்துக் கொண்டு வெளிநாட்டுப் பயணம் சென்றிருந்தபோது வெளிநாட்டினர் இவர்களின் வயது வித்தியாசத்தைப் பார்த்து, "உங்கள் திருமணம் காதல் திருமணமா" என்று வினவினர். அதற்கு, நீதிபதி "இல்லை" என்றார். "எப்படி உங்களால் காதலிக்காமல் திருமணம் செய்துகொள்ள முடிகிறது" என்று கேட்டபோது, நீதிபதி கூறினார். "உங்கள் காதல், திருமணத்தோடு நிறைவடைகிறது. எங்கள் காதல், திருமணத்திற்குப் பின்தான் ஆரம்பமாகிறது" இந்தக் காதல்தான் திருமண வாழ்வின் ஆணிவேர்.

"திருமணத்தைப் புனிதமாக்குவது காதல் ஒன்றுதான்" என்கிறார் ரஸ்ய நாவலாசிரியர் லியோ ரோல்ரோய் (Leo Tolstoy).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 5

# மாண்புடைய மனைவி



மனைவி என்ற வகிபாகத்தை 'வாழ்க்கைத் துணைவி' என்ற அழகான பெயரால் தமிழில் அழைக்கின்றோம். வாழ்க்கைக்குத் துணையாக இருப்பவள் - அதாவது உதவியாக இருப்பவள் - உபத்திரமாக இருப்பவள் அல்ல!

## மனைவி ஒரு துணைவி

மனிதருக்குத் துணையாக இருக்க இறைவன் உருவாக்கியவரே மனைவி. விவிலியத்தின் தொடக்கநூலிலேயே நாம் இதைப் பார்க்கிறோம். "மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று. அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்" (தொநூ 2:18) என்றுதான் ஆண்டவராகிய கடவுள் ஏவாளை, முதல் மனைவியை உருவாக்கினார். "மனையை அடைகிறவன் உயர்ந்த உடைமையைப் பெறுகிறான். தனக்கு ஏற்ற துணையையும் ஆதரவுதரும் துணையையும் அடைகிறான்" (36:24) என்கிறது சீராக்கின் ஞானம்.

பெண் அவளது கணவனோடு சரிநிகர் மாண்பும் கடமையும் உரிமையும் உடையவள் என்றாலும் பாரதியின் கூற்றுப்படி, மனைவி கணவனுடைய எல்லா அலுவல்களிலும் பொறுப்புகளிலும் அவனுக்கு உற்ற துணையாக இருந்து, இல்லறத்தை நல்லறமாக மலரச் செய்தல் வேண்டும்!

**"காதலொருவனைக் கைப்பிடித்தே – அவன்**
**காரியம் யாவினும் கை கொடுத்து**
**மாதர் தங்கள் பழமையைக் காட்டிலும்**
**மாட்சி பெறச்செய்து வாழ்வமடி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல மனைவி ஆண்டவரின் கொடை

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்!" என்பது பிரபலமான திரைப்படப் பாடல். (கணவன் அமைவதும் அவ்வாறே என்பதுவும் உண்மையே.) இப்பாடலை எழுதியவர் இவ்வரிகளை விவிலியத்திலிருந்துதான் எடுத்தாரோ என்னவோ! "நல்ல மனைவியே ஒருவனுக்குக் கிடைக்கும் நல்ல சொத்து. ஆண்டவருக்கு அஞ்சிநடப்போர் பெறும் செல்வங்களுள் ஒன்றாக அவளும் அருளப்படுவாள்" என்கிறது சீராக்கின் ஞானம் (26:3). இதே கருத்தைத் திருப்பாடல்களின் ஆசிரியரும் எதிரொலிக்கிறார். ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பெறும் பேறுகளுள் ஒன்று அவர் இல்லத்தில் அவர் துணைவியார் "கனிதரும் திராட்சைக் கொடிபோல இருப்பது" (திபா 128:1-3).

நல்ல மனைவி கணவனுக்கு நல்ல துணைவி மட்டுமல்ல, அவனது வாழ்வை நிறைவுசெய்யும் பங்காளராகவும் விளங்குகிறார். "பண்புள்ள மனைவி தன் கணவனுக்கு மணிமுடி" என்று பெருமிதப்படுகிறது நீதிமொழிகள் நூல் (நீ.மொ12:4). "மனைவியை அடைகிறவன் நலமடைவான், அவன் ஆண்டவரது நல்லாசியையும் பெறுவான்" (நீ.மொ 18:22) என்றும் அதே நூல் கூறுகிறது.

"வீடும் சொத்தும் ஒருவனுக்கு வழிவழிச் சொத்தாய் வரலாம், ஆனால், விவேகமுள்ள மனைவியோ ஆண்டவர் அளிக்கும் கொடை." (நீதிமொழிகள் 19:14) "பண்புள்ள மனைவி தன் கணவனுக்கு மணி முடியாவாள்." (நீமொ 12:4). "அமைதியான மனைவி ஆண்டவர் அளித்த கொடை." (சீரா 26:14).

"நல்ல மனைவியைக் கண்டுபிடிக்கிறவன் நன்மையைக் கண்டுபிடிக்கிறான். அது கடவுள் கொடுத்த மகிழ்ச்சிக்குரிய கொடையாகும்" (நீமொ 18:22). வீடும் செல்வமும் தாய், தந்தையால் தரப்படுகின்றன. ஆனால், தக்க விவேகமுள்ள மனைவி ஆண்டவராலேயே தரப்படுகின்றாள் (நீமொ 19:14).

## மனைக்கு விளக்கு மனைவி

இல்வாழ்க்கையின் வெற்றி தம்பதியர் இருவரையும் சார்ந்தது எனினும், குடும்பத்தின் விளக்காக அமைகின்றவள் மனைவி என்பதை யாரும் மறுக்க இயலாது. 'மனைவி' என்ற சொல்லுக்கு அறிஞர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் விளக்கம்: 'மனை' என்றால் 'வீடு', 'வி' என்றால் 'விளக்கு'. வீட்டிற்கு விளக்காக இருப்பவள் மனைவி. 'மனைக்கு விளக்கு' என்பதுதான் குறுகி 'மனைவி' என்றானது என்கிறார்கள்.

'மனைவி நல்லவளாக அமைந்துவிட்டால், அந்த வீட்டிலே ஒன்றுமே இல்லை என்றாலும் எல்லாமே இருக்கிறது. மாறாக, மனைவி நல்லவளாக வாய்க்கவில்லை என்றால் அந்த வீட்டிலே மற்ற எல்லாம் இருந்தாலும் ஒன்றுமே இல்லை' என்கிறார் பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர்.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை.**

பெரிய மரத்தை மண்ணுக்குள் இருந்து பிறர் கண்ணுக்குத் தெரியாமல் தாங்குகிறது வேர். அதுபோல் வீட்டிற்குள் இருந்து, வெளியுலகத்திற்குத் தெரியாமல் குடும்பம் என்ற பெரிய மரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறவள்தான் மனைவி. எனவேதான், மனைவி அமைவது இறைவனின் வரமாகிறது. ஆவதும் அவளாலே, அழிவதும் அவளாலேதான் (இன்பம் ஆவதும் பெண்ணாலே, துன்பம் அழிவதும் பெண்ணாலே).

## ஆக்க சக்தியும் அழிவுச் சக்தியும் அவளே!

ஒரு பெண் விரும்பினால் தொட்டதையெல்லாம் பொன்னாக்கலாம் அல்லது மண்ணாக்கலாம். ஒரு பெண் நினைத்தால் தாயாகலாம் அல்லது பேயாகலாம். ஒரு பெண்ணால் வீட்டை ஒளிமயமாக்க முடியும் அல்லது இருள்மயமாக்க முடியும். ஏற்றத்திற்கு காரணமாய் இருப்பவளும் பெண், ஏமாற்றதிற்கு காரணமாய் இருப்பவளும் பெண். எழுச்சியைத் தருகின்றவளும் பெண், வீழ்ச்சியைத் தருகின்றவளும் பெண். ஆணைத் தூங்கவைத்துப் பார்க்கிறவளும் பெண், அவனை ஏங்கவைத்துப் பார்க்கிறவளும் பெண். ஆக்கசக்தியும் அவளே, அழிவுச் சக்தியும் அவளே.

## தலைமுடி நரைக்காததன் இரகசியம்

பழந்தமிழகத்திலே பிசிராந்தையார் என்ற புலவர் ஒருவர் இருந்தார். அவர் வயதாகி, மூப்படைந்த நிலையிலும் அவர் தலைமுடி ஒன்றுகூட நரைக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று அவரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதற்கு அவர் கூறிய பதில், "எனக்கு வாய்த்த மனைவி நல்லவள்". அதைப்போலவே, தன் பிள்ளைகளும் மனைவியும் மக்களும் நல்லவர்களாக அமைந்துவிட்டதால் அவருக்கு கவலை என்பதே இல்லை. கவலை இல்லாததால் தலை நரைக்கவில்லை.

வள்ளுவரின் மனைவி வாசுகி இறந்தபின் வள்ளுவரின் கண்கள் உறக்கத்தை மறந்தன என்று சொல்லப்படுகின்றது.

இவையெல்லாம் பழங்காலத்துக் கதைகள்! இப்போதெல்லாம் என்ன நடக்கிறது?

## அவ்வளவு பாசமா?

ஒரு மனைவி தன் கணவரிடம்; "நீங்க சாப்பிட்ட தட்டிலேயே நானும் சாப்பிடுகிறேன். நீங்க தேநீர் குடிச்ச டம்ளர்லேயே நானும் தேனீர் குடிக்கிறேன்" என்றாள். "என்மேல அவ்வளவு பாசமா, இல்லை அவ்வளவு காதலா" என்று கணவர் கேட்டார். "இல்லை, இரண்டு பாத்திரங்களைக் கழுவுவதற்கு எனக்கு ரொம்பக் கஸ்ரமா இருக்கு. ஒரு பாத்திரமாக இருந்தால் கொஞ்சம் பரவாயில்லை. அதனால்தான் சொன்னேன்" என்றாள் மனைவி!

## கணவருக்குப் பணிந்திருங்கள்

மனைவி கணவனுக்குப் பணிந்திருக்க வேண்டும் என்பதை திருவிவிலியம் பல இடங்களில் வலியுறுத்துகின்றது. "திருமணமான பெண்களே உங்கள் கணவருக்குப் பணிந்திருங்கள். ஆண்டவருக்குள் வாழ்வோருக்கு இதுவே தகும்." (கொலோ 3:18) "திருமணமான பெண்களே, ஆண்டவருக்குப் பணிந்திருப்பதுபோல உங்கள் கணவருக்குப் பணிந்திருங்கள். ஏனெனில் கிறிஸ்து திருச்சபைக்கு தலையாய் இருப்பதுபோல கணவர் மனைவிக்குத் தலையாய் இருக்கிறார். கிறிஸ்துவே திருச்சபையாகிய உடலின் மீட்பர். திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பதுபோல மனைவியரும் தங்கள் கணவருக்கு அனைத்திலும் பணிந்திருக்க வேண்டும்." (எபே 5: 22)

அன்பும், பணிவும் மனைவியரின் கடமை என்று பவுல், பேதுரு இருவருமே கூறுகின்றனர். "இளம் பெண்கள் தங்கள் கணவரிடமும் பிள்ளைகளிடமும் அன்புகாட்டி தங்கள் கணவருக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிந்திருப்பார்கள்." (தீத் 2:4-5) "திருமணமான பெண்களே, உங்கள் கணவருக்குப் பணிந்திருங்கள்" (1 பேது 3:1)

## பணிந்திருப்பது குனித்திருப்பது அல்ல

'பணிந்திருங்கள்' என்றுதான் திருவிவிலியம் சொல்கிறதே அன்றி 'குனிந்திருங்கள்' என்று சொல்லவில்லை.

ஒரு பெண் கவிஞர் இப்படி எழுதுகின்றார். "தாலி கட்டும்பொழுது குனிந்த கழுத்து இன்னும் நிமிரவே இல்லை!" இப்பெண் கவிஞர் எதைச் சொல்ல வருகின்றார்? திருமண நாள் அன்றிலிருந்து தான் அடிமையாகிவிட்டேன் என்று சொல்கின்றார். 'பணிந்திருங்கள்' என்ற ஆண்டவரின் வார்த்தை பெண் அடிமைத்தனத்தைப்பற்றிக் கூறவில்லை. மறாகக் கணவனோடு ஒத்துழைப்பதைப் பற்றியே இங்கு வலியுறுத்துகின்றது.

## இன்று யார் யாருக்குப் பயப்படுகிறார்கள்?

அம்மா ஒருநாள் வீட்டில் உள்ள குழந்தைகள் நால்வருக்கும் ஒரு போட்டி வைத்தார். "நான் சொல்வதைக் கேட்டு, சத்தம் போடாமல் எனக்குப் பயந்து நடப்பவருக்கு ஒரு விலை உயர்ந்த பரிசு தருவேன்" என்றார். உடனே இளைய மகன் சொன்னான், "அம்மா, யார் அந்தப் பரிசைப் பெறுவார் என்று எனக்குத் தெரியும்." அம்மா 'யார்?' என்று கேட்டார். அதற்கு மகன் சொன்னான், 'அப்பாதான் அந்தப் பரிசைப் பெறுவார்"

## அம்மாதான் பெரியவர்

இரண்டு சிறுவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது ஒருவன் மற்றவனிடம், "வீட்டிலே யார் பெரியவர், அப்பாவா அல்லது அம்மாவா" என்று கேட்டான். அதற்கு மற்றவன், "நிச்சயமாக அம்மாதான் பெரியவங்க! ஏனென்றால், எங்கள் அப்பா தனது தொழிற்சாலையிலே 100 பேரை அடக்கி ஆள்கிறார். ஆனால் வீட்டிலே எங்க அம்மா அந்த அப்பாவையே அடக்கி ஆளுகிறாங்க" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயப்படாதைங்க .. எதுவும் செய்யமாட்டன் ...!

சில கணவர்கள் தம் மனைவியருக்கு பயப்படுகின்றார்கள். அதேவேளை தம் மனைவியை எப்படி சமாளிப்பது என்பதையும் அறிந்துவைத்திருக்கிறார்கள்.

ஒரு கணவன் தன் மனைவிக்குக் கைத்தொலைபேசியில் இருந்து ஒரு குறுஞ்செய்தி அனுப்புகிறார். "என் வாழ்க்கையை வசந்தமாக்கியதில் உன் பங்கு அதிகம். இன்றைக்கு நான் இருக்கும் இந்த நல்ல நிலைக்கு நீ மட்டுமே காரணம். என் அன்பே ....! என் வாழ்வில் நீ வந்தது அதிஸ்ரம். என் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கியவள் நீ. ஆகவே நீ என் தேவதை!" இதற்கு மனைவியின் பதில் குறுஞ்செய்தி : "குடிச்சிருக்கிறியளா? அமைதியா வீட்டுக்கு வாங்கோ. பிரச்சினையில்ல. பயப்படாதைங்கோ .. நான் எதுவும் செய்ய மாட்டன் ...!"

## வாய் கொஞ்சம் நீளம்

நாவை அடக்கியாளாததால் குடும்பத்தில் பலவித குழப்பங்கள் ஏற்படுகின்றன. மகளுக்குத் திருமணம் முடித்து, மருமகனிடம் ஒப்படைக்கும்முன் மாமனார் கூறினார், "மாப்பிள்ளை, என் மகளுக்குக் கொஞ்சம் வாய் நீளம். அவளைக் கவனிச்சுக்குங்க." அதற்கு மருமகன் சொன்னார், "கவலைப்படாதீங்க, மாமா, அவளை நன்றாகக் கவனித்துக்கொள்வேன். ஏனென்றால் எனக்குக் கொஞ்சம் கை நீளம்". நாவை அடக்கினால் குடும்பத்தில் பல பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

## எப்பிடி கண்டு பிடிச்சா?

இரண்டு நண்பர்கள் சந்தித்துக்கொள்கிறார்கள். "உன்னுடைய மனைவிக்கு இடதுகைப் பழக்கம்போல இருக்கே" என்றார் ஒருவர். "ஆமாம் எப்படி கரெக்ரா கண்டு பிடிச்சா?" என்றார் மற்றவர். "உனது வலது கன்னம் சிவப்பாய் இருக்கு.. அதுதான்..." என்றார் அவர்.

மனைவியை முழுமையாகப் புரிந்துகொள்ளும்போது மணி விழா கொண்டாடப்படுகிறது என்ற வார்த்தைகள் உண்மையான வார்த்தைகளே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவனின் தூக்கத்தைக் கெடுக்கும் மனைவி

மனைவி பாடகி. கணவன் தூக்கமில்லாமல் கஸ்ரப்பட்டான். எனவே மனைவி கணவனுடைய தூக்கமின்மையைப் போக்க வைத்தியரிடம் சென்றாள். "என் கணவர் இரவில் தூக்கமில்லாமல் கஸ்ரப்படுகிறார். கொஞ்சம் தூக்க மாத்திரை கொடுங்கள்" என்றாள். வைத்தியர் தூக்க மாத்திரையைக் கொடுத்து, "இதை நீங்களே உங்கட வாய்க்குள்ள போட்டிற்றுப் படுங்க. கணவர் நல்லா, நிம்மதியாத் தூங்குவார்" என்றார். "என்ன, கணவருக்குத்தானே தூக்கமில்ல, பிறகு ஏன் நான் மாத்திரை சாப்பிட வேணும்?" என்று கேட்டாள். அதற்கு டாக்டர், "இந்த மாத்திரையை நீங்க போட்டிற்று இரவில பாடாமல் பேசாம படுத்தா உங்க கணவனும் நிம்மதியாத் தூங்குவார். அதனாலதான் உங்களப் போட்டிற்று தூங்கச் சொன்னன்" என்றார்.

## மனைவிதான் கணவனை உருவாக்குகின்றார்

'நல்ல கணவன்' என்று எவனுமே இல்லை. ஒரு நல்ல மனைவிதான் ஒரு நல்ல கணவனை உருவாக்குகின்றாள் என்கிறார்கள். ஒரு நல்ல மனைவி காமுகனையும் கண்ணியவானாக்குகின்றாள். மாறாக, ஒரு தீய மனைவி கண்ணியவானையும் காமுகனாக்குகின்றாள்.

பெண்கள் கள்ளாக அல்ல, காவியமாகத் திகழ வேண்டும். கள் குடிப்பவன் வாயிலே நாறுகின்றது. ஆனால், காவியமோ படிப்பவன் வாயிலே மணக்கிறது. எனவே, நல்ல கணவனை உருவாக்குபவர் பெண்ணே. ஒரு கணவரின் முகமலர்ச்சியைப் பார்த்தே அவன் மனைவியை அறியலாம்.

## உண்மை அழகு

'நாலடியார்' பெண்களுக்கு எது அழகு என்று நயம்படக் கூறுகின்றது. 'கூந்தலின் அழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல', மாறாக, 'கல்வி அழகே அழகு' என்கிறார். பெண்கள் தங்கள் உடல் அழகால் அல்ல, ஆனால், உள்ளத்தின் பண்பால் ஆண்களைக் கவர்தல் வேண்டும். உடல் அழகு நிலையானதன்று; மாறக்கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்தை வலியுறுத்த வந்த விவிலியம், "சடை பின்னுவதும் பொன் நகைகள் அணிவதும் உடை மாற்றுவதுமாகிய வெளி அலங்கரிப்பில் உங்கள் அழகு அமையாமல், சாந்தமும் அமைதியுமுள்ள மனப்பான்மையாகிய அழியாத அலங்கரிப்பில் அமையட்டும். அந்த அலங்கரிப்போ மனித உள்ளத்தில் மறைவாக இருப்பதொன்று. அதுவே கடவுள் முன்னிலையில் உயர்ந்தது" (1பேது 3:34) என்ற பேதுருவின் அறிவுரையை அனைத்துப் பெண்களும் கடைப்பிடித்தல் நலம் பயக்கும்.

## குடை ஞானம்

சில பெண்களின் ஆசைக்கு அளவே இருக்காது. கண்ணில் பட்ட எல்லாவற்றையும் வாங்கவேண்டும், அணியவேண்டும், அழகு பார்க்க வேண்டும் என ஆசைப்படுவார்கள். இப்படிப்பட்ட மனைவி வாய்க்கும் கணவனின் கதி அதோ கதிதான்.

தனது மனைவிக்குக் குடைபிடித்துச் சென்ற ஒரு கணவரைப் பார்த்துச் சிரித்தனர் மக்கள். கணவர் அவர்களிடம் கூறினார். "நான் காரியத்துடன்தான் என் மனைவிக்குக் குடை பிடிக்கிறேன். ஏனெனில் தெருவின் வலப்பக்கத்தில் நகைக்கடையும், இடப்பக்கத்தில் துணிக்கடையும் இருக்கின்றன. அவற்றைப் பார்த்தால் என் மனைவிக்கு நகையும் புடவையும் வாங்க வேண்டும் என்ற ஆசை வந்துவிடும். வலது பக்கத்தில் நகைக்கடை வரும்போது குடையை வலது பக்கத்தில் சாய்த்துப் பிடிப்பேன். இடது பக்கத்தில் துணிக்கடை வரும்போது குடையை இடது பக்கத்தில் சாய்த்துப் பிடிப்பேன். இவ்வாறு, நகைக்கடையோ, துணிக்கடையோ அவளது கண்களில் படாமல் அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிடுவேன்." என்றான்.

## நல்மனைவியின் நற்பண்புகள்

ஒரு நல்ல மனைவியின் நற்பண்புகளாக திருவிவிலியம் சில விடயங்களைக் குறித்துக் காட்டுகின்றது.

கணவரின் நம்பிக்கைக்குரியவராக இருக்கும் பண்பை திருவிவிலியம் சுட்டிக்காட்டுகின்றது. "திறமை வாய்ந்த, மனத்திடமுள்ள மனையாளைக் காண்பது மிக அரிது. அவள் பவளத்தைவிடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமதிப்புள்ளவள். அவளுக்கு நலமும் வளமும் பெருகும். அவள் தன் வாழ்நாள் முழுவதும் அவனுக்கு நல்லதையே செய்வாள். ஒருநாளும் தீங்கு நினையாள்'' (நீமொ 31:10-13).

நல்ல மனைவி "சுறுசுறுப்புடன் வேலை செய்வாள். அயர்வின்றி நாள் முழுவதும் ஊக்கம் குன்றாது உழைப்பாள். தன் உழைப்பு நற்பலன் தருமென்பது அவளுக்குத் தெரியும்'' (நீமொ 31:17-18).

கணவருக்கும் பிள்ளைகளுக்கும் அறிவுரை வழங்குவது ஞானம் நிறைந்த ஒரு மனைவியின் கடமை. "அவள் பேசும்போது ஞானத்தோடு பேசுவாள். அன்போடு அறிவுரை கூறுவாள்'' (நீமொ 31:26) என்கிறது நீதிமொழிகள் நூல். "ஒரு மனைவியிடம் விளங்கும் நன்னயம் இவள் கணவனை மகிழ்விக்கும். அவளிடம் காணப்படும் அறிவாற்றல் அவன் எலும்புகளுக்கு வலுவூட்டும்'' (சீஞா 26:13).

மனைவியரிடம் இருக்கவேண்டிய நற்பண்புகள் என நன்னயம், அடக்கம், இறைப்பற்று, துணிவு (சீஞா 26:13-16) இரக்கம், கனிவு, (சீஞா 36:23) முதலியன குறிப்பிடப்படுகின்றன. "மனித உள்ளத்தில் மறைந்திருக்கும் பண்புகளாகிய பணிவும் அமைதியும்'' (1பேது 3:4) மனைவியரின் அலங்காரமாய் இருக்கட்டும் என்கிறார் பேதுரு.

## விவிலியம் காட்டும் மாதிரி மனைவியர்

**சாரா** : கீழ்ப்படிதல் உள்ள மனைவியாக சாராவை எடுத்துக் காட்டுகிறார் புனித பேதுரு. "முற்காலத்தில் கடவுள்மேல் நம்பிக்கைகொண்டிருந்த தூய பெண்கள் தங்கள் கணவருக்குப் பணிந்திருந்தார்கள். அவ்வாறே, சாரா ஆபிரகாமைத் 'தலைவர்' என்றழைத்து அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தார்'' (1பேது 3: 5-6).

**அபிகாயில்** : நாபாலின் மனைவி அபிகாயில் நுண்ணறிவுமிக்க மனைவியாகக் காட்டப்படுகிறார். அவர் "அறிவும் அழகும் வாய்ந்தவர்'' (1 சாமு 25: 3) மட்டுமல்ல. நுண்ணறிவு பெற்றவரும் கூட. மூடனான தம் கணவர் நாபால் தாவீதின் தூதர்களை அவமானப்படுத்தியபோது, அபிகாயில் தாவீதைச் சந்தித்து மன்னிப்பு வேண்டி, அவரைச் சமாதானப்படுத்தினார். அப்போது தாவீது, "இன்று உன்னை என்னிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பிய இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் வாழ்த்தப் பெறுவாராக! இரத்தப்பழிக் குற்றத்திலிருந்தும் பழிதீர்ப்பதிலிருந்தும் என்னை இன்று தடைசெய்த நீ ஆசி பெறுவாய். உன் நுண்ணறிவும் ஆசி பெறுவதாக! (1 சாமு 25: 32- 33) என்று அவரை வாழ்த்தினார்.

**அன்னா** : மன்றாடும் மனைவிக்கு எடுத்துக்காட்டாக எல்கானாவின் மனைவி அன்னாவைச் சுட்டுகிறது விவிலியம். அவரது பொருத்தனை கொண்ட மன்றாட்டால், ஆண்டவரிடமிருந்து சாமுவேலைக் குழந்தையாகப் பெற்றுக்கொண்டார் (1சாமு 1: 1-15).

## விவிலியம் காட்டும் எதிர் மாதிரிகள்

சில தவறான மாதிரிகளையும் விவிலியம் சுட்டிக்காட்டுகிறது. உலகப்பற்று நிறைந்த மனைவியாக லோத்தின் மனைவியும் (தொநூ 19: 26), ஆண்டவரின் பேழை முன்பு நடனமாடிய தாவீதை ஏளனம் செய்த மீக்காலும் (2சாமு 6:16, 20), யோபு கடவுளைப் பழிக்கவேண்டுமெனக் கூறிய "அறிவற்ற பெண்ணாக" யோபுவின் மனைவியும் (யோபு 2: 9-10) நம்முன் உலா வருகின்றனர். ஒரு மனைவி எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு இவர்கள் எடுத்துக் காட்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 6 கண்ணியம் மிக்க கணவர்



கண்ணியம் மிக்க கணவர்கள் தமது குடும்பத்தில் எப்படிப்பட்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைக் குறித்து இந்த இயலில் சிந்திப்போம். தன் மனைவியின் மட்டில் ஒரு கணவன் நடந்துகொள்ளவேண்டிய வழிமுறைகளை திருவிவிலியம் தெளிவுபடுத்தியுள்ளது. "உலகம் உண்டாகுமுன்பே, அவள் உமக்கென்று குறிக்கப்பட்டவள்" (தோபி 6: 18) என்று ஒவ்வொரு கணவரும் தம் மனைவியைக் குறித்து எண்ணவேண்டும்.

தேனுக்கு மலர் பாதுகாப்பு. மலருக்குத் தென்றல் பாதுகாப்பு. நீருக்கு நிலம் பாதுகாப்பு - அதுபோல மனைவிக்கு கணவன் பாதுகாப்பு! "அவர்கள் இனி இருவரல்ல ஒரே உடல்" (மத். 19: 6) என்று கணவன் மனைவிக்கு இடையேயுள்ள ஒன்றிப்பை திருவிவிலியம் இரத்தினச்சுருக்கமாக விளக்குகிறது.

## அன்பு செலுத்துங்கள்

"திருமணமான ஆண்களே, கிறிஸ்து திருச்சபைக்கு அன்பு செலுத்தியதுபோல நீங்களும் உங்கள் மனைவியரிடம் அன்புசெலுத்துங்கள்" (எபே 5:25). கணவரும், மனைவியும் எவ்வாறு இணைபிரியாது வாழவேண்டும் என்று பவுலடியார் அறிவுரை பகர முயன்றபோது என்ன எடுத்துக்காட்டுக் கூறினார்? நகமும் சதையும்போல, கண்ணும் இமையும்போல, மலரும் மணமும்போல மணமக்கள் வாழ வேண்டும் என்று அவர் கூறவில்லை. மாறாக, 'இயேசுவும், திருச்சபையும்போல' வாழுங்கள் என்று வாழ்த்துகிறார். "திருமணமான ஆண்களே, கிறிஸ்து திருச்சபைமீது அன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தியதுபோல நீங்களும் உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். ஏனெனில், கிறிஸ்து திருச்சபைமீது அன்பு செலுத்தி, அதற்காகத் தம்மை ஒப்புவித்தார்'' (எபே 5: 25).

ஆம், கிறிஸ்து திருச்சபைமீது ஆதிக்கம் செலுத்தவில்லை. மாறாக, அன்புசெய்து தம்மையே ஒப்புவித்தார். எனவே, புதிய ஏற்பாட்டின் இலட்சியத் தம்பதியர் இயேசுவும் அவர் தம் திருச்சபையும்தான். 'இயேசுக் கிறிஸ்துவும் திருச்சபையும்போல' எல்லாத் தம்பதியரும் இணைபிரியாது வாழ்வார்களாக!

"உன்னைப்போல் உன் அயலானையும் அன்பு செய்வாயாக'' என்று உலக மாந்தர் அனைவருக்கும் வழங்கப்பட்ட பொதுவான அன்புக் கட்டளைபோல, மனைவியின்மட்டில் ஒரு கணவனின் அன்பு எப்படி இருக்க வேண்டும் என்று கணவனுக்கு அறிவுரை கூறப்படுகின்றது. "உங்களுள் ஒவ்வொருவரும் தம்மீது அன்பு கொள்வதுபோல, தம் மனைவியின்மீதும் அன்பு செலுத்தவேண்டும்'' (எபே 5:33).

## குதித்துத் தொலையட்டும்!

கணவனும் மனைவியும் உல்லாச விடுதியில் தங்கியிருந்தனர். அவர்களிடையே சண்டை! கணவன் தொலைபேசியில் பேசுகின்றார், "மனேஜர், உங்கள் ஹோட்டல் அறை எண் 708ல் இருந்து கதைக்கிறேன்'' மனேஜர், "சொல்லுங்க, என்ன வேண்டும்? கணவன் சொல்கிறார், "எனக்கும் என் மனைவிக்கும் பெரிய வாக்குவாதம். ஜன்னல் வழியா வெளியே குதிச்சிடுவதாக மிரட்டுறா'' மனேஜர் சொல்கிறார், "இது உங்கள் தனிப்பட்ட விடயம்'' கணவன் கூறுகின்றான், "முட்டாள், ஜன்னல் திறபடுது இல்லை. சீக்கிரம் அதைத் திறக்க ஆளை அனுப்பு. அவள் குதித்துத் தொலையட்டும்!'' இந்தக் கணவனுக்கு மனைவிமேல எவ்வளவு அன்பு!

## கொடுமைப்படுத்தாதீர்கள்

"திருமணமான ஆண்களே, உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களைக் கொடுமைப்படுத்தாதீர்கள்'' (கொலோ 3:19) மதுபோதைக்கு அடிமையாகிப்போன சில கணவன்மார் தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியை எப்போதும் அடித்து உதைத்துத் துன்புறுத்துகின்ற நிலைப்பாடுகளைச் சில குடும்பங்களில் பார்க்கின்றோம். சில கணவர்மார் தமது மனைவியை 'கால்ப் பந்து' என நினைத்துத்தான் உதைக்கிறார்கள்போல தெரிகிறது. சில கணவன்மார் தமது சண்டித்தனத்தை வெளியில் காட்டமாட்டார்கள், வீட்டில் மனைவியோடுதான் காட்டுவார்கள்.

மனைவி உங்களுக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்தவள். தனது தாய் தகப்பனை விட்டு நீங்களே தஞ்சம் என்று உங்களிடம் சரணடைந்தவள். அவளை அன்பாக, ஆதரவாக நடத்தவேண்டியது ஒவ்வொரு கணவனுடையதும் கடமையாகும். எத்தனை கணவன்மாருக்கு தமது மனைவியின் பிறந்தநாள் தெரியும்? எப்போதாவது அவளுடைய அழகை, நல்ல சமையலைப் பாராட்டிப் பேசி இருக்கிறீர்களா?

## மனைவியைக் கொன்ற கணவன்

சிறு சிறு விடயங்களில்கூட சில ஆண்கள் பொறுமை இழந்துவிடுகின்றனர். அதனால் விபரீத விளைவுகள் ஏற்படுகின்றன. தலைநகர் டில்லியில் அண்மையில் நடந்த ஒரு விபரீதம் குறித்த பத்திரிகைச் செய்தி இது. காலை உணவை நேரத்திற்குப் பரிமாறாததால் மனைவியை கணவன் கத்தியால் குத்திக் கொன்ற சம்பவம்.

"டில்லியை சேர்ந்தவர் கௌதம். இவர் சம்பவ தினம் அன்று மனைவி மஞ்சுவிடம் காலை உணவு கேட்டுள்ளார். அப்போது மஞ்சு வீட்டு வேலையில் தீவிரமாக இருந்ததால் சிறிது நேரம் கழித்து கணவருக்கு உணவைப் பரிமாறியுள்ளார். இதனால் கோபமடைந்த கௌதம் மனைவி மஞ்சுவைக் கத்தியால் குத்திக் கொலை செய்தார். இதன்பின்னர் மனைவி தற்கொலை செய்துகொண்டுவிட்டார் என்ற வகையில் மஞ்சுவின் சடலத்தை வீட்டின் முதல் மாடியில் இருந்து கீழே தள்ளிவிட்டு நாடகமாட முயற்சித்துள்ளார். ஆனால் கீழே நின்றிருந்த சிலர் கௌதமின் இச்செயற்பாட்டை பார்த்துவிட்டனர். இதனையடுத்து அவர்கள் உடனே பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து கௌதம் கைதுசெய்யப்பட்டார். (நன்றி - வீரகேசரி - 2.6.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்புக் கொடுங்கள்

"அவ்வாறே திருமணமான ஆண்களே, உங்கள் மனைவியர் வலுக்குறைந்தவர்கள் என்பதை நீங்கள் உணர்ந்து அவர்களோடு இணைந்து வாழுங்கள். வாழ்வுதரும் அருளுக்கு உடன் உரிமையாளர்களாக இருப்பதால் அவர்களுக்கு மதிப்புக்கொடுங்கள்" (1பேது 3:7). கடவுளுடைய படைப்பில் பெண்கள் இயல்பாகவே உடல் ரீதியாக வலுக்குறைந்தவர்கள், பலவீனமானவர்கள். இதை உணர்ந்து ஒவ்வொரு கணவனும் மனைவியை அன்பாக, ஆதரவாக, மதிப்பாக நடத்தவேண்டும்.

குடும்ப வன்முறைக்குப் பலியாகும் பெண்கள் பற்றிய செய்திகளுக்குக் குறைவே இல்லை. சில குடும்பங்களில் கணவர் மனைவியை வெறுமனே சமையல் செய்யும் வேலைக்காரியாக, உடல் உறவுக்குத் தேவைப்படும் சதைப்பிண்டமாக, பிள்ளைபெறும் இயந்திரமாக மட்டுமே பார்க்கின்ற நிலைமைகள் உள்ளன.

## இதற்குப் பெயர்தான் சனிப்பெயர்ச்சி

புதிதாகத் திருமணம் செய்த தம்பதியர் கோயிலுக்குச் சென்றனர். அப்போது மனைவியின் காலில் முள் குத்திவிட்டது. "இந்தச் சனியன் முள்ளுக்கு என் மனைவி வருவது தெரியவில்லை" என்று முள்ளைக் கோபித்துக்கொண்டான் கணவன். ஐந்து வருடம் கழித்து அதே கோயிலுக்கு வந்தார்கள். திரும்பவும் ஒரு முள் மனைவிக்குக் குத்தவிட்டது. "சனியனே, முள் இருப்பதைப் பார்த்து வரக்கூடாதா?" என்று இப்போது மனைவியைக் கோபித்துக்கொண்டான் கணவன். "என்னங்க அப்போது அப்படிச் சொன்னீங்க, இப்ப வேறமாதிரி சொல்றீங்ககளே" என்று மனைவி கேட்க, "இதற்குப் பெயர்தான் சனிப்பெயர்ச்சி" என்றான் கணவன்.

## மனைவியைக் கொன்று கறிசமைத்த கணவன்

திருநங்கையான தனது மனைவியைக் கொன்று அவரது மாமிசத்தைச் சமைத்த சமையல்கலை நிபுணரான கணவன், தனது கழுத்தைத் தானே வெட்டி தற்கொலை செய்துகொண்ட சம்பவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்றுள்ளது. பிறிஸ்பேன் நகரிலுள்ள தெனரிப்பே மாடிக் குடியிருப்பில் இடம்பெற்ற மேற்படி சம்பவம் குறித்து சர்வதேச ஊடகங்கள் புகைப்படங்களுடன் செய்திகளை வெளியிட்டுள்ளன. சமையல்கலை நிபுணரான மார்கஸ் பீற்றர் வோல்க்கே (28 வயது) இந்தோனேசியாவைக் சேர்ந்த திருநங்கையான தனது மனைவி மாயங் பிரஸெட்யோவை படுகொலை செய்து அவரது மாமிசத்தை சமைத்தபின் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற இரவு மார்கஸ் பீற்றரின் வீட்டிலிருந்து கடும் துர்நாற்றம் வீசுவதாக அயலவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து அந்த வீடு பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது. இந்நிலையில் பொலிஸார் மார்கஸ் பீற்றரின் வீட்டுக் கதவைத் தட்டியபோது அவர் தனது கழுத்தைத் தானே வெட்டி தற்கொலை செய்துள்ளார். பொலிஸார் வீட்டிற்குள் பிரவேசித்தபோது வீடு முழுவதும் மாயங்கின் உடல் பகுதிகள் சிதறிக்கிடந்துள்ளதுடன் அடுப்பிலிருந்த பாத்திரமொன்றில் அவரது உடல் தசைப்பகுதிகள் சமைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன. (நன்றி: வீரகேசரி 24.10.2014)

இந்தோனேசியாவைச் சேர்ந்த குடும்பமொன்றில் மூத்த பிள்ளையாகப் பிறந்த திருநங்கையான மாயங்கை, அவரது தாயார் மகளாக அல்லாது மகனாகக் கருதி வளர்த்திருந்தார். அத்துடன் அவர் மாயங்கை 'பெப்றி' என அழைத்து வந்தார். இந்நிலையில் வேலைதேடி அவுஸ்திரேலியா வந்த மாயங், தனக்குக் கிடைத்த வருமானத்தை இந்தோனேசியாவிலுள்ள தனது 18 வயது மற்றும் 15 வயது தங்கைகளின் கல்விக்காக அனுப்பிவந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் ஒருவரையொருவர் சந்தித்துக் காதல்கொண்ட மார்கஸ் பீற்றரும் மாயங்கும் பின்னர் திருமணம் செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் கடந்த நவம்பர் இறுதிக்கும் டிசம்பர் ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் திருமணம்செய்து ஜேர்மனிக்கு தேனிலவை கழிக்கச் சென்றதாக அவர்களது நண்பர்கள் கூறுகின்றனர். இந்நிலையில் மார்கஸ் பீற்றர் சம்பவ தினத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாட்கள் முன்பாக மாயங்கை படுகொலை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்தப் படுகொலை மற்றும் தற்கொலை தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நன்றி - வீரகேசரி 24.10.2014)

## மனைவியோடு மகிழ்ந்திருங்கள்

"இளமைப் பருவத்தில் நீ மணந்த பெண்ணோடு மகிழ்ந்திரு. அவளே உனக்குரிய அழகிய பெண் மான், எழில்மிகு புள்ளிமான். அவளது மார்பகம் எப்போதும் உனக்கு மகிழ்வூட்டுவதாக. அவளது அன்பு எந்நாளும் உன்னை ஆட்கொண்டிருப்பதாக" (நிமொ 5:18-19) என்னும் இறைவார்த்தையை எல்லாக் கணவரும் தம் இதயத்தில் பதித்துக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 7. கணவன் மனைவியின் பிரமாணிக்கமின்மை



கணவன் மனைவியின் பிரமாணிக்கமின்மை காரணமாக பல குடும்பங்கள் இன்று குழப்பத்தில் மூழ்கியுள்ளன. இதனால் அன்பு பொங்கும் இல்வாழ்வு பகைமை மிக்கதாகவும், ஏற்றமிகு இல்வாழ்வு ஏமாற்றம் மிக்கதாகவும், இனிப்பான இல்வாழ்வு கசப்பானதாகவும் காலப்போக்கில் மாறிவிடுகின்றது. தென்றலுக்குப் பதிலாக புயல் வீசுகின்றது. குளிரவேண்டிய நெஞ்சம் குமுறுகிறது. கோமகன் குடியிருந்த இடத்திலே குட்டிச்சாத்தான் புகுந்துவிடுகின்றான். சீதேவி இருந்த இடத்தில் மூதேவி வந்துவிடுகின்றாள்.

கற்பு என்பது ஏதோ பெண்களுக்கு மட்டும்தான், ஆண்களுக்கு இல்லை என்ற உணர்வு பலரிடம் உள்ளது. கற்பை விளக்கவந்த மகாகவி பாரதி, 'இரு கட்சிக்கும் அஃதை பொதுவில் வைப்போம்' என்றார்.

## மேலதிக 'உருளி'

அனேகமான வாகனங்களில் 'மேலதிக உருளி' - சில்லு (Spare Wheeler) இருக்கும். சில உயர்ந்த - மிகவும் பெறுமதியான வாகனங்களில் இந்த மேலதிக உருளி வெளியில் தெரியும்படியாக இருக்கும். சில பெறுமதி குறைந்த வாகனங்களில் அது உள்ளே இருக்கும்.

இதுபோலதான் குடும்ப வாழ்க்கையிலும் சிலருக்கு இந்த 'மேலதிக உருளி' போன்ற இன்னுமொரு நட்பு - உறவு அல்லது கள்ளக் காதல் இருக்கின்றது. சில வசதியான மனிதர்களுக்கு வெளியில் தெரியும்படியாக இருக்கின்றது. சாதாரண மனிதர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் தெரியாமல் இருக்கின்றது. இது குடும்ப வாழ்வின் மகிழ்ச்சிக்கு இடையூறாக உள்ளது.

இந்தியாவில் சில இடங்களில் சிலர் இதை அந்தஸ்தாகக் கருதுகின்றார்கள். ஒரு பெரிய பணக்காரன் என்றால் அவனுக்கு இரண்டு லொறி, மூன்று பண்ணை இருப்பதுபோல இரண்டு மூன்று இடத்தில் மனைவியர் இருப்பார்கள் என்ற நிலை அங்கு சில இடங்களில் காணப்படுவதுண்டு.

## கைத்தொலைபேசியில் கள்ளக்காதல்

வீட்டில் இருக்கும் சில கணவன் மனைவி வீட்டில் இருக்கும்போது ஒருவரோடொருவர் நன்றாகப் பேசுகின்றார்கள், சிரிக்கின்றார்கள். ஆனால் வெளியில் இருவரும் தனித்தனியாகப் போகும்போது மறக்காமல் கைத்தொலைபேசியையும் கொண்டுபோகின்றார்கள்.

சில பெண்கள் வெளியில் கிளம்பும்போது தாம் திருமணம் ஆனவர்கள் என்று காட்டிக்கொள்வதில்லை. சிலர் குங்குமப் பொட்டு, தாலி போன்றவற்றை அணிவதில்லை. வீட்டில் கணவன் மனைவியோடும், மனைவி கணவனோடும் பேசிப்பழகியவர்கள் இப்போது வெளியில் வேறு நட்புடன் - கள்ளக் காதலர்களுடன் மணித்தியாலக் கணக்காகக் கதைகின்றார்கள்.

## பெண்களுக்கு இரண்டு வீடுகள்

பிரபல நகைச்சுவை நடிகர் கவுண்டமணியின் கேள்வி இது! "பெண்களுக்கு பிறந்த வீடு, புகுந்த வீடு என இரண்டு வீடுகள் இருக்கும்போது... ஆண்களுக்கு பெரிய வீடு சின்ன வீடு என இரண்டு வீடுகள் இருக்கக்கூடாதா??" நகைச்சுவைக்கு இது பொருந்தினாலும் நடைமுறைக்கு பொருந்தாத ஒன்றாகும்.

## கிறிஸ்தவத் திருமணம் ஒருதாரத் திருமணமாகும்

திருமணத்தின் முதல் மூலக்கூறு ஒருமைப் பண்பாகும். அதாவது, கிறிஸ்தவத் திருமணம் ஒருதாரத் திருமணமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Monogamy). எனவே, அது பலதாரத் திருமணத்தைத் (Polygamy) தடைசெய்கின்றது; விலக்குகிறது. உண்மையான திருமண அன்பு ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே மட்டும் இருக்க முடியும். திருமண அன்பு தனி உரிமைத் தன்மை வாய்ந்த அன்பு. மணமக்களின் திருமணச் சம்மதத்தின் விளக்கம், "நான் உன்னை மட்டும் அன்புசெய்கிறேன்." என்பதாகும். மணவாழ்வைப் பொறுத்தவரை கிறிஸ்தவத் தம்பதிகளின் விசுவாசப் பிரமாணம், "ஒரே மனைவியை விசுவசிக்கின்றேன். ஒரே கணவனை விசுவசிக்கின்றேன்." என்பதாகவே இருக்கவேண்டும்.

6வது கட்டளை உடல் ரீதியான விபாசாரத்தையும், 9வது கட்டளை மனரீதியான விபசாரத்தையும் தடைசெய்கிறது. இயேசுக்கிறிஸ்து தமது மலைப்பொழிவில் "ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தில் ஏற்கெனவே அப்பெண்ணோடு விபசாரம் செய்தாயிற்று" (மத் 5:27) என்று கூறியுள்ளார்.

## காதலுக்கும் கலியாணத்திற்கும் என்ன வித்தியாசம்

"காதல் என்றால் பஸ்ஸில போறமாதிரி. நமக்குப் பிடிக்கவில்லை என்றால் இடையில் இறங்கிவிடலாம். ஆனால் கலியாணம் என்றால் பிளைற்றில் போறமாதிரி. பிடிக்காவிட்டாலும் இடையில் இறங்க முடியாது." என்கிறார் ஒருவர்.

## உள்ளத்தில் ஒருத்தி மட்டும்

திருமணமான நடுத்தர வயதுத் திருவாளர் ஒருவர் ஒரு குருவானவரிடம் வந்து "சுவாமி, திருச்சபையில் ரொம்ப அநியாயம் நடக்குது. ஆயர் உதவி ஆயரையும், பங்குத்தந்தை உதவிப் பங்குத்தந்தையும், வைத்துக்கொள்கின்றனர். என் மனைவிக்கு உதவி மனைவி கேட்டால் ஏன் கொடுக்க மறுக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

கிறிஸ்தவத் திருமணம் ஒருதாரத் திருமணம், அது பலதாரத் திருமணமில்லை. "ஒருவருக்கு இரு மனைவிகள் இருக்கக்கூடாது என்று விவிலியம் கூறுகிறதா?" என்று ஒரு விவிலியப் பேராசிரியரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதற்கு அவர் கொடுத்த விவிலிய மேற்கோள்: "எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது" (மத் 6:24) என்பதாகும். ஆம் எந்தக் கணவரும் இரண்டு மனைவிகளுக்கு ஊழியம் செய்ய முடியாது.

## மொட்டையடித்த மனைவியர்

ஒருவருக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். அவர்களில் ஒருவர் வயதானவர். மற்றவர் குமரி. வயதான மனைவி கணவருடைய தலைமுடியில் கறுப்பு முடியெல்லாம் பிடுங்கிவிட, குமரி மனைவி கணவருடைய தலைமுடியில் வெள்ளை முடியெல்லாம் பிடுங்கிவிட்டாள். இரண்டுபேரும் சேர்ந்து கணவரை மொட்டையடித்தனர். எனவே, வேண்டாம் வேண்டாம் உதவி மனைவி வேண்டாம். முதல் மனைவி தாரம்! இரண்டாம் மனைவி பாரம்!

பலதாரத் திருமணத்தை எந்தச் சமூகமும் அனுமதிப்பதில்லை. திரைப்படக் கவிஞன்கூடப் பலதாரத்தை அல்ல ஒரு தாரத்தைத்தான் வலியுறுத்துகிறான், "உள்ளத்தை ஒருத்திக்குக் கொடுத்துவிடு – அந்த ஒருத்தியை உயிராய் மதித்துவிடு"

## உள்ளத்தில் ஒருவன் மட்டும்

ஒரு குடும்பம் ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்தது. ஒருநாள் அவ்வீட்டுக்கு விருந்தாளி ஒருவர் வந்தபோது அவ்வீட்டின் உரிமையாளரும் உடனிருந்தார். அவ்வீட்டில் குடியிருந்த குடும்பத் தலைவி வந்த விருந்தாளியிடம் அவ்வீட்டில் உரிமையாளரைச் சுட்டிக்காட்டி "இவர்தான் என் வீட்டுக்காரர்" என்று விளையாட்டாகச் சொன்னது பெரிய புயலையே கிளப்பிவிட்டது.

ஒரு பெண்ணின் கணவர்தான் அவருடைய வீட்டுக்காரர். அவர் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரர் அவருடைய வீட்டுக்காரர் அல்ல. அவர் வீட்டின் உரிமையாளர். ஒரு பெண்ணுக்கு ஒரு வீட்டுக்காரர் மட்டுமே இருக்க முடியும் இரண்டு வீட்டுக்காரர்கள் இருக்க முடியாது.

**'ஆயிரம் பெண்மை மலரட்டுமே ஆயிரம் கண்கள் ரசிக்கட்டுமே ஒருத்தியின் நெஞ்சம் ஒருத்தனுக்கே' – திரைப்படப்பாடல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணமான ஒரு பெண்ணின் உள்ளத்தில் ஒருவர் மட்டுமே அதாவது அவருடைய கணவர் மட்டுமே குடியிருக்க வேண்டும்.

## பிறன் இல் விழையாமை, பிறர் மனை நயவாமை

வான்புகழ் வள்ளுவர் 'பிறன் இல் விழையாமை' என்ற அதிகாரத்தில் உடல் ரீதியான விபசாரத்தையும், மனரீதியான விபசாரத்தையும் கடிந்துரைக்கிறார். அறநெறியைவிட்டுத் தீய நெறியில் செல்லும் எல்லாரிலும் அடுத்தவனுமடைய மனைவியை விரும்பி அவனுடைய வீட்டுவாசலில் போய் நிற்பவனைப்போல் முட்டாள் வேறு எவருமில்லை என்கிறார் (குறள் 142).

பிறருடைய மனைவியை இச்சையுடன் நோக்காத் தன்மைதான் ஆண்களுக்கு ஆண்மையாகும் (மனத்திட்மையாகும்) என்கிறார் (குறள் 148). விவிலியமும், வள்ளுவமும் சுட்டிக்காட்டும் கற்பு ஒழுக்கமே இனிய நல்லறத்தை உருவாக்கும். மற்றவை அனைத்தும் கொடிய நரகத்தையே உருவாக்கும்.

## மனைவியைக் கண்டுவிட்டுத் தப்பியோட்டம்

அண்மையில் பத்தரிகையில் வெளிவந்த செய்தி இது. சுவாரசியமான அதேவேளை இன்றைய யதார்த்தத்தை வெளிப்படுத்துகின்ற செய்தியாக இது உள்ளது.

"பதிவுத் திருமணம் முடித்துவிட்டு மணமகளுடன் ஊர்வலமாக வீடுவந்த மணமகன் வீட்டு முற்றத்தில் வரவேற்பிற்காகக் கைக்குழந்தை ஒன்றுடன் நின்ற பெண் ஒருவரைக் கண்டு மணமகளை வாகனத்திற்குள் விட்டுவிட்டு தப்பி ஓடிய சம்பவம் ஒன்று இரத்தினபுரிப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமம் ஒன்றில் இடம்பெற்றுள்ளது. தப்பியோடிய மணமகன் ஏற்கனவே திருமணமாகிய 29 வயதுடையவராவார். இந்த மணமகன் அகநுவர பிரதேசத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரிபவர். தன் மனைவியையும், மகளையும், பார்ப்பதற்காக மாதத்திற்கு ஒருமுறை வீட்டிற்கு வருபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகநுவர பிரதேசத்தில் நிறுவனத்திற்கு அருகாமையில் வாடகை அறை ஒன்றில் தங்கியிருந்த மணமகனுக்கு சினேகிதியாக அறிமுகமாகிய யுவதி ஒருவர் காலப்போக்கில் காதலியாக மாறியுள்ளார். இருவரின் காதல் மூன்றரை வருடங்களாக தொடர்ந்துள்ளது. இருவருக்கும் இடையிலான காதலை அறிந்த யுவதியின் பெற்றோர் இருவருக்குமான திருமணத்தை நடத்தத் திட்டமிட்டனர். திருமணத்தை மிகவும் எளிதாகப் பதிவுத் திருமணம் மூலம் நடத்தத் தீர்மானித்த யுவதியின் பெற்றோர், அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுத்ததுடன் யுவதியின் பாடசாலை நண்பியையும் அழைக்க மறந்துவிடவில்லை.

திருமண நாளன்று மணமகனுடன் மணமகள் உட்பட உறவினர்கள் சிலரும் பதிவுத் திருமணமத்திற்காக இரத்தினபுரி நகரத்தில் உள்ள திருமணப் பதிவுக் காரியாலயத்திற்கு சென்று திருமணப் பதிவு வேலைகள் அனைத்தையும் முடித்துவிட்டு ஊர்வலமாக வீடுவந்துகொண்டிருந்தனர். திருமண அழைப்பை ஏற்று மணமகளின் வீடுவந்து புதுத்திருமணத் தம்பதிகளின் வருகைக்காக மணமகளின் பாடசாலைத் தோழி உட்பட மற்றைய உறவினர்களும் வீட்டுமுற்றத்தில் காத்திருந்தனர்.

தம்பதியை ஏற்றிய வாகனம் வீட்டை நெருங்கியபோது வீட்டுமுற்றத்தில் திருமணத் தம்பதியை வரவேற்பதற்காக நின்றுகொண்டிருந்த கூட்டத்தில் கைக்குழந்தை ஒன்றை சுமந்துகொண்டு நின்றுகொண்டிருந்த பெண் ஒருவரைக் கண்ட மணமகன் வாகனத்தை நிறுத்தச் சொல்லிவிட்டு யாரும் எதிர்பாராதவிதமாகத் திடீரென வாகனத்தின் கதவைத் திறந்து, குதித்து அந்த இடத்தைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். சம்பவத்தைச் சற்றும் எதிர்பாராத மணமகளின் உறவினர்கள் அனைவரும் நிலைகுலைந்து போயினர்.

இந்தத் திருமணத்தில் ஏதோ ஒரு தவறு இடம்பெற்றுள்ளதென திருமணத்திற்கு வந்தவர்கள் அனைவரும் குழம்பியபோது கைக்குழந்தையை சுமந்துகொண்டிருந்த மணமகளின் பாடசாலைத் தோழி, அவர் தனது கணவர் எனக் கூக்குரல் இட்டுள்ளார். தன் மனைவியையும் குழந்தையையும் சற்றும் எதிர்பாராத புதுமாப்பிள்ளை அவர்களைக் கண்டதும் தப்பிச்சென்றமை ஏன் என இப்போது அனைவருக்கும் புரிந்துள்ளது" **(நன்றி - தினக்குரல் - 26.11.2013)**

இதுபோன்ற பல சம்பவங்களை நடைமுறையில் நாம் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கைத் துரோகத்தை ஆண்டவர் வெறுக்கின்றார்

"உனக்கும் உன் மனைவிக்கும் உன் இளமையில் நிகழ்ந்த திருமணத்திற்கு ஆண்டவர் சாட்சியாய் இருந்தார். அப்படியிருக்க, உன் துணைவியும் உடன்படிக்கையால் உன் மனைவியுமான அவளுக்கு நீ நம்பிக்கைத் துரோகம் செய்தாயே. உங்களை ஒன்றாக இணைத்தவர் அவரே. அவர் நாடுவது தம் மக்களாக வாழும் குழந்தைகளை அன்றோ? ஆதலால் எவனும் தான் இளமையில் மணந்த மனைவிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யாதிருப்பதில் கவனமாய் இருப்பானாக. ஏனெனில், "மணமுறிவை நான் வெறுக்கிறேன்" என்கிறார் இஸ்ரயேலின் ஆண்டவர். "மணமுறிவு செய்கிறவன் வன்முறையை மேலாடை கொண்டு மறைக்கிறான்" என்கிறார் படைகளின் ஆண்டவர். ஆகையால் எச்சரிக்கையாய் இருங்கள். நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள்." (மலா2: 14 - 16).

"தெய்வம் பாதி, மிருகம் பாதி சேர்ந்து செய்த கலவை நான். உள்ளே தெய்வம், வெளியே மிருகம், விளங்கமுடியாத புதுக்கவிதை நான்" என்ற நிலையில் உள்ளான் மனிதன்.மனிதனிடத்தில் காணப்படும் இத்தகைய இழுபறி நிலையை புனித பவுல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை. விரும்பாத தீமையையே செய்கிறேன். நான் விரும்பாததைச் செய்கிறேன் என்றால் அதை நானாகச் செய்யவில்லை. என்னில் குடிகொண்டிருக்கும் பாவமே செய்கிறது" (உரோ 7:19-20).

இரண்டாவது வத்திக்கான் சங்கமும் மனிதனின் உடலே அவனுக்கு எதிராகப் புரட்சிசெய்கிறது எனத் தயக்கமின்றி அறிக்கையிட்டுள்ளது. பாவத்தினால் புண்பட்டிருப்பதால், மனிதர் தம் உடலில் தமக்கு எதிராக எழும் எதிர் உணர்ச்சிகளைக் காண்கின்றனர் (இன்றைய உலகில் திருச்சபை, எண் 14).

## ஒரே கிறிஸ்து, ஒரே திருச்சபை

கிறிஸ்தவத் திருமணத்தின் ஒருமைத்தன்மைக்கு இறையியல் காரணம் உண்டு. கிறிஸ்தவ மணமக்கள் கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் இடையேயுள்ள உடன்படிக்கை அன்பிற்குச் சான்றுபகர்கின்றனர் (காண். எபேசி 5:32-35).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை கிறிஸ்து? எத்தனை திருச்சபை? ஒரே கிறிஸ்து, ஒரே திருச்சபை. அவ்வாறே ஒரே கணவன், ஒரே மனைவி. திருமண அன்பின் ஒருமைத்தன்மையை ஏற்றுக்கொண்டால் விபசாரத்திற்கோ, மணமுறிவுக்கோ இடமில்லை என்பது தெளிவாகப் புரிந்துகொள்ளப்படும். திருமண அன்பு இன்பத்திலும், துன்பத்திலும், உடலாலும், உள்ளத்தாலும் முறிவுபடாமுறையில் நம்பகப் பண்பு (பிரமாணிக்கம்) கொண்டது. ஆகையால், இவ்வன்பில் பிறர்மனை நயத்தலுக்கும் (விபசாரத்துக்கும்), மணமுறிவுக்கும் இடமில்லை என அறிக்கையிட்டுள்ளது இரண்டாம் வத்திக்கான் சங்கம் (இன்றைய உலகில் திருச்சபை எண் 49)

## யார் அப்பா என்பதுதான் பிரச்சினை!

ஒரு சர்தார்ஜியின் மனைவிக்கு ஒரே பிரசவத்தில் இரண்டு குழந்தைகள் பிறந்தன. அதிர்ச்சி அடைந்த சர்தார்ஜி "முதல் குழந்தைக்கு நான் அப்பா, இரண்டாவது குழந்தைக்கு யார் அப்பா?" என்று கேட்டுப் புலம்பினார்! உண்மையிலேயே விபசாரத்தில் பிறக்கும் குழந்தைக்கு யார் அப்பா? என்பது மிகவும் சிக்கலான பிரச்சினையாகும். ஒரு மாணவன் ஒழுங்காகப் படிப்பதில்லை. அதற்கான காரணத்தை ஆசிரியர் கேட்டபோது மாணவன், "என் அப்பாவும், அம்மாவும் இரவும், பகலும் சண்டை போடுவதால் என்னால் படிக்கமுடியவில்லை" என்றான் "யாருடா உன் அப்பா? என்று ஆசிரியர் கேட்டபோது "அதைப் பற்றித்தான் ஒவ்வொரு நாளும் சண்டை நடக்குது" என்றான்.

விபசாரத்தில் ஈடுபடும் திருமணமான பெண் தனது கணவருக்குப் பிறக்காத குழந்தையை வளர்க்கும் பொறுப்பையும் தன் கணவர்மீது சுமத்துகிறார். இது உண்மையிலேயே அநீதியாகும்.

## பிரமாணிக்கமின்மைக்கு என்ன காரணம்?

கணவனோ அல்லது மனைவியோ தனது குடும்ப வட்டத்திற்கு வெளியே இன்னுமொரு நபருடன் ஒரு உறவை, தொடர்பை ஏற்படுத்தும்போது நாம் இலகுவாக அவனையோ அல்லது அவளையோ குற்றம்சாட்டுகின்றோம். குற்றம்சாட்டுவது இலகு. ஆனால் அந்த ஆணோ அல்லது பெண்ணோ எப்படிப்பட்ட சூழ்நிலையில் இப்படிப்பட்டதொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டாள்/ன் என்பதை நாம் நடுநிலையோடு சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

ஒரு குடும்ப சூழ்நிலையில் ஓர் ஆணுக்கோ அல்லது ஒரு பெண்ணுக்கோ கிடைக்கவேண்டிய அன்பு, அக்கறை, உடல் ரீதியான தேவைகள் கிடைக்காதவிடத்து அந்த ஆணோ அல்லது பெண்ணோ இன்னுமொரு உறவை, தொடர்பை நாடிச்செல்கின்ற சூழ்நிலை உள்ளது.

எனவே முதலில் ஒவ்வொரு குடும்பமும் - கணவனும் மனைவியும் தமக்கிடையிலான உறவை உண்மையானதாக, ஆழமானதாக அமைத்துக்கொள்ளவேண்டும். உண்மையான பரஸ்பர அக்கறை, அன்பு இருக்கும் இடத்தில் - குடும்பத்தில் ஓர் ஆணோ அல்லது ஒரு பெண்ணோ வேறு தகாத உறவை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறைவு.

## விபசாரம் கற்புக்கும் நீதிக்கும் எதிரான பாவம்

ஏற்கெனவே திருமணப் பிணைப்பால் கட்டுண்டவர்கள் ஈடுபடும் முறைகேடான பாலுறவு விபசாரமாகும்.

விபசாரம் செய்கின்ற இருவரில் ஒருவர் மட்டும் திருமணமானவர் என்றால் அது 'ஒற்றை விபசாரம்' எனப்படும். இருவருமே திருமணமானவர்கள் என்றால் அது 'இரட்டை விபசாரம்' எனப்படும்.

விபசாரம் கற்புக்கு எதிரான பாவம் மட்டுமல்ல, நீதிக்கும் எதிரான பாவமாகும். விபசாரம் செய்யும் தம்பதி தமது வாழ்க்கைத் துணைவருக்கு அநீதி இழைக்கின்றார்.

## விபசாரமும் தண்டனையும்

முடிவில்லா வாழ்வடைய ஒருவர் விபசாரக் குற்றத்தில் ஈடுபடலாகாது. "நீ வாழ்வடைய விரும்பினால்.. கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே" (மத் 19:17-18) என்று கிறிஸ்து பணக்கார இளைஞனிடம் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தால் செய்யும் விபசாரத்தையும் கிறிஸ்து கண்டனம் செய்கிறார் (மத் 5:27-28). “விபசாரம் புரிவோர் இறையாட்சிக்குப் புறம்பாக்கப்படுவர்” என்று எச்சரிக்கிறார் திருத்தூதர் பவுல். “ஏமாந்துபோகாதீர்கள். பரத்தமையில் இடுபடுவோர், விபசாரம் செய்வோர் இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்வதில்லை” (1கொரி 6:9-10).

விபசாரம் மிகப்பெரிய குற்றமாகும். “விபசாரத்தில் ஈடுபடும் ஆண்-பெண் இருவருமே கொல்லப்பட வேண்டும். அடுத்திருப்பவன் மனைவியோடு உடலுறவுகொள்பவனும் அந்தப் பெண்ணும் கொலைசெய்யப்பட வேண்டும்” (லேவி 20:10) என்பது பழைய ஏற்பாட்டில் உள்ள கடுமையான சட்டங்களாகும்.

## பாவச்சந்தர்ப்பங்களை விலக்க வேண்டும்

“சம்சனைவிட நீ பலவானும் அல்ல, தாவீதைவிட நீ புனிதமானவனும் அல்ல, சாலமோனைவிட நீ ஞானியும் அல்ல. இவர்கள் மூவருமே பெண்ணாசையால் கெட்டனர். எனவே நீ எச்சரிக்கையுடன் இருப்பாயாக” என்று அறிவுத்துகிறார் ஓர் ஆன்மீகவாதி.

“அழகான பெண்ணிடமிருந்து உன் கண்களைத் திருப்பிக்கொள். பிறன் மனைவியின் அழகை உற்றுநோக்காதே. பெண்களின் அழகால் பலர் நெறி பிறழ்ந்துள்ளனர். இதனால் காமம் தீயெனப் பற்றி எரியும்” (சீரா 9:9) என்று எச்சரிக்கப்படுகிறோம். இயேசுக் கிறிஸ்துவும் பாவச்சந்தர்ப்பங்களை விலக்கவேண்டுமென அறிவுத்துகிறார். (மத் 5:27-30) ஆண்களுக்குச் சொல்வதெல்லாம் பெண்களுக்கு பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 8
# குடும்பத்தைக் குலைக்கும் பேய்கள்



பலவகையான தீமைகள் - பேய்கள் இன்று குடும்பத்தைச் சீர்குலைத்துக் குட்டிச்சுவராக்குகின்றன. பிடிவாதப் பேய், பழிவாங்கும் பேய், சந்தேகப் பேய், குடிவெறிப் பேய் என இத்தீமைகள் பற்பல இவற்றில் சில இங்கு ஆராயப்படுகின்றன.

## I பிடிவாதப் பேய்

"இன்பமான இல்வாழ்வுக்கு என்ன அறிவுரை கூறுகிறீர்கள்" என்று கணவர் ஒருவர் அறிஞர் ஒருவரைக் கேட்டார். அந்த அறிஞர் வழங்கிய அறிவுரை, "ஒன்று அவளை அடக்கு அல்லது அவளுக்கு அடங்கு!"

வேறொரு கணவர் அதே அறிஞரிடம், "என் மனைவி நான் கிழித்த கோட்டைத் தாண்டக்கூடாது. அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார். அதற்கு அறிஞர் வழங்கிய ஆலோசனை, "எங்கே கோடு கிழிப்பது என்று முதலில் உங்கள் மனைவியைக் கேட்டுவிட்டு, அதன்பின் அவள் சொல்வதுபோல் கோட்டைக் கிழியுங்கள்." என்பதாகும்.

அறிஞர் முதலில் சொன்ன அணுகுமுறை சரியானதல்ல. கணவனும் மனைவியும் சரிநிகர் கடமையும் உரிமையும் கொண்டவர்கள் என்பதால் யார் யாருக்கு அடங்கி ஒடுங்கி நடக்க வேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை. இருவருமே ஒருவர் மற்றவரின் விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்பளித்து, விட்டுக்கொடுத்து நடக்கும் பண்பாளர்களாக இருத்தல் இல்வாழ்வுக்கு இனிமை சேர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னலம் துறந்து விட்டுக்கொடுக்க வேண்டும்

கணவனும் மனைவியும் தன்னலம் துறந்து தமது வாழ்க்கைத் துணையின் நலனை நாடவேண்டும். "நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறைகொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்" (பிலி 2:4-5)

கணவன் மனைவியருக்கிடையில் நானா? நீயா? என்ற போட்டி மனப்பான்மை வளரக்கூடாது. "எது எப்படி இருந்தாலும் ஆண்டவரோடு இணைக்கப்பட்ட நிலையில் ஆணின்றிப் பெண்ணில்லை, பெண்ணின்றி ஆணில்லை. ஏனெனில் ஆணிலிருந்து பெண் தோன்றியதுபோலவே, பெண் வழியாகவே ஆண் தோன்றுகிறார்" (1 கொரி 11:11-12).

தம்பதியர் தங்களின் மாறுபட்ட, வேறுபட்ட குணநலன்களைப் போற்றி, பிடிவாத குணமகற்றி, கொடுக்கல்- பெறுதல் என்ற அணுகுமுறையைப் பின்பற்றி வாழப் பழகிக்கொள்வார்களாக. அப்போது ஒருவர் மற்றவரை அடக்கவோ அல்லது ஒருவர் மற்றவருக்கு அடங்கவோ தேவை இராது.

## தோற்பதுதான் வெற்றி

குடும்ப வாழ்வை உருக்குலைக்கும் இழிவான பேய்களில் ஒன்று பிடிவாத குணம் ஆகும்.

மணவாழ்வில் கணவன் மனைவியிடமும், மனைவி கணவனிடமும் தோற்பதுதான் வெற்றி என்பதை மனதில் கொள்ளவேண்டும். இந்த உண்மை பலநேரங்களில் உணரப்படுவதில்லை.

விட்டுக்கொடுப்பதை பலர் கௌரவப் பிரச்சினையாகக் கருதுகின்றார்கள். விட்டுக்கொடுப்பதில்தான் நமது பலம் இருக்கின்றது. பிடிவாதம் பிடிப்பது நமது பலவீனத்தைக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II. பழிவாங்கும் பேய்

தம்பதியர் ஒருவர் மற்றவரின் குற்றங்களை மன்னித்து, மறந்து, மகிழ்ச்சியாக வாழ்வதற்குப் பதிலாக, ஒருவர் மற்றவரின் குறைகளை மிகைப்படுத்தி, பழிவாங்கவும், ஒருவர் மற்றவர்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் இழிகுணம் முளைத்திடவும் அனுமதித்தால் குடும்பம் குலைவதைத் தடுக்கமுடியாது!

## குறையில்லா மனிதன் யாருமில்லை

குறையில்லா மனிதன் யாருமில்லை. இயற்கையிலும் குறையுண்டு. நெல்லிலே உமியும், நீரிலே நுரையும், நிலவிலே களங்கமும் உண்டு. சிரிக்கின்ற இதழ்களுடைய ரோஜா செடியிலே குத்துகின்ற முள் இருக்கின்றது.

இரவும் பகலும் சேர்ந்ததுதான் ஒரு நாள். அவ்வாறே, நிறையும் குறையும் உள்ளவன்தான் மனிதன். ஒவ்வொருவரையும் அவர்களாகவே, அவர்களுடைய நிறைகுறைகளோடு ஏற்றுக்கொள்வதே உண்மையான அன்பு.

உண்மை அன்பின் மறுபக்கம் மன்னிப்பு! இறைவன் நம்மை அன்புசெய்கின்றார் என்பதை நம் குற்றங்களை மன்னிப்பதில்தான் காட்டுகின்றார். கடவுள் நம்மை மன்னிக்கவில்லை என்றால் மோட்சம் காலியாகத்தான் இருக்கும். கடவுள் வாரி வழங்குவதில் மட்டுமல்ல, மன்னிப்பதிலும் தன் வள்ளல்தன்மையைக் காட்டுகின்றார்.

## அன்பின் இலக்கணம்

உலகில் இதுவரை யாரும் அன்புக்குக் கொடுக்காத விளக்கத்தைக் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகம் 13ஆம் அதிகாரத்தில் பவுலடியார் கொடுக்கின்றார். "அன்பு பொறுமையுள்ளது, அழுக்காறு கொள்ளாது, சீற்றத்திற்கு இடம்தராது. வர்மம் வைக்காது, அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்" இதை அடுக்கடுக்காக அழகாக வர்ணிக்கிறார். முறையீடு இருந்தால் மன்னிக்கும்படி அறிவுறுத்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னிப்பு ஒன்றே தீர்வு

இன்று குடும்பங்களில் மன்னிக்க முடியாத கடினமான மனப்பான்மைகளால் குடும்ப அமைதி குலைந்துபோய் உள்ளது. "மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள்" (லூக். 6:38). ஏழுமுறை மட்டுமல்ல ஏழு எழுபதுமுறை மன்னியுங்கள்" (மத். 18:22) என்பது இயேசுவின் வார்த்தைகள்.

**"மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம்**
**மாணிக்கக் கோவிலப்பா - இதை**
**மறந்தவன் வாழ்வு தடம்தெரியாமல் மறைந்தே போகுமப்பா"**

இப்பாடல் தனிமனிதனுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும், குறிப்பாகத் தம்பதியருக்குப் பொருந்தும். தனிநபர் பிரச்சினைகளுக்கும், குடும்பப் பிரச்சினைகளுக்கும், சமுதாயப் பிரச்சினைகளுக்கும், நாட்டுப் பிரச்சினைகளுக்கும் ஏன் உலகப் பிரச்சினைகளுக்கும் மன்னிப்பு ஒன்றே தீர்வு.

## மன்னிப்பபைக் குறித்த தவறான கருத்துக்கள்

ஒரு மனிதனுடைய பலம் என்பது என்ன? ஒரு மனிதனுடைய பலவீனம் என்பது என்ன என்பதைக் குறித்து இந்த உலகம் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறது. பழிக்குப்பழி வாங்குபவன் பலசாலி எனக் கருதப்படுகிறான். மன்னிக்கிறவன் பலவீனன் எனக் கருதப்படுகின்றான். ஆனால் மனிதனுடைய உண்மையான பலம் அவன் மற்றவரை மன்னிப்பதில்தான் உள்ளது. மன்னிக்கிறவன் உண்மையில் பலசாலி. பழிவாங்குபவன் உண்மையில் கோழை, பரிதாபத்திற்குரியவன்!

"மனத்தில் பகையை அடக்கிவைத்திருத்தல் நேரடிப் போரைவிடக் கொடியது" என்கிறார் காந்தியடிகள் நாய் நமக்குக் கடித்தால் நாம் நாயைத் திருப்பிக் கடிப்போமா? மற்றவர் எனக்குச் செய்த தீமையே நானும் மற்றவருக்குச் செய்தால் மற்றவருக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் என்ன? நான் மற்றவரை மன்னித்தால்தான் நான் அவனைப்போல் - அவளைப்போல் இல்லை. நான் அவனைவிட – அவளைவிட உயர்ந்தவன் - உயர்ந்தவள் என்று காட்ட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னித்தால்தான் மன்னிப்பை எதிர்பார்க்க முடியும்**

மன்னிக்க மறுத்த பணியாளர் உவமையில் (மத் 18 : 21 – 35) நாம் மற்றவர்களை மன்னித்தால்தான் வானகத் தந்தையும் நமது குற்றங்களை மன்னிப்பார் என்று இயேசு தெளிவுபடுத்துகின்றார். நாம் மற்றவர்களிடமிருந்து மன்னிப்பை எதிர்பார்க்கின்றோம், ஆனால் மற்றவர்களுக்கு மன்னிப்பைக் கொடுக்க மறுக்கிறோம். இது பெரிய முரண்பாடு அல்லவா?

பரலோக மந்திரம் செபிக்கும்போது, எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பதுபோல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்" என்று செபிக்கின்றோம். இதையே பவுலடியாரும் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றார். "ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளுங்கள். ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள்" (கொலோ 3:13). "பழிவாங்காதீர்கள் .... பழிவாங்குவதும், கைமாறு அளிப்பதும் எனக்குரியன' என்கிறார் ஆண்டவர்" (உரோ 12 :19).

சிலுவையில் தொங்கும் இயேசு அந்த இக்கட்டான வேளையில்கூட தனது பகைவர்களை மன்னிக்கும்படி இறைத்தந்தையிடம் மன்றாடுகின்றார். "தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை." (லூக். 23: 34).

## III. சந்தேகப் பேய்

மணவாழ்வை மண்ணில் குழிதோண்டிப் புதைக்கும் மடப்பேய் சந்தேகப் பேய். சந்தேகப் பேய் நுழைந்துவிட்ட வீடு சீரழிவுக்கு உள்ளாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

சந்தேகம் என்னும் பேய் ஆதாம் - ஏவாள் காலத்திலேயே திருமண வாழ்வில் நுழைந்துவிட்டது. ஆதாம் தூங்கும்பொழுது ஏவாள் அவனுடைய விலா எலும்புகளையெல்லாம் எண்ணிப்பார்ப்பாளாம். காரணம், ஆதாமுடைய மற்றொரு விலா எலும்பை எடுத்து வேறொரு பெண்ணை இறைவன் படைத்துவிட்டாரோ என்ற சந்தேகம் ஏவாளை வாட்டிவதைத்தது! கணவன் - மனைவியிடையே எழும் சந்தேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் ஊடலாக இருந்துவிட்டால் அது இலக்கிய நயமாகிறது. ஆனால், இதுவே குத்துகின்ற கொடும் வாளாக மாறிவிட்டால் என்னாவது?

## வீட்டில் சாப்பிடாவிட்டால் வெளியில்தானே சாப்பிட வேண்டும்

மனைவி தன்மீது சந்தேகப்படுவதை வெறுத்த கணவர், அவளை வெறுத்து, அவளுடன் தாம்பத்திய உறவுகொள்வதை நிறுத்திக் கொண்டார். மனைவிக்குச் சந்தேகம் வலுவடைந்தது. "என் கணவர் வீட்டிலே சாப்பிடவில்லை, அப்படியானால் அவர் எங்கோ வெளியே சாப்பிடுகிறார் என்றுதானே அர்த்தம்" என்று எண்ணினாள்.

## மனைவி வயிற்றுள் கருவி பொருத்திய கணவன்

சந்தேகம் என்று வந்துவிட்டால் அது எப்படிப்பட்ட விபரீதங்களைக் கொண்டுவரும் என்பதற்கு பத்திரிகையில் வெளிவந்த இச்செய்தி ஓர் உதாரணம்.

"மனைவியின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்காக அவரது வயிற்றுக்குள் கருவி பொருத்திய கணவன்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகரின் காசியாபாத் பகுதியைச் சேர்ந்த ஓர் இளம் பெண் தனது கணவருக்கு எதிராக நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், "எனக்கும் முகம்மது பயாஸ் என்பவருக்கும் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடந்தது. ஒருநாள் இரவு நீதிபதி அக்ரம் ஆசாத் என்பவருடன் குடிபோதையில் வந்த என் கணவர், என்னை அந்த நீதிபதியுடன் உல்லாசமாக இருக்கும்படி வற்புறுத்தினார். இதற்கு நான் மறுத்ததால் என் கணவரின் ஒத்துழைப்புடன் நீதிபதி என்னை வல்லுறவுபுரிந்தார். இந்தச் சம்பவத்திற்குப் பிறகு பல ஆண்களை வீட்டுக்கு அழைத்துவந்த அவர், தன் கண்முன்னால் அவர்களால் நான் வன்புணர்வுக்கு ஆளாவதை வேடிக்கை பார்ப்பதில் இன்பம் அடைந்தார்.

இப்படிப் பலருக்கு என்னை அவர் விருந்தாக்கியதால் வெறுத்துப்போன நான் அவரை விட்டுப்பிரிந்து தாய் வீட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டேன். ஒரு நாள் சமாதானம் பேசுவதாகச் சிலருடன் வந்த அவர், என் முகத்தில் ஒருவித நச்சுப்புகையை பாய்ச்சினார். நான் மூர்ச்சையாகி விட்டேன். கண்விழித்துப் பார்த்தபோது ஒரு தனியார் மருத்துவமனைக் கட்டிலில் கிடந்தேன். அடிவயிற்றில் தையல்கள் போடப்பட்டிருந்தன. கடுமையான வலியும் வேதனையும் ஏற்பட்டது.

பின்னர் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில் வாகனங்கள் எங்கிருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கும் ஒருவித கண்காணிப்புக் கருவியை என் வயிற்றுக்குள் பொருத்தியுள்ளது தெரியவந்தது. நான் எங்கே இருக்கிறேன்? என்ன செய்கிறேன்? என்று கண்காணிப்பதற்காக இத்தகைய கீழ்த்தரமான காரியத்தில் ஈடுபட்ட முகம்மது பயாஸ்மீது நடவடிக்கை எடுக்கும்படி உள்ளூர் பொலிசாரிடம் முறைப்பாடு அளித்தேன். ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை" என்று கூறியுள்ளார். இந்த மனுவை விசாரித்த காசியாபாத் மாவட்ட மேலதிக நீதிபதி, பாதிக்கப்பட்ட பெண்ணின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்தி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டுள்ளார். (நன்றி - உதயன் -23.4.2014)

**சந்தேகக் கோடு – அது சந்தோசக் கேடு!**

**"சந்தேகக் கோடு அது சந்தோசக் கேடு - இதை**
**மறந்தவர் வீடு துன்பம் வளர்ந்திடும் காடு!"**

இத்தகைய சந்தேகப் பிராணிகளைப் பார்த்துப் பவுலடியார் கூறுகிறார், "கணவன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யட்டும்; அவ்வாறே, மனைவியும் கணவருக்குச் செய்யட்டும். கடமையை மறுக்காதீர்கள்" (1 கொரி 7: 3-5) என்கிறார்.

**"கதைகட்ட ஒருவன் பிறந்துவிட்டால் - அந்தக்**
**கண்ணகி வாழ்விலும் களங்கமுண்டு,**
**காப்பாற்றச் சிலர் இருந்துவிட்டால்**
**கள்வர்கள் வாழ்விலும் நியாயமுண்டு"**

என்ற திரைப்பட பாடலின் கருத்தைச் சிந்திப்போம்.

குடும்ப வாழ்வில் சந்தேகம் வந்துவிட்டால் அது கணவன் மனைவி இருவருக்குமே தீராத தலைவலியாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான் சந்தேகக் கோடு - அது சந்தோசக் கேடு! என்று சொன்னார்கள்.

## IV. குடிவெறிப் பேய்

குடும்பத்தை நாசமாக்கும் கொடூரப் பேய்களுள் ஒன்று குடிப்பழக்கம். 'குடி குடியைக் கெடுக்கும்' என்று அறிந்தும் குடித்துக் குடித்துக் குடியைக் கெடுத்து, தம்மையும், தமது குடும்பத்தையும் குட்டிச்சுவராக்கும் நபர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளளது. இது உளவியல் நோக்கில் தனிமனிதப் பிரச்சினையாக – பிறழ்வுப் பிரச்சினையாக இருக்கின்ற அதேவேளை, இரு ஒரு சமூகப் பிரச்சினையாகவும் உருவெடுக்கின்றது. 'குடிமகன்'கள் 'வெறும் குடிமக்களாக' அல்ல, 'பெருங்குடி மக்களாக' இருப்பதனால் பல குடும்பங்கள் இன்று குழப்பத்தில் மூழ்கியுள்ளன.

### காரணங்கள் எப்போதும் இருக்கும்

குடிப்பதற்கு சிலருக்கு காரணம் தேவையில்லை. சந்தர்ப்பத்திற்கு ஏற்றமாதிரி காரணங்களைக் கண்டுபிடித்துவிடுவார்கள். கல்யாண வீட்டில் "சந்தோசத்தில் குடிக்கிறேன்" என்பார்கள். செத்தவீட்டில் "கவலையில் குடிக்கிறேன்" என்பார்கள். கிறிஸ்மஸ் விழாவில்? "இயேசு பிறந்தது மகிழ்ச்சி, அதுதான் குடிக்கிறேன்" என்பார்கள். பெரிய வெள்ளிக்கிழமையில்? "இயேசு செத்தது கவலை, அதுதான் குடிக்கிறேன்" என்பார்கள். குடிக்கு அடிமையாகிப்போனவர்களுக்கு 'குடிப்பதற்கான காரணங்கள்' எப்போதும் இருந்துகொண்டே இருக்கும்.

"காரணம் இல்லாம குடிக்கமாட்டேன்னு சொன்னீங்களே, இப்ப ஏன் குடிச்சிங்க…?" என்றாள் மனைவி. "றொக்கற் விடுறதுக்கு போத்தல் வேணும் என்று பையன் கேட்டான். அதுதான்" என்றான் கணவன்.

### மது அருந்துவதற்கான காரணங்கள்

மது அருந்துவதற்கான பொதுவான காரணங்களை உளவியலாளர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். அறியும் ஆவல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகபாடிகளின் தூண்டுதல், வாழ்க்கையில் ஏற்படுகின்ற தூண்டுதல் (காதல், கல்வி, தொழில்), மற்றவர்களால் புறக்கணிக்கப்படல் (மனைவி, சகபாடிகள், பிள்ளைகள்), தொழில் ரீதியான தோல்விகள் அல்லது வருத்தங்கள், விருந்துபசாரங்கள், போலிக் கௌரவம், உடல் களைப்புக்கு நிவாரணியாகக் கருதுதல், பொழுதுபோக்கின்மை, தொழிலின்மை என இக்காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

## குடிவெறியின் விளைவுகள்

மது அருந்துவதால் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பலவித விளைவுகள் ஏற்படுகின்றன. வயிற்றுப் புண், கல்லீரல் பாதிப்பு, இதய நோய்கள், போசாக்குக் குறைபாடு போன்றவற்றை உடல் ரீதியான விளைவுகளாகக் குறிப்பிடலாம்.

உளவியல் ரீதியான விளைவுகளாக, மனச்சோர்வு, குற்ற உணர்வு, உற்சாகம் ஏற்பட்டது போன்ற பொய்த்தோற்றம், தாழ்வுமனப்பான்மை, சிதைந்த நினைவாற்றல், சிந்தனைத் தடுமாற்றம், குற்றங்களை வெளிப்படையாகப் போற்றும் நிவாரணி, சுயமதிப்பீடு குறைதல், உறவுகளால் அந்நியப்படல், அடையாளக் குழப்பம் என இந்த விளைவுகளைப் பட்டியல்படுத்தலாம்.

## இப்படியொரு விளம்பரம்

**மது அருந்துங்கள், சிகரட் புகையுங்கள்,**
**பான் மசாலா சாப்பிடுங்கள், பரிசுகளை வெல்லுங்கள்..!**

முதல் பரிசு - மரணம்
இரண்டாம் பரிசு - புற்றுநோய்
மூன்றாம் பரிசு - காசநோய், பக்கவாதம்
ஆறுதல் பரிசு - பண நஸ்டம்
பரிசுகள் 100% உத்தரவாதம்

## குடிப்பவர்களால் அவதியுறும் குடும்பங்கள்

குடிப்பவர்கள் தம்மை அழித்துக்கொள்வதோடு தாம் சார்ந்திருக்கும் குடும்பத்தையும் அழிவுப் பாதைக்குள் இட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கின்றனர். குடிபோதைக்கு அடிமைப்பட்ட ஒரு குடும்பத்தலைவனால் அவனது மனைவி, பிள்ளைகள் படும் துன்பங்கள் ஏராளம்.

ஒருமுறை மறைகல்வி வகுப்பில் ஒப்புரவு அருட்சாதனத்தைப்பற்றி வகுப்பு நடத்திக்கொண்டிருந்தபோது ஒரு சிறுமி அழ ஆரம்பித்தாள். மறையாசிரியர் அவரிடம் காரணம் கேட்டார், "என் அப்பா தினமும் குடித்துவிட்டு என்னையும் என் அம்மாவையும் போட்டு அடிக்கிறாரு. பூசைக்கு வாரதே இல்லை. என் அப்பாவுக்கும் சேர்த்து நான் பாவசங்கீர்த்தனம் செய்யலாமா?" என்று கேட்டபோது அந்த மறையாசிரியரின் கண்கள் குளமாயின.

## குடிவெறியில் இருந்து வெளிவரலாம்

மதுவுக்கு அடிமைப்பட்ட நிலையை ஓர் தீய பழக்கம் என்று பார்ப்பதைவிட அது ஒரு நோய் என்ற நிலையிலேயே இன்று பார்க்கப்படுகின்றது, அணுகப்படுகின்றது, சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

குடிபோதைக்கு அடிமைப்பட்டவர்களை பல நிலைகளில் வைத்து நோக்கலாம். ஆரம்பக் கட்டத்தில் இருப்பவர்கள் தமது உறுதியான தீர்மானத்தின் மூலம் இப்பழக்கத்தில் இருந்து வெளிவரலாம். அதிக காலம் இதற்கு அடிமைப்பட்டவர்கள் தமது முயற்சியால் இதிலிருந்து வெளிவர முடியாதவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு மற்றவர்களின் உதவி தேவை. இப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் நிலையங்கள் உள்ளன. அங்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொள்வதன் மூலம் இப்பழக்கத்தில் இருந்து வெளிவரலாம்.

பெர்னாட்சா உலகப்பிரசித்திபெற்ற எழுத்தாளர். ஒருமுறை விருந்தில் கலந்துகொண்ட பெர்னாட்சாமுன் ஓர் அழகிய பெண் மதுக்கோப்பையை நீட்டி, 'அருந்துங்கள்' என்றார். பெர்னாட்சா, "நான் மது அருந்துவதில்லை" என்றார். அப்பெண், "ஏன் நீங்கள் மது அருந்துவதில்லை" என்று கேட்டதற்கு, "என் முன்னோர்கள் என் பங்கிற்கும் சேர்த்து அருந்திவிட்டார்கள்" என்று பதிலளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 9

# மனித உயிரும் குடும்பமும்



உயிரைப் பிறப்பிக்கும் ஆண்டவருக்கே அந்த உயிரின்மேல் அதிகாரம் உண்டு. அதை எந்த மனிதனும் பறிக்கமுடியாது. இன்று கருவழிப்பு அல்லது கருச்சிதைவு என்பது சாதாரணமானதாக மாறிவிட்டது. இது விடயத்தில் குடும்பங்கள் தமது ஆழ்ந்த அக்கறையைச் செலுத்த வேண்டும்

## கருவழிப்பு என்றால் என்ன?

கருக்கலைப்பு என்ற வார்த்தையைவிட கருவழிப்பு (abortion) என்ற வார்த்தையே பொருத்தமானதாக உள்ளது. ஏனெனில் கருக்கலைப்பு என்பது கரு தானாகவே கலைந்துபோகின்ற கருத்தைக் கொடுக்கின்றது. கருவழிப்பு என்பது கருவைத் திட்டமிட்டு அழிக்கின்ற ஒரு செயலாக அமைகிறது.

கருவழிப்பு என்பது மனிதத் தலையீட்டினால் தாயின் கருவறையிலிருந்து உருவான கருவை வெளியேற்றுவதாகும். கருவறையிலே கருவை கொலைசெய்து வெளியேற்றல் அல்லது கருவை உயிருடன் வெளியேற்றி அது இறந்துவிட அனுமதித்தல் ஆகிய இரு வகைகளில் கருவழிப்பு நடைபெறலாம்.

## இரண்டுவகைக் கருவழிப்புக்கள்

கருவழிப்பினை நேரடியான கருவழிப்பு, மறைமுகக் கருவழிப்பு என இரு வகைப்படுத்தலாம். நேரடிக் கருவழிப்பு என்பது தாயின் கருவறையில் உண்டான கருவை அழிக்கவேண்டும் என்ற நேரடி எண்ணத்தோடு செயற்படுவதாகும். உதாரணமாக திருமணமாகாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரித்த ஒரு இளம் பெண் தனது மானத்தைக் காப்பாற்றுவதற்காக தன்னில் உருவான கருவை அழித்தல்.

மறைமுகக் கருவழிப்பு என்பது கருவறையில் உண்டாகிய கருவை அழிப்பதை நேரடியான நோக்கமாகக் கொண்டிராமல் வேறோரு செயலைச் செய்யுமிடத்து அது அழிந்துவிடும் என்று தெரிந்திருந்தும் அதைச் செய்து கரு அழிந்துவிட அனுமதித்தல் ஆகும். உதாரணமாக குழந்தை உண்டாக கருவறையில் புற்றுநோய் காணுமிடத்து அக்கருவையை அகற்றல்.

## மனஉறுத்தலற்ற நிலை

14 வயது நிரம்பிய ஓர் இளம்பெண் மருந்துக் கடைக்குச் சென்று கருத்தடை மாத்திரைகளைக் கேட்டாள். மருந்துக் கடைக்காரர் அதிர்ச்சியடைந்து "இந்த வயசிலே உனக்கு எதற்குக் கருத்தடை மாத்திரை?" என்று கேட்டதற்கு அவள் "கருத்தடை மாத்திரை எனக்கல்ல, எனது தங்கச்சிக்கு என்றாளாம்.

இக்காலத்தில் பெரும்பான்மையான மக்கள் எவ்வித மன உறுத்தலுமின்றிக் கருத்தடை மாத்திரைகளையும் ஏனைய செயற்கைமுறைக் கருத்தடை சாதனங்களையும் பயன்படுத்துகின்றனர். இந்நிலையில் கருத்தடை வேறு, கருச்சிதைவு வேறு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கரு உண்டாகாமல் தடை செய்வது கருத்தடை. ஆனால், ஏற்கனவே உண்டான கருவை வெளியேற்றுவது கருவழிப்பு அல்லது கருச்சிதைவு. இயற்கை முறையைப் பின்பற்றாமல், செயற்கை முறையைப் பின்பற்றிக் கருத்தடை செய்வது பாவம். ஆனால் கருவழிப்புச் செய்வது பாவம் மட்டுமல்ல, அது ஒரு மாபெரும் பாதகமாகும்.

கருவழிப்பை ஒரு சிலர் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஒரு வழியாகப் பயன்படுத்துவது முற்றிலும் தவறானது. கண்டனத்திற்குரியது. கருவழிப்புச் செய்பவர்களுக்கும், அதற்கு நேரடியாக ஒத்தழைப்பவர்களுக்கும் திருச்சபைச் சட்டம் 'திருச்சபை உறவு ஒன்றிப்பிலிருந்து நீக்கம்' என்ற தண்டனையை விதிக்கிறது என்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக (திச 1398). அவர்கள் நற்கருணை திருவிருந்தில் பங்கேற்கக்கூடாது.

## கருத்தரித்தலும் கருவழிப்பும்

தாயின் கர்ப்பப் பையிலிருந்து தானாக வெளியேற முடியாத கருவை மனிதனின் தலையீட்டால் வெளியேற்றுவது கருவழிப்பாகும். இங்கே கருத்தரித்தலைப் பற்றியும் கருச்சிதைவைப் பற்றியும் சுருக்கமாக விவரிப்பது அவசியமாகிறது.

ஆண் உயிரணு (Sperm) பெண் சினை முட்டை (Ovum) ஊடுருவி இரண்டும் ஒன்றாகக் கலத்தலுக்குக் கருத்தரித்தல் (Conception) என்று பெயர். இச்செயல் பெண்ணின் சினைக் குழாயில் (Fallopian tube) தொடங்குகிறது. சினைக்குழாயில் உண்டான கரு 2, 8, 16 என்று கருப்பையை நோக்கி வந்து, அதன் உட்சுவரில் ஒட்டிக்கொண்டு வளர்கிறது. 30 நாள்களில் இது பல மில்லியன் செல்களாகி, பல உறுப்புகளாகி 50வது நாளில் ஆண் - பெண் வேறுபாடு தோன்றுகிறது.

கரு உண்டாகி 18வது வாரத்தில் நகம், மயிர் போன்றவை வளர ஆரம்பிக்கிறது. 30வது வாரத்தில் சிசுவின் இதயத் துடிப்பைக் கேட்கலாம். இவ்வாறு குழந்தை, கருப்பையில் உள்ள பனிக்குட நீரில் (amniotic fluid) தலைகீழாக வளர்ந்து 9வது மாதத்தில் முழு வளர்ச்சி அடைந்து 10வது மாதத்தில் தாயின் வயிற்றிலிருந்து வெளியேறுகிறது.

## கருவிலேயே மனித ஆளுமை உருவாகிறது

கருவுற்ற சினைமுட்டை எப்போது மனித ஆளுமையையும், அழியா ஆன்மாவையும் பெற்று ஒரு தனிநபர் என்ற நிலையை அடைகிறது? இக்கேள்விக்கு அறிஞர்களிடையே பல்வேறு மாறுபட்ட பதில்கள் நிலவுகின்றன. அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக இச்சிறு கட்டுரையில் விவரிப்பது சாத்தியமில்லை

இருப்பினும் ஒரே ஒரு கருத்தை மட்டும் இங்கு சொல்லவேண்டியது அவசியமாகிறது. அதாவது கருவுற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினைமுட்டை சினைக்குழாயிலிருந்து மெல்ல மெல்ல நகர்ந்து தாயின் கருப்பையில் ஒட்டிக்கொள்வதற்கு ஏறக்குறைய இரண்டு வாரங்கள் ஆகின்றன. அதன் பிறகே கருவில் ஆன்மா செலுத்தப்படுகிறது (ensoulment). கருவானது தாயின் கருப்பையில் ஒட்டாதவரை அதை ஒரு தனிமனித ஆளாகக் கருதமுடியாது. எனவே, கருவுற்ற சினைமுட்டை கருப்பையை அடைவதற்கு எடுத்துக்கொள்ளும் இரண்டு வாரங்களுக்குள் அதை வெளியேற்றுவதைச் சரியான பொருளில் கருவழிப்பு என்று சொல்ல முடியாது என்று வாதிடும் அறிஞர்கள் உள்ளனர்.

## திருச்சபையின் நிலைப்பாடு

திருச்சபையானது அறிஞர்களுடைய வெறும் கருத்துக்களையும், ஊகங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு மனித உயிருடன் விளையாட விரும்பவில்லை. மனித உயிரைப் பொறுத்தமட்டில் திருச்சபை மிகவும் பாதுகாப்பான ஒரு நிலைப்பாட்டை எடுக்கிறது. அதற்கேற்ப கருவான கணத்திலிருந்தே மனித உயிர் தோன்றுகிறது. கருவுற்ற சினைமுட்டை மனித ஆன்மாவையும், ஆளுமையையும் பெறுகின்றது. கருவுற்ற சினைமுட்டையில் ஒரு மனித ஆளுக்கான எல்லாவித அடிப்படைக் கூறுகளும் உள்ளன. எனவே, தொடக்கத்திலிருந்தே மனித உயிர் புனிதமானது. கடவுளின் சாயலைப் பெற்றுள்ள கருவை அழிப்பது 5ஆம் கட்டளைக்கு எதிரான கொடிய கொலைக்குற்றமாகும். இக்கருத்தை ஐயத்திற்கு இடமின்றி அறிக்கையிட்டுள்ளது இரண்டாம் வத்திக்கான் சங்கம்.

"ஆண்டவராகிய கடவுள் உயிரைக் காக்கும் உன்னதப் பணியை மனிதரிடத்தில் ஒப்படைத்துள்ளார். கருவானதிலிருந்து (from the moment of conception) உயிரை மிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். கருச்சிதைவு மற்றும் குழந்தைக் கொலை ஆகியவை கொடிய குற்றமாகும்" (இன்றைய உலகில் திருச்சபை, எண் 51)

அழியாத்தன்மை கொண்ட ஆன்மா உடனடியாகவும், நேரடியாகவும் கடவுளால் படைக்கப்படுகிறது என்று கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி எடுத்துரைக்கிறது. (எண் 366). திருச்சபைச் சட்டமும் சிதைவுற்றக் கருக்கள் உயிரோடிருப்பின் இயன்றவரை அவற்றிற்கு திருமுழுக்கு அளிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறது (திச 871)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவார்த்தை பேசுகின்றது

விவிலிய ஒளியில் கரு மனித உயிர் என்ற உண்மை புலனாகிறது. கடவுள் மனிதரை அவர்தம் தாயின் கருவில் உருவாகும்போதே தெரிவுசெய்கின்றார்.

கருவைப் பல்வேறு நிலைகளில் வளரச்செய்கின்றார். மரியன்னையின் கருப்பையில் இருந்த இயேசுவை அவர் கருவான ஒருசில நாள்களிலே, எலிசபெத் கருப்பையில் இருந்த திருமுழுக்கு யோவான் அடையாளம் கண்டு மகிழ்ச்சியால் துள்ளினார். இரு தாய்மார்கள் பேசும்போது இன்னும் பிறக்காத இரு குழந்தைகள் பேசிக்கொள்கின்றன.

கடவுள் இறைவாக்கினர் எரேமியாவுக்குக் கூறியது: "தாய் வயிற்றில் உன்னை உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்கு முன்னே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்" (எரே 1:15). தாயின் கருவில் மனிதர் வியத்தகு முறையில் உருவாகுவதை திருப்பா சிறப்பான முறையில் எடுத்துரைக்கிறது.

"என் உள்உறுப்புக்களை உண்டாக்கியவர் நீரே. என் தாயின் கருவில் எனக்கு உருத்தந்தவர் நீரே." (திபா139:13)

வாழ்வளிக்கும் வள்ளலாகிய கிறிஸ்துவை அவர்தம் தாயின் கருப்பையில் இருக்கும்போதே கண்டு களிகூர்கிறார் திருமுழுக்கு யோவான். மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபோது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது (லூக் 1:41).

## கருவறையயில் கல்லறை கட்டுவதா?

கருச்சிதைவின் பயங்கரமான அச்சம் தாயின் கருவறையே குழந்தையின் கல்லறையாக மாறிவிடுகின்றது. கொடுமையிலும் கொடுமை! அப்பா, அம்மா செய்த தவறிற்காகக் குழந்தை பிறக்கும்முன்பே மரணதண்டனை பெறுகிறது. "ஒரு தாயே தன் குழந்தையைக் கொல்ல முடியும் என்றால் மனிதன் மனிதனைக் கொலை செய்வதிலிருந்து யார் தடுக்க முடியும்?" என வினா எழுப்புகிறார் அன்னை தெரசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனச்சாட்சி இல்லாத மருத்துவர்கள்

கருச்சிதைவுக்காக மருத்துவர்கள் பயன்படுத்தும் வெவ்வேறு முறைகளைப் பார்த்தால் நமது இரத்தம் உறைந்துவிடும். குழந்தைகளைத் தாயின் வயிற்றிலிருந்து துண்டுதுண்டுகளாக வெட்டி வெளியே இழுத்துக் குப்பைத் தொட்டியில் போடும் பயங்கரத்தைப் பார்க்கும்போது மருத்துவர்கள் மனிதர்களா? அல்லது மனித வடிவில் உலாவும் பேய்களா? எனக் கேட்கத் தோன்றுகிறது. பணத்துக்காகச் சிசுக்கொலை செய்யும் மனிதர்களுக்கு மனச்சாட்சி உண்டா? ஒரு மருத்துவமனையில் பெரிய உயிரைக்காக்கும் பொருட்டுப் போராடும் மருத்துவர்கள் அதே மருத்துவமனையில் ஒரு சின்ன உயிரைச் சின்னாபின்னமாக்கும் கொடுவினையை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்? உயிரைக்காப்பாற்றுவதே மருத்துவர்கள் பணி. உயிரை அதுவும் சிசுவைக் கொலைசெய்வது அவர்கள் பணி அல்ல. தாயின் கருப்பையில் இருக்கும் கரு முழு வளர்ச்சி அடைந்து பிறப்பதற்கு உரிமையைக் கொண்டுள்ளது. இந்த உரிமை எவராலும் பறிக்கமுடியாத அடிப்படையான, புனிதமான உரிமையாகும்.

## கருவழிப்பு ஒரு இனப்படுகொலை!

ஹிட்லர் 10 மில்லியனுக்கு அதிகமான மக்களைக் கொன்ற மிருகத்தனமான செயல் இனப்படுகொலை என்றழைக்கப்படுகிறது. கருச்சிதைவால் பல மில்லியன் குழந்தைகள் அழிக்கப்படுவதை இனப்படுகொலை என்று கூறினார் திருத்தந்தை இரண்டாம் ஜான்பால், மாசில்லாக் குழந்தைகளைக் கொலைசெய்தான் கொடுங்கோல் மன்னன் ஏரோது. கருவழிப்பு செய்பவர்களை நவீன ஏரோதுக்கள் என்றுதான் அழைக்க வேண்டும்.

முடிவாக, திருச்சபையின் போதனையைப் பின்பற்றிச் சாவுக்கலாச்சாரத்திற்குச் சாவுமணி அடித்து வாழ்வுக் கலாச்சாரத்தைத் தூக்கி நிறுத்துவோம். உயிர்க்கு எதிராக அல்ல, உயிருக்காகப் போராடும் புனிதக் கடமையை நிறைவேற்றுவோம். “மாந்தர் வாழ்வு பெறும் பொருட்டு, அதை நிறைவாகப் பெறும்பொருட்டு இயேசுக் கிறிஸ்து இவ்வையகம் வந்தார்” (யோவா 10: 10). மண் ஒருபோதும் மரத்தைப் பாரமாகவோ, மரம் காயைப் பாரமாகவோ கருதுவதில்லை. அப்படியிருக்க, தாய் மட்டும் சேயை ஏன் பாரமாகக் கருத வேண்டும்? குழந்தை தாயின் சுகமான சுமையல்லவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 10

# தடம் பதிக்கும் தம்பதியர்



## இல்லற வாழ்வு ஒரு இறை அழைத்தல்

இல்லற வாழ்வுக்கு மனிதர்களை இறைவன் அழைத்து அவர்கள் உலகினரிடையே புளிக்காரம் போன்று தனித்தன்மையோடு வாழத் தம் அருளை வழங்குகிறார். இந்த அழைப்பை விடுப்பதன் வழியாக இறைமக்கள் தங்களது குடும்ப வாழ்வில் நிறைவான, நிலையான பற்றுறுதிகொண்டு வாழ்வதற்கும் பிரமாணிக்கமும் தியாகமும் வெளிப்படும் சாட்சிய வாழ்வைத் தொடர்வதற்கும் இறைவன் தம் ஆற்றலை அளித்து வழிநடத்துகிறார்.

இதனால், குருத்துவ மற்றும் துறவற வாழ்வுக்கு இறைமக்கள் அழைக்கப்படுவது போன்றே இல்லற வாழ்வுக்கும் இறைமக்கள் இறைவனால் சிறப்பாக அழைக்கப்படுகின்றனர் என்பது தெளிவாகிறது. மணவாழ்வின் உரிமைகள் கணவன், மனைவி இருவருக்கும் சமமானவை. இதை பவுலடியார் பின்வருமாறு விளக்குகிறார், "கணவர் தம் மனைவிக்கு மண வாழ்க்கைக்குரிய உரிமைகளைக் கொடுக்க வேண்டும். அதுபோல மனைவிக்கு தம் உடலின்மேல் அதிகாரம் இல்லை, கணவனுக்கே அந்த அதிகாரம் உண்டு. அப்படியே கணவருக்குத் தம் உடலின்மேல் அதிகாரம் இல்லை. மனைவிக்கே அந்த அதிகாரம் உண்டு. மணவாழ்க்கைக்குரிய உரிமைகளை ஒருவருக்கொருவர் மறுக்காதீர்கள்" (1கொரி 7:3-5).

## மன ஒற்றுமையின் இனிய நுகம்

கணவனும் மனைவியும் வாழ்வின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், நிலைகளிலும் இணைந்தே இருக்க வேண்டும். இன்பத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்திலும், உடல் நலத்திலும் நோயிலும், வெற்றியிலும் தோல்வியிலும், ஏற்றத்திலும் ஏமாற்றத்திலும், எழுச்சியிலும் வீழ்ச்சியிலும், இனிப்பிலும் கசப்பிலும், சுவையிலும் சுமையிலும் இருவரும் இணைந்தே இருக்க வேண்டும்.

"மன ஒற்றுமையின் இனிய நுகத்தாலும், சமாதானத்தின் முறிவுறாத பிணைப்பாலும் மணமக்களை இணைத்தருளினீர்" என்று திருமணத் திருப்பலியில் செபிக்கின்றோம். இரண்டு மாடுகளை வண்டியில் பூட்டும்போது இரண்டு மாட்டையும் இணைக்கும் தடியை 'நுகம்' என்று அழைக்கின்றோம். கணவன் மனைவியை இணைக்கும் நுகத்தை "மன ஒற்றுமையின் இனிய நுகம்" என்ற பெயரால் திருச்சபைத்தாய் அழைப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது!

## தோலை அல்ல ஆளை விரும்பும் அன்பு வேண்டும்

ஒரு பெண் தன் ஆதங்கத்தைக் கூறும்போது, "என் கணவர், என் இதயத்தை மட்டும் இன்னும் தொடவில்லை. அவர் என்னிடத்தில் எலும்பைத் தேடினாரே தவிர இதயத்தை தேடவில்லை. தோலை விரும்பும் அன்பு உண்மையான அன்பல்ல" என்றார். ஆளை விரும்பும் அன்பே உண்மையான அன்பாகும். அன்பின் நாகரிகம் அனைவருக்கும் தேவை என்றாலும் அது மணமக்களுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது.

கிறிஸ்துவின் அன்பு தன்னலமற்ற அன்பு. "மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும் பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்" (மாற்: 10:45). கிறிஸ்துவின் அன்பு மணமக்களை ஆட்கொள்வதாக!

## பரிசுப்பொருளை பரிமாறிய தம்பதியர்

மார்ட்டின், ஸ்டெல்லா என்ற இருவரும் ஒருவர் ஒருவரைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டனர். முதல் கிறிஸ்மஸ் வந்தது. ஒருவர் ஒருவருக்கு அன்பளிப்பு வழங்க விரும்பினர். ஆனால், அவர்களிடத்தில் பரிசு வாங்கப் பணமில்லை. ஸ்டெல்லாவுக்கு அழகிய, நீண்ட கூந்தல் இருந்தது. ஆனால், கூந்தலுக்குத் தேவையான ஒப்பனை, வாசனைப் பொருட்கள் வாங்க அவளிடம் காசு இல்லை. மார்ட்டினிடம் நல்ல கைக்கடிகாரம் ஒன்று இருந்தது. ஆனால், அதைக் கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிக்கொள்ள பொருத்தமான செயின் இல்லை. இந்நிலையில் ஸ்டெல்லா தன் அழகிய கூந்தலை வெட்டி, அதை விற்றுத் தன் கணவருடைய கைக்கடிகாரத்திற்கு தேவையான செயின் வாங்குகிறாள். மார்ட்டினோ என்ன செய்வதென்று அறியாமல் தன் கைக்கடிகாரத்தை விற்று, அவள் கூந்தலுக்குத் தேவையான ஒப்பனைப் பொருட்களை வாங்கிவிடுகின்றான்.

இருவருமே பரிசுப் பொருட்களைப் பரிமாறிக்கொண்டபோது அவளிடம் கூந்தல் இல்லை. அவனிடமோ கைக்கடிகாரம் இல்லை. இருப்பினும், அவர்களின் காதல் கனிகின்றது. அவர்களுடைய தன்னலமற்ற தியாகப் பண்பு சுடர்விட்டு ஒளிர்கிறது.

## மாறிப் பிறந்து விட்டால்..?

பெர்னாட்ஸாவிடம் ஒரு நடிகை, "நாம் இருவரும் திருமணம் செய்துகொள்ளலாம்" என்றாள். "செய்துகொண்டால்....." என்றார் பெர்னாட்ஸா. "என்னைப்போல் அழகும், உங்களைப்போல் அறிவுமுள்ள பிள்ளை பிறக்கும் இல்லையா?" என்றாள் நடிகை. உடனே பெர்னாட்ஸா, "மாறிப் பிறந்துவிட்டால் என்ன ஆவது?" என்றார். நாம் எதிர்பார்ப்பது போன்று எப்பொழுதும் வாழ்க்கை அமைவதில்லை.

## விவிலியத் தம்பதியர்!

விவிலியத்தில் சில வித்தியாசமான தம்பதியரைப் பார்க்கின்றோம். தம்பதியர் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கும் விவிலியத்தில் எடுத்துக்காட்டுக்கள் உள்ளன, எவ்வாறு வாழக்கூடாது என்பதற்கும் சில எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. நல்லவற்றைப் பின்பற்றி, அல்லவற்றைத் தவிர்க்க மணவாழ்வுத் துணைவர்கள் முன்வரவேண்டும்.

### 1. ஆதாம் - ஏவாள்

மனித இனத்தின் முதல் பெற்றோராகத் தொடக்கநூலில் வலம் வருகின்றனர் ஆதாமும் ஏவாளும். இவர்களது மணவாழ்வின் தனிச்சிறப்பே இவர்களது திருமணத்தை 'மந்திரித்தது' கடவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதுதான்! ஆம், கடவுளாலேயே கணவன் - மனைவி என்று ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இவர்கள் மூலமாகத்தான் திருமணமும் புனிதம் அடைந்தது.

“கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர்” என்னும் வாழ்க்கைத் தத்துவமும் இவர்களால்தான் பிறந்தது (தொநூ 2:24).

கணவன் - மனைவியின் மணவாழ்வுச் சிக்கலும் இவர்களில் இருந்தே தொடங்கிவிட்டது எனலாம். விலக்கப்பட்ட கனியை இருவரும் உண்ட பிறகு, கடவுள் ஆதாமை வினவியபோது, “நீர் தந்த அந்தப் பெண்” கனியை எனக்குக் கொடுத்தாள். (தொநூ 3:12) என்று பழியைக் கடவுளிடமும், ஏவாளிடமும் போடுகின்றான் ஆதாம். இன்றும் எத்தனை கணவர்கள் தங்கள் தவறை மறைத்து மனைவியின்மீது பழிசுமத்துகிறார்கள்?

## 2. ஈசாக்கு – ரெபேக்கா

இறைவனால் இணைக்கப்பட்ட இன்னொரு தம்பதியர் இவர்கள். “இச்செயல் ஆண்டவரால் நிகழ்ந்துள்ளது” (தொநூ 24:50) என்று திருமண அழைப்பிதழ்களில் அச்சிடப்படும் வாசகம் இவர்களின் திருமணத்தைத்தான் குறிக்கிறது. பெண்ணின் விருப்பத்தை அறிந்து திருமணம் செய்துவைத்த சிறப்பும் இவர்களின் திருமணத்தையே சாரும். “பெண்ணை அழைத்து அவள் விருப்பத்தைக் கேட்போம்” (24:57) என்று கேட்டு, ரெபேக்கா சம்மதம் தெரிவித்த பிறகுதான் திருமணத்திற்காக அவளை அனுப்பிவைத்தனர்.

ஈசாக்கு – ரெபேக்கா இடையே சிறப்பான அன்புறவு நிலவியது என்பதை விவிலியம் அழகாகத் தெரிவிக்கிறது. “அவர் ரெபேக்காமீது அன்புவைத்திருந்தார். இவ்வாறு தம் தாயின் மறைவுக்குப் பிறகு ஈசாக்கு ஆறுதல் அடைந்தார்.” (24:67). எல்லாத் துயரங்களையும் நீக்கும் ஆற்றல் திருமண அன்புக்கு உண்டு.

## 3. தோபியா – சாரா

புதுமணத் தம்பதியர் பின்பற்றவேண்டிய சிறந்த மாதிரி இவர்கள். திருமண முதலிரவில் இறைவேண்டல் புரிந்த வித்தியாசமான இணை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோபியாவின் முதலிரவு வேண்டல் எல்லாரும் பின்பற்ற வேண்டிய ஒன்று.

"எங்கள் மூதாதையரின் இறைவா போற்றி. உமது பெயர் என்றென்றும் எல்லாத் தலைமுறைகளுக்கும் போற்றி! வானங்களும் உம் படைப்பு அனைத்தும் எக்காலமும் உம்மைப் போற்றுக! நீர் ஆதாமைப் படைத்தீர். அவருடைய மனைவி ஏவாளை அவருக்குத் துணையாகவும் ஆதரவாகவும் உண்டாக்கினீர். அவர்கள் இருவரிடம் இருந்தும் மனித இனம் தோன்றியது. 'மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று, அவனுக்குத் தகுந்ததொரு துணையை உருவாக்குவோம்' என்று உரைத்தீர். இப்பொழுது என் உறவினள் இவளை நான் மனைவியாக ஏற்றுக்கொள்வது இச்சையின் பொருட்டன்று, நேர்மையான நோக்கத்தோடுதான். என்மீதும் இவள்மீதும் இரக்கம் காட்டும். நாங்கள் இருவரும் முதுமை அடையும்வரை இணைபிரியாது வாழச்செய்யும்" (தோபி 8:5-8) இருவரும் ஆமென், ஆமென் என்று கூறினர்.

திருமண ஆண்டு நிறைவுநாள்தோறும் இச்செபத்தைத் தம்பதியர் செபிக்கலாமே!

## 4. பிரிஸ்கா – அக்கிலா

புதிய ஏற்பாட்டில் காணக்கிடைக்கும் இலட்சியத் தம்பதியர் இவர்கள். பொதுநிலையினரின் மறைபரப்புப் பணியின் முன்னோடிகள். "கிறிஸ்து இயேசுவுக்காக என்னோடு சேர்ந்து உழைக்கின்றவர்கள்" (உரோ 16:3) என்று பவுலடியார் இவர்களைப் பற்றித்தான் பெருமையோடு எழுதினார்.

பவுலின் உயிரைக் காக்க தலைகொடுக்கவும் இவர்கள் முன்வந்ததாக நன்றியுடன் குறிப்பிடுகிறார் பவுல். இவர்கள் வீட்டில் தொடக்கத் திருச்சபையினர் செபிக்கவும், உறவாடவும் ஒன்றுகூடினர் என்பது பெருமிதமான செய்தி (உரோ 16: 5).

சொல்வன்மை மிக்கவரும் மறைநூல்களில் புலமை வாய்ந்தவருமான அப்பொல்லோ எபேசு நகருக்கு வந்தபோது இவர்கள் அவரின் உரையைக் கேட்டார்கள். பிறகு "அவரை அழைத்துக்கொண்டுபோய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் நெறியைத் திட்டவட்டமாய் விளக்கினர். சகோதர சகோதரிகள் அவரை ஊக்கப்படுத்தி, ஏற்றுக்கொள்ளுமாறு சீடருக்குக் கடிதம் எழுதினர்" (திப 18: 26 -27).

## 5. அனனியா- சப்பிரா

கடவுளை ஏமாற்றியதற்காக உடனடிச் சாவில் ஒன்றுபட்ட இத்தம்பதியரைத் திருத்தூதர் பணி நூலில் காண்கிறோம். தங்களின் உடமைகளை விற்றுத் திருத்தூதரிடம் பணத்தை ஒப்படைத்தனர் தொடக்கத் திருச்சபையினர். அனனியாவும், சப்பிராவும் தங்கள் நிலத்தை விற்றனர். ஆனால் தமக்கென ஒரு பகுதியை வைத்துக்கொண்டு, மறுபகுதியை திருத்தூதரிடம் ஒப்படைத்தார் அனனியா. தூய ஆவியாரிடம் பொய் சொல்லியதற்காகப் பேதுரு கடிந்துகொண்டபோது கீழே விழுந்து உயிர்விட்டார். அதை அறியாத மனைவி சப்பிராவும் அந்தப் பொய்யில் உடன்பட்டபோது அவளும் உயிர்விட்டாள் (திப 5:1–11).

இறைவனுக்குரியவற்றில் எச்சரிக்கையுடன் செயல்பட அறிவுறுத்துகின்றனர் இத்தம்பதியினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 11



# தாய் தந்தையின் தனித்துவம்

"தந்தையானவர் ஒரு விளக்கின் அகலாகவும், தாய் அதில் உள்ள எண்ணையாகவும் இவர்களின் குழந்தைகள் எரியும் திரிகளாகவும் இருந்தால் அகல் விளக்கின் ஒளிபோல் குடும்பம் பிரகாசிக்கும்" என பலஸ்தீனப் பழமொழி ஒன்று கூறுகின்றது.

பெற்றோர்களின் பெருமையைப் பறைசாற்றும் முதுமொழிகள் நமது சமூகத்தில் நிறையவே உண்டு. "தாயில் சிறந்த கோயிலுமில்லை. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை." "பாலூட்டும் அன்னை அவள் நடமாடும் தெய்வம். அறிவூட்டும் தந்தை நேர் வழிகாட்டும் தலைவன்"

## I. தாயின் வகிபாகம்

"மண்ணுக்கு மரம் பாரமா? மரத்திற்கு இலை பாரமா?
கொடிக்குக் காய் பாரமா?
பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமா?"

### குழந்தை தாய்க்குப் பாரமல்ல!

எல்லோருடைய இடத்தையும் தாயால் நிரப்ப முடியும். ஆனால் தாயின் இடத்தை எவராலும் நிரப்ப முடியாது. "தாயன்பு போன்ற கலப்படமற்ற அன்பு இந்த உலகில் வேறு எங்கும் இல்லை" என்பார் காஞ்சிப் பெரியவர். "என்னுடைய நற்குணங்கள் எல்லாவற்றுக்கும் என் தாய்க்கு நான் கடன்பட்டவன்" என்பார் ஆபிரகாம் லிங்கன்.

"மனித குலத்தின் உதடுகள் உச்சரிக்கும் மிக அழகான வார்த்தை அம்மா! நம்பிக்கையும் அன்பும் நிறைந்த வார்த்தை அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரத்தின்போது ஆறுதல், துன்பத்தில் நம்பிக்கை, பலமின்மையில் பலம் அம்மா! அவளே அன்பு, கருணை, இரக்கம், மன்னிக்கும் பண்பு எல்லாவற்றிற்கும் மூலம். தன் தாயை இழப்பவன் அவனைக் காக்கின்ற ஒரு ஆன்மாவை இழக்கின்றான்'' என்கிறார் கலீல் ஜிப்ரோன்.

## பெண்மையைப் பெருமைப்படுத்திய இறைவன்

காலம் நிறைவுற்றபோது கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார். (கலா 4:5). "இறைவன் கன்னிமரியாளிடம் இருந்து மனித உடலெடுத்ததன் வழியாகப் பெண்ணின் மாண்பை மிக உயர்ந்த விதத்தில் காட்டியுள்ளார்'' என்கிறார் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்.

"பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப்போகுமோ? பால்குடிக்கும் குழந்தையை அவள் மறப்பதுண்டோ, அப்படியே பெற்றவள் தன் பிள்ளையை மறந்துவிட்டாலும் நான் உன்னை ஒருபோதும் மறக்கமாட்டேன்'' (எசா 49:15). இறைவன் தன் அன்பைத் தாயன்போடு ஒப்பிட்டு, தாயன்பையும் தனதன்பு மிஞ்சியது என்கிறார்.

இயேசுக் கிறிஸ்துவுக்கு 'எல்சடாய்' என்ற பெயருண்டு. "தாயைப் போன்ற மாண்புடையவர்'' என்பது இதன் பொருள். தாய்மையைக் காட்ட இப்பெயர் பொருத்தமாகவுள்ளது.

சுவாமி விவேகானந்தரிடம் "தந்தையைவிடத் தாய்க்குத்தான் எல்லா நாடுகளிலும் அதிக மதிப்பளிக்கின்றார்களே, காரணமென்ன?'' என்று கேட்கப்பட்டது. அவர் இரண்டு கிலோ எடையுள்ள கல்லைக் கொடுத்து, 'இதை உன் மடியில் ஒரு வாரம் கட்டியிருந்துவிட்டு, பின் வா, பதில் கூறுகின்றேன்'' என்றார். அவனால் ஒரு மணி நேரம்கூட அதனைக் கட்டியிருக்க முடியவில்லை. "பத்து மாதம் சுமக்கும் தாயின் அந்தப் பொறுமை காரணமாகவே அவள் தந்தையைவிட அதிகம் மதிக்கப்படுகிறாள், வீட்டை ஆள்பவள் தாய்'' என்றார்.

## ஏட்டளவில் நின்றுவிட்ட தத்துவப் பாடல்கள்

"அம்மா என்றழைக்காத உயிரில்லையே. அம்மாவை வணங்காமல் உயர்வில்லையே நேரில் நின்று பேசும் தெய்வம் பெற்ற தாயின்றி வேறில்லை''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலையில் எழுந்ததும் கைதொழும் தேவதை அம்மா, அம்மாவின் அன்புக்குமுன் வானம் பூமி யாவும் சிறியதே...." இவை அனைத்தும் வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படாத வெறும் தத்துவப் பாடல்களாக நின்றுவிடுகின்றன.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாததைப்போல் பல தத்துவப் பாடல்கள் ஏட்டளவிலும், பாட்டளவிலும் நின்றுவிடுகின்றன. "தாய் தந்தையரைப் போற்று" என்ற கட்டளையும் ஏட்டளவிலும் நின்றுவிடுகிறது.

## மன அழுத்தத்தை உணரும் கர்ப்பத்திலுள்ள குழந்தைகள்

ஒரு தாய் குழந்தையைப் பெற்றெடுத்த பின்னர் மட்டுமல்ல, குழந்தையைத் தன் வயிற்றில் சுமக்கும்போதும் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் செய்தி இது.

தாயின் மன அழுத்தத்தை கர்ப்பத்தில் உள்ள குழந்தைகள் உணருகின்றன என்ற உண்மையை விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். 'விசேட நான்கு பரிமாண ஊடுகாட்டும் கருவி பரிசோதனைகள்' மூலம் இந்த உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது. இதோ அந்தப் பத்திரிகைச் செய்தி:

"கர்ப்பிணித் தாய் மன அழுத்தத்திற்கு உள்ளாகும்போது அது அவரது வயிற்றிலுள்ள குழந்தையையும் பாதிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பிரித்தானிய டுர்ஹாம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கர்ப்பமாகவுள்ள 15 தாய்மார்களிடம் நான்கு பரிமாண அல்ட்றா சவுண்ட் ஊடுகாட்டும் பரிசோதனைகளை மேற்கொண்டபோது, தாய்மார் மன அழுத்தத்திற்கு உள்ளாகும் ஒவ்வொரு சமயமும் அவர்களது கர்ப்பத்திலுள்ள குழந்தை தனது முகத்தைக் கையால் தொடுவது கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி விசேட நான்கு பரிமாண ஊடுகாட்டும் பரிசோதனை உபகரணத்தின் மூலம் எடுக்கப்பட்ட பிரதிமைகளை பயன்படுத்தி முப்பரிமாண படங்களை ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

கர்ப்பிணித் தாய்மார் இந்த ஊடுகாட்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் ஒவ்வொரு சமயமும் அவர்களது மன அழுத்தம் அளவிடப்பட்டது. இந்நிலையில், தாயார் மன அழுத்தத்திற்கு உள்ளாகியிருக்கும்போது அவர்களது கர்ப்பத்திலுள்ள குழந்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கைகளால் முகத்தைத் தொட்டு தாம் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதை வெளிப்படுத்தியுள்ளன.

இந்த ஆய்வில் பங்கேற்ற கர்ப்பத்திலிருந்த 8 பெண் குழந்தைகளும் 7 ஆண் குழந்தைகளும் கைகளால் தமது முகத்தை மொத்தம் 342 தடவைகள் தொட்டுள்ளன. தாயார் மன அழுத்தம் அடையும்போது சுரக்கப்படும் கோட்டிசல் ஹோர்மோனை கர்ப்பத்திலுள்ள குழந்தைகள் உள்வாங்கி தாமும் மன அழுத்தத்தை வெளிப்படுத்துவதாக இந்த ஆய்வில் பங்கேற்ற மருத்துவர் ரெயிஸ்லான்ட் தெரிவித்தார். (நன்றி - வீரகேசரி 4.6.2014)

## ஆறு வயதான மகளை அடித்துக் கொன்ற தாய்

தாயின் அன்பு தனித்துவமானது, வார்த்தைகளால் வருணிக்க முடியாதது என்றெல்லாம் சொல்லப்பட்டாலும் சிலவேளைகளில் ஒரு தாய் பேயாக மாறுகின்ற சந்தர்ப்பங்களும் இல்லாமல் இல்லை. இந்தப் பத்திரிகைச் செய்தி அதற்கு ஓர் உதாரணம்:

"ஆறு வயதான தமது மகளை கொலை செய்த தாய் ஒருவர் கொலன்னாவையில் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரான பெண் தமது மகளின் கழுத்தை நெரித்து காலால் உதைத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். தாக்குதலில் காயமடைந்த சிறுமி பொரளை சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். தாய் தமது தங்கையின் கழுத்தை நெரித்து தாக்கினார் என்று கொல்லப்பட்ட சிறுமியின் ஏழு வயதுச் சகோதரன் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். கொலன்னாவை நாகஹமுல்ல பகுதியைச் சேர்ந்த 29 வயதான பெண் ஒருவரே சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார்." (நன்றி – உதயன் - 2.9.2014)

## ஒரு குழந்தையின் கேள்வி

குழந்தை ஒன்று வெகுளித்தனமாகத் தன் தாயைக் கேட்டது, "அம்மா, நம்ம வீட்டு வேலைக்காரியிடம் உன்னுடைய பேர்சையும், நகைகளையும் கொஞ்ச நேரம் குடுத்து பார்த்துக்கொள்ளச் சொல்வாயா?" அம்மா சொன்னாள், "அதெப்படி முடியும் ....? அவளை நான் நம்புவதில்லை". குழந்தை கேட்டது, "அப்படியெண்டால் ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைமட்டும் அவளிடம் தனியாக விட்டுச் செல்கிறாய்?"
குழந்தை கேட்டது சரியா ... தவறா....?

**தரணி போற்றும் தாய்மை!**

தாய்மைக்கு எதிர்சாட்சிகளாக ஆங்காங்கே சில சம்பவங்கள் நடைபெற்றாலும் தாய்மையின் மகத்துவம் இந்த உலகில் மங்கிப்போகவில்லை. உண்மையிலே பெண்கள் எவ்வளவு சிறப்புடையவர்கள் என்றால் நிலவைப் பெண்ணாகவும், நதியைப் பெண்ணாகவும், மலரைப் பெண்ணாகவும் வர்ணிக்கின்றோம். நாட்டைத் 'தாய் நாடு' என்றும், மொழியைத் 'தாய் மொழி' என்றும், தமிழைக் 'கன்னித் தமிழ்' என்றும், நிலத்தைப் 'பூமித்தாய்' என்றும் அழைக்கின்றோம். கலைக்குரியவள் கலைமகள், செல்வத்திற்குரியவள் அலைமகள், வீரத்திற்குரியவள் மலைமகள்.

கவிக்கோ அப்துல் ரகுமான் "ஓர் ஆணின் துணையின்றி இறைவன் மனிதனாகப் பிறக்க முடிந்தது. ஆனால், ஒரு பெண்ணின் துணையின்றி அவரால் அது இயலவில்லை. அதற்கு இயேசுக்கிறிஸ்துவே சாட்சி" என்கிறார்.

## II. தந்தையின் வகிபாகம்

"ஆண்மையுள்ள எல்லோராலும் குழந்தை பெறமுடியும். ஆனால் அன்புள்ள சிலரால் மட்டுமே தந்தை ஆகமுடியும்". பத்து மாதம்தான் தன் குழந்தையை அம்மா வயிற்றில் சுமக்கின்றாள்.

ஆனால் பல வருடங்கள் அப்பா தன் தோளிலும் இதயத்திலும் சுமக்கின்றார்.

"தந்தை சம்பாதித்ததை செலவு செய்வதில் மகனுக்கு இருக்கும் உரிமை மகன் சம்பாதித்ததை செலவுசெய்யும் எந்தத் தந்தைக்கும் இருப்பதில்லை" என எழுதுகிறார் ஒரு கவிஞர். இந்த வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவை!

"ஒன்றுக்கும் உதவாதவன், உருப்படாதவன், தண்டச் சோறு, தடிமாடு," என்று நமக்குமுன் அதிகம் திட்டினாலும் .... உடல்நலக் குறைபாடு ஏற்பட்டு அயர்ந்து தூங்கும்பொழுது நமக்கே தெரியாமல் நம் கால்களை நீவிவிட்டு நமக்காக சில துளி கண்ணீர் விடுவார் - நமக்குப் பின்னால் தந்தை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனைத் தந்தையாகக் காணும் விவிலியம்

"ஆண்டவரே எங்கள் தந்தை" (எசா 64:8), "வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை" (எசா 9:6), "விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே" (மத் 6:9) எனத் திருவிவிலியம் இறைவனைத் தந்தை என அழைப்பதைப் பல இடங்களில் காணலாம். இறைவன்தாமே தான் தனது மக்களின் தந்தை என்கிறார், "நான் உங்களுக்குத் தந்தையாய் இருப்பேன், நீங்கள் எனக்குப் புதல்வரும் புதல்வியருமாய் இருப்பீர்கள்" என்கிறார் எல்லாம் வல்ல ஆண்டவர் (2 கொரி 6:18).

## மன்னிக்க வேண்டும்

பிள்ளைகள் செய்யும் தவறுகளையும், குற்றங்களையும் மன்னித்து, அவர்களை ஏற்றுக்கொள்வது தந்தையரின் மாண்புமிக்க கடமை. "தந்தை தம் பிள்ளைகள்மேல் இரக்கம் காட்டுவதுபோல், ஆண்டவர் தமக்கு அஞ்சுவோர்மீது இரங்குகிறார்" (திபா 103:13) என்னும் திருப்பாடல் வரிகள் தந்தையின் இக்குணநலனை எடுத்துக்காட்டுகின்றன.

தன் மகன் அப்சலோம் தனக்கு எதிராகச் செய்த குற்றங்கள் அனைத்தையும் பொறுத்துக்கொண்டார் அரசர் தாவீது. தனக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்த மகன் அப்சலோமின் இறப்புச் செய்தி கேட்ட தாவீது, "என் மகன் அப்சலோமே, உனக்கு பதில் நான் இறந்திருக்கலாமே" என்று கதறியழுதது (2 சாமு 18: 33) அவரது இளகிய மனதுக்கும், மன்னிக்கும் அன்புக்கும் சான்று. ஆண்டவர் இயேசு கூறிய காணாமற்போன மகன் உவமையில் வரும் தந்தை, மனந்திரும்பி வந்த மகனை மன்னித்ததோடு விழாவாக கொண்டாடி மகிழ்ந்தார் (லூக் 15: 22 – 22).

## கற்றுக்கொடுக்க வேண்டும்

நல்லவற்றைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது, தந்தையின் பொறுப்பு. பள்ளிக்கல்வி மட்டுமல்ல. வாழ்க்கைக் கல்வியையும் கற்றுக்கொடுக்க வேண்டும். முதன்முதல், இறையச்சத்தைப் பிள்ளைகளுக்கு ஊட்டவேண்டும். "நீதி, நேர்மை வழிநின்று, எனக்குக் கீழ்ப்படியும்படி தன் புதல்வருக்கும், தனக்குப்பின் தன் வழிமரபினருக்கும் கற்றுத்தருமாறு" (தொநூ 18:19) ஆண்டவர் ஆபிரகாமிக்குக் கட்டளையிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நற்பயிற்சி பெறா மகனைப் பெற்ற தந்தை இகழ்ச்சி அடைவார். அத்தகைய மகளோ அவருக்கு இழிவைக் கொணர்வாள்" (சீஞா 22:3) என்கிறது சீராக்கின் ஞானநூல். எனவே, நல்லவற்றில் பயிற்சி அளிப்பது பெற்றோரின் கடமை. "தம் மகனை நன்னெறியில் பயிற்றுவிப்பவர் அவனால் நன்மை அடைவார். தமக்கு அறிமுகமானவர்களிடையே அவனைப்பற்றிப் பெருமைப்படுவார்" (சீஞா 30:2).

"கட்டளை என்பது ஒரு விளக்கு. அறிவுரை என்பது ஒளி" (நீமொ 6:23) என்று அழகாகக் கூறுகிறது நீதிமொழிகள் நூல். தம் பிள்ளைகளுக்குத் தக்கநேரத்தில் அறிவுரை பகர்வது பெற்றோரின் பொறுப்புகளுள் ஒன்று.

தோபித்து தம் மகன் தோபியாவுக்கு அளித்த அறிவுரை நல்லதொரு எடுத்துக்காட்டு. "உன் தாயை மதித்து நட, அவள் வாழ்நாள் முழுவதும் அவளைக் கைவிடாதே. அவளுக்கு விருப்பமானதைச் செய். எவ்வகையிலும் அவளது மனத்தைப் புண்படுத்தாதே... உன் உடைமையிலிருந்து தர்மம் செய்யும்போது முகம்கோணாதே. ஏழை எவரிடமிருந்தும் உன் முகத்தைத் திருப்பிக்கொள்ளாதே" (தோபி 4:3-9).

## 13 வயது மகளை வல்லுறவுக்குட்படுத்திய தந்தை

நற்பயிற்சி அளித்து அறிவுரை கூறவேண்டிய தந்தையர்களில் சில தம் சொந்தப் பிள்ளைகளையே பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்துகின்ற கொடூரங்களை ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம்.

"தனது 13 வயதுடைய மகளை கடந்த ஐந்து வருடங்களாக வல்லுறவுக்குட்படுத்தி வந்த சிவில் பாதுகாப்பு அதிகாரியாகச் சேவையாற்றும் 41 வயதுடைய தந்தையை தெஹியத்த கண்டிய பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சிறுமியின் தாய் ஆடைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரிவதால் சிறுமியை அம்மம்மாவின் பொறுப்பில் விட்டுச்சென்றுள்ளனர். இந்த நிலையில் இச்சிறுமியை 9 வயதில் இருந்து 13 வயது வரை கடந்த ஐந்து வருட காலமாக வல்லுறவிற்குட்படுத்தியுள்ளார்.

இது குறித்து மஹியங்கனை சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலை அடுத்து சந்தேக நபர் மஹியங்கனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சிறுமி தெஹியத்த கண்டிய வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்." (நன்றி - தினக்குரல் - 25.11.2013)

## திருக்குடும்பம் - ஒரு முன்மாதிரிகை

பல குடும்பங்கள் இன்று சிதைந்துகொண்டிருக்கின்றன. கோவில்களாய்த் திகழவேண்டிய குடும்பங்களின் மாண்புகள் புதைக்கப்படுகின்றன. இச்சூழ்நிலையில் ஒரு எளிய குடும்பம் நமக்கு முன்மாதிரிகையான குடும்பமாக வைக்கப்படுகின்றது. அதுதான் நசரேத்தூர் குடும்பம்! இக்குடும்பம் ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பமும் பாடம்கற்கவேண்டிய 'நசரேத்தூர் பல்கலைக்கழகம்'.

அந்தக் குடும்பத்தின் தந்தை யோசேப்பு. அவர் தச்சு வேலை செய்தார். குடும்பத்தின் நலனுக்காக நேர்மையுடன் உழைத்தார். அக்குடும்பத்தின் தாய் மரியா. இவர் குடும்பப் பணிகளைச் சிறப்பாகச் செய்தார். யோசேப்பும் மரியாவும் ஒருவரை ஒருவர் அன்புசெய்தனர். தங்கள் மகன் இயேசுவுக்காகப் பல தியாகங்கள் செய்தனர். இயேசுவும் தம் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தார்; பல உதவிகள் செய்தார்,

அவர்கள் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்டார்கள், ஒருவர் ஒருவரைப் புரிந்துகொண்டார்கள், ஒருவர் மற்றவருக்காகவே வாழ்ந்தார்கள். இவ்வாறு திருக்குடும்பம் அன்பின் அடிப்படையில் மகிழ்ச்சியான குடும்பமாகத் திகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 12 பொறுப்புள்ள பெற்றோர்



குடும்பம் ஓர் அச்சு, பிள்ளை அதன் வார்ப்பு. குடும்பம் ஒரு மரம், பிள்ளை அதன் கனி. எனவே குடும்ப சூழ்நிலையைப் பொறுத்துத்தான் அதாவது பெற்றோரின் வாழ்வையும், வழிகாட்டலையும் பொறுத்துத்தான் பிள்ளைகளின் முன்னேற்றமும் பின்னேற்றமும் தங்கியுள்ளது.

## பெற்றோர் எவ்வழி பிள்ளைகள் அவ்வழி

"தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை" "அப்பனுக்கு மகன் தப்பாமல் பிறந்துள்ளான்" போன்ற பழமொழிகள் பெற்றோரின் தாக்கம் பிள்ளைகளில் இருக்கும் என்பதைத் துலாம்பரமாகக் காட்டுகின்றன.

ஒரு குழந்தையின் முதல் பள்ளி தாயின் மடி. அதன் முதல் ஆசிரியர் பெற்றோர். ஒரு தகப்பன் என்ன நினைக்கின்றான், "நான் குடிப்பேன், கூத்தாடுவேன், சண்டை பிடிப்பேன், மண்டை உடைப்பேன். ஆனால் என் மகன் மட்டும் வளர்ந்து நல்லவனாக வல்லவனாக வர வேண்டும்". ஒரு தாய் என்ன நினைக்கின்றாள், "நான் ஊரெல்லாம் திரிந்து ஆவலாதி அவதூறு பேசுவேன், சண்டைக் கப்பலாக வம்பளப்பேன், ஆனால் என் மகள் மட்டும் வளர்ந்து அடக்க ஒடுக்கமாக ஊரெல்லாம் போற்றும் உத்தமியாக வரவேண்டும்". இது எப்படிப்பட்ட எதிர்பார்ப்பாக இருக்க முடியும்?

## இன்றைய பிள்ளகைள் விவேகமானவர்கள்

இன்றைய பிள்ளைகள் விவேகம் நிறைந்தவர்கள். இன்றைய தொலைத் தொடர்புசாதனங்களின் அதீத பயன்பாட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபிள்ளைகளின் அறிவு அபரீதமாக வளர்ந்துள்ளது. அவர்களை இலகுவில் ஏமாற்ற முடியாது. இந்த உரையாடலைப் பாருங்கள்.

பையன் கேட்கிறான், "ஏன் அப்பாவின் தலை நரைத்திருக்கிறது.?" தாய் சொல்கிறாள், "மகன் பொய் சொன்னால் அப்பாவின் தலை நரைக்கும்." அப்போது மகன் கூறுகின்றான், "இப்பதானே விளங்குது. ஏன் தாத்தாவின் தலையில் இவ்வளவு வெள்ளை முடி என்று!"

இன்றைய பிள்ளைகள் பெற்றோரை, குறிப்பாக படிப்பறிவு குறைந்த பெற்றோரை எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது.

வகுப்பில் குறைந்த புள்ளிகளை எடுத்த பையன் அப்பாவிடம் எப்படி றிப்போட்டில் கையெழுத்து வாங்குவது என்று யோசிக்கிறான். "அப்பா, கண்ணை மூடிக்கொண்டு உங்களுக்குக் கையெழுத்து போடத்தெரியுமா? என்று கேட்கிறான். "ஓம் தெரியுமே!" என்கிறார் அப்பா. "அப்பா கண்ணை மூடிக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு, தனது றிப்போட்டைக் கொண்டுவந்து கையெழுத்துப் போடவேண்டிய இடத்தில் கையைப் பிடித்து கையெழுத்து வைக்கவேண்டிய இடத்தில் வைத்து, "இதில் கையெழுத்தை வையுங்கள்" என்கிறான். அப்பாவும் வைக்கிறார். அப்பா றிப்போர்ட் புள்ளிகளைப் பார்க்காமலேயே அவரிடமிருந்து கையெழுத்தை வாங்கிவிட்டான் அந்தப் புத்திசாலி மகன்!

## எரிச்சல் மூட்டாதீர்கள்

"பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். அப்படிச் செய்தால் அவர்கள் மனம் தளர்ந்துபோவார்கள்" (கொலோ 3:21) "தந்தையரே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி அறிவுபுகட்டி வளர்த்து வாருங்கள்." (எபே 6:4) என்கிறது இறைவார்த்தை.

பல பெற்றோருக்கு தம் பிள்ளைகளை எப்படி அணுகுவது என்று தெரியாது. குறிப்பாக பதின்ம வயதை (Teen Age) அடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் அடிப்படையான உளவியல் குணாதியங்களைப் புரிந்துகொண்டு அவர்களை அணுகவேண்டும். அளவுக்குமீறிய கட்டுப்பாடுகள் பிள்ளைகளுக்கு எரிச்சலையும், பெற்றோர் மட்டில் வெறுப்பையும் கொண்டுவரும்.

## பெற்றோரைச் சுட்டுக்கொன்ற மகன்

அதிக கண்டிப்புடன் வளர்க்கப்பட்ட சிறுவன் பெற்றோரை சுட்டுக்கொன்ற விபரீதம் அண்மையில் பத்திரிகைச் செய்தியாக வந்தது. வீட்டிலேயே கல்வி கற்க ஏற்பாடு செய்யப்பட்டு கடும் கண்டிப்புடன் வளர்க்கப்பட்ட 16 வயதுச் சிறுவன் ஒருவன் தனது பெற்றோரைப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் உள்ள டெக்ஸாஸ் மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது. பிறிஸ்கோ நகரைச் சேர்ந்த மேற்படி சிறுவன் தனது தந்தையான ரேயன் (48 வயது) தாயான மரியா எலெனா ஆகியோரை சுட்டுக் கொன்றுள்ளான். இவன் ரேயன் மற்றும் எலெனாவின் ஐந்து பிள்ளைகளில் இளையவனாவான். மேற்படி படுகொலை இடம்பெற்றபோது அந்த வீட்டில் சிறுவனின் சகோதரி ஒருவரும் இருந்துள்ளார். ஆனால் அவர் சிறுவனால் தாக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

கடும் கண்டிப்புடன் பெற்றோரால் வளர்க்கப்பட்ட அந்தச் சிறுவன் பெற்றோரின்கீழ் வளர்ந்துள்ளான். அவனுக்கு மென்பானங்களை அருந்தவும், வன்முறை, பாலியல் ரீதியான திரைப்படங்களை பார்க்கவும் பெற்றோர் தடைவிதித்திருந்தனர். அத்துடன் அந்தச் சிறுவன் இணையத்தளத்தில் எவற்றைப் பார்வையிடுகிறான், எத்தகைய உணவுகளை உண்ணுகிறான் என்பது தொடர்பிலும் பெற்றோர் கண்டிப்பைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். எனினும் சிறுவன் எதற்காக இந்தப் படுகொலைகளை செய்தான் என்பது தொடர்பில் தகவலெதனையும் வெளியிட மறுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்". (நன்றி - வீரகேசரி 14.8.2014)

## பாரபட்சம் காட்டக்கூடாது

குடும்பத்தில் அன்பின் கனிகளாகத் திகழ்பவர்கள் பிள்ளைகள். எனவே எல்லாப் பிள்ளைகளும் எல்லாவற்றிலும் சமமாக மதிக்கப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஆண்பிள்ளைகளுக்கு தனிச்சலுகைகளக் கொடுத்து, பெண்பிள்ளைகளை அலட்சியப்படுத்துவது நியாயமன்று. உணவு, உடை, கல்வி, வேலைவாய்ப்பு முதலியவற்றில் இருபாலாருக்கும் சமவாய்ப்பும் உரிமையும் வழங்கப்பட வேண்டும். உடல் ஊனமுற்ற குழந்தையாகவோ, மனவளர்ச்சி குன்றிய குழந்தையாகவோ இருப்பின் அவர்கள்மீது குடும்பத்திலுள்ள அனைவரும் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

குடும்ப நிர்வாகத்தில் பிள்ளைகளுக்குப் பொறுப்புக்களைப் பகிர்ந்தளிப்பதும், முக்கிய முடிவுகளை எடுக்கும்போது அவர்களைக் கலந்து ஆலோசிப்பதும், அவர்களுடைய நியாயமான தேவைகளை நிறைவேற்றுவதும் குடும்பத்தில் சமத்துவ வாழ்வை நிலைநாட்டும்.

பிள்ளைகள் அனைவரையும் சமமாக அன்புசெய்ய வேண்டும். ஈசாக்கின் பிள்ளைகள் ஏசா, யாக்கோபு இருவரில் "ஏசா வேட்டையாடித் தந்த உணவின் பொருட்டு, ஈசாக்கு அவன்மேல் அன்புகொண்டிருந்தார்" (தொநூ 25: 28). இதுபோல, தன்னலத்தின் காரணமாகப் பிள்ளைகளிடையே பாகுபாடு காட்டுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

## பாரபரட்சத்தின் விளைவு கொலையில் முடிந்தது

"பதின்மூன்று வயது அக்காவின் கத்திக்குத்துக்கு இலக்காகி ஆறு வயதுத் தங்கை உயிரிழப்பு. மொனராகலையில் சம்பவம், பெற்றோரின் பாரபட்சமான அன்பு காரணம்?" இது ஒரு பத்திரிகைச் செய்தியின் தலைப்பு. கீழே வாசியுங்கள்:

"மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அலுபொத்த, பங்களா தோட்டம் பிரதேசத்தில் தனது ஆறு வயதுத் தங்கையை 13 வயது பாடசாலைச் சிறுமியான அக்கா கத்தியால் குத்திக் கொலைசெய்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. தனது பெற்றோர்கள் தன்னைவிட தனது தங்கைக்கு அதிக அன்பு காட்டுவது தொடர்பில் மனதில் இருந்த ஆத்திரத்தில் இந்தக் கத்திக் குத்து நடத்தப்பட்டுள்ளதாக படல்கும்புர பொலிஸார் நடத்தியுள்ள ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் சிறுமியின் வீட்டிலேயே இடம்பெற்றுள்ள நிலையில் சம்பவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும்போது வீட்டில் குறித்த இரு சிறுமியரையும் தவிர வேறு எவரும் அங்கு இருக்கவில்லை எனவும் அறியமுடிகின்றது.

குறித்த சிறுமியரின் தந்தை 'பூந்தி' எனப்படும் இனிப்புப் பொருள் பார்சல் ஒன்றை வீட்டுக்கு வாங்கி வந்துள்ளதுடன் அதில் சிறியதொரு பகுதியை அக்காவுக்கும் ஏனைய பெரும்பாலான பகுதியைத் தங்கைக்கும் பிரித்துக் கொடுத்துள்ளார். இந்தச்சம்பவத்தில் அக்காவுக்கும் தங்கைக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டதாகவும் இதனை அடுத்தே இந்தக் கத்திகுத்துத் தாக்குதல் இடம்பெற்றிருக்க வேண்டும் எனவும் சிறுமியரின் தந்தை ஊடகங்களிடமும் பொலிஸாரிடமும் தெரிவித்துள்ளார். (நன்றி – வீரகேசரி)

## கண்டித்துத் திருத்த வேண்டும்

பிள்ளைகள் தவறுசெய்யும்போது, அவர்களைக் கண்டித்துத் திருத்துவது கசப்பான ஒரு கடமை. பெரும்பாலான பெற்றோரால் இதைச் செய்யமுடிவதில்லை. "தந்தை தம் அருமை மகனைக் கண்டிப்பதுபோல், ஆண்டவர் தாம் யாரிடம் அன்புகொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார்" (நீமொ 3: 12) என்னும் இறைவாக்கு, நல்ல தந்தையின் கடமையைச் சுட்டிக்காட்டுகிறது. "கண்டிப்பும் நற்பயிற்சியும் எக்காலத்திலும் ஞானத்தைக் கொடுக்கும்" (சீஞா 22:6).

"தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக, அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவுபுகட்டி வளர்த்து வாருங்கள்" (எபே 6:4).

தம் பிள்ளைகள் தவறுசெய்யும்போது அதைத் தட்டிக்கேட்காமல் விடுவது இறைவனுக்கு உகந்ததல்ல. ஏலியின் புதல்வர்கள் "கீழ்த்தரமானவர்களாக இருந்தனர். அவர்கள் ஆண்டவர்மீது அக்கறை கொள்ளவில்லை" (1சாமு 2: 12 – 17). ஆண்டவர் சாமுவேலிடம் "அவன் தன் புதல்வர்கள் கீழ்த்தரமாக நடந்துகொண்டதை அறிந்திருந்தும், அவர்களைத் தடுக்காத குற்றத்திற்காக அவனது வீட்டுக்கு நீங்காத தண்டனைத் தீர்ப்பு வழங்குவேன்" (1 சாமு 3:13) என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் குழந்தைகள் வாய்க்கால்களாக இருக்கும்போது கரைகட்டுங்கள். ஆறாக மாறியபின் அணை கட்டி என்ன பயன்? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

## யார் சிறந்த பெற்றோர்?

சிட்னி ஹாரிஸ் என்பவர், 'சிறந்த பெற்றோர் யார்?' என்பதை இவ்வாறு அடையாளம் காட்டுகிறார். "கண்டிப்பின் பின்னே கனிவைக் கொண்ட தந்தையும், கனிவின் பின்னே கண்டிப்பாய் இருக்கும் தாயுமே நல்ல பெற்றோர்" ஆனால், எல்லாப் பெற்றோருமே இதனைச் சமமாகக் கொண்டிருப்பதில்லை. ஒருசில பெற்றோர், மிதமிஞ்சிய கண்டிப்புடன் நடந்து பிள்ளைகளின் வெறுப்பைச் சம்பாதிக்கின்றனர். பெரும்பான்மையான பெற்றோர், அளவுக்கதிகமாகச் செல்லம் கொடுத்து, பிள்ளைகளைக் கெடுக்கின்றனர். சமநிலை கொண்டோர் பேறுபெற்றோர்.

## துன்மாதிரியாக இருக்கக்கூடாது

தம் பிள்ளைகளுக்குப் பெற்றோர் நன்மாதிரிகளாக இல்லாவிட்டாலும்கூடப் பரவாயில்லை, துன்மாதிரியாக இருக்கக்கூடாது. எரோபவாமின் மகன் நாதாபு, இஸ்ரயேலின் அரசன் ஆனபோது, "ஆண்டவரின் பார்வையில் தீயதெனெப்பட்டதைச் செய்து, தன் தந்தையின் வழியிலேயே நடந்து அவனைப்போலவே இஸ்ரயேலர் பாவம் செய்யக் காரணமாய் இருந்தான்" (1அர 15: 26).

"இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச்செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லைத் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது" (மத் 18: 06) என்கிறார் இயேசு. எனவே, பிள்ளைகள்முன் புகைபிடித்தல், மது அருந்துதல், பிறரைப்பற்றி இழிவாகப் பேசுதல் முதலியன தவிர்க்கப்பட வேண்டும்.

"கலைகளிலெல்லாம் மிகச்சிறந்த கலை பிள்ளைகளைச் சிறப்பான முறையில் வளர்க்கும் கலையே" என திருத்தந்தை 13ம் சிங்கராயர் குறிப்பிடுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் சொல்லக்கூடாது என குழந்தையிடம் சொல்லி வளர்க்கும் பெற்றோர். தொலைபேசி அழைப்புக்கு பதில் சொல்லச் சொல்கிறார்கள், “வீட்டில் யாரும் இல்லை எனச் சொல்லு” எனும் போது பிள்ளையின் மனதில் குழப்பம் விளைகின்றது. தன்னையறியாமலே பொய் கூற பழக்கப்படுகின்றது.

## மகளைக் கர்ப்பிணியாக்கிய தந்தை

இன்று எப்படியெல்லாம் பெரியவர்கள் துன்மாதிரியாக நடக்கின்றனர் என்பதற்கு இந்தச் செய்தி ஒரு உதாரணம்: “தனது 13 வயதுடைய மகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கர்ப்பிணியாக்கியதாகச் சொல்லப்படும் தந்தை ஒருவரைக் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர். மாதம்பை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பகல்ல எனும் பிரதேசத்தினைச் சேர்ந்த பாடசாலை மாணவியான சிறுமியே இவ்வாறு வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டவராவார்.

குறித்த சிறுமி அப்பிரதேச பாடசாலை ஒன்றில் கல்வி பயின்றுவரும் நிலையில் தனது காலில் ஏற்பட்ட காயம் ஒன்றுக்காக சிகிச்சை பெறுவதற்குச் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், அச்சிறுமியைப் பரிசோதித்த வைத்தியர்கள் அச்சிறுமி கர்ப்பம் தரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இதன்பின்னர் சிறுமியை விசாரித்தபோது கடந்த இரு வருடங்களாக தனது தந்தை தன்னை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி வந்ததாக சிறுமி வைத்தியர்களிடம் தெரிவித்துள்ளார். (நன்றி - வீரகேசரி 7.10.2014)

## பிள்ளைகளின் எதிர்பார்ப்பு

பெற்றோர் தம்மை நிபந்தனையற்றவிதமாக அன்புசெய்ய வேண்டும் என பிள்ளைகள் எதிர்பார்க்கின்றனர். தாம் தமது பெற்றோரால் நிபந்தனையற்றவிதமாக அன்புசெய்யப்படுகின்றோம் என்பதை பிள்ளைகள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இன்று பிள்ளைகள் தமது பெற்றோரிடம் என்ன எதிர்பார்க்கின்றார்கள் அல்லது அவர்கள் பெற்றோருக்கு வினயமாக எதைச் சொல்கின்றார்கள்? “நான் எப்படி இருக்கிறேனோ அப்படியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை என்னை அன்புசெய்யுங்கள். நான் என்ன செய்கிறேன் என்பதற்காக என்னை அன்பு செய்யவேண்டாம். ("Love me for who I am not for what I do".) "நான் குழப்படியாக இருந்தாலும், படித்தாலும், படிக்காவிட்டாலும் ... என்னை அன்பு செய்யுங்கள்"

பிள்ளைகள் செய்கின்ற எல்லாவற்றையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது இதன் அர்த்தமல்ல. இதனுடைய அர்த்தம் பிள்ளைகளை எந்தவேளையிலும், எல்லாச் சந்தர்ப்பத்திலும் நாம் அன்புசெய்யவேண்டும். நமது எதிர்பார்ப்பின்படி அவர்கள் நடக்காவிட்டாலும், தவறிழைத்தாலும் அவர்களை நாம் அன்புசெய்யத்தான் வேண்டும்.

## போதனை அல்ல சாதனை தேவை

இன்று உலகத்தில் இலவசமாகக் கிடைப்பது அறிவுரை, புத்திமதி, போதனை! இன்றைய பிள்ளைகள் தமது பெற்றோரிடமிருந்து போதனையை அல்ல சாதனையை எதிர்பார்க்கின்றார்கள்.

பிள்ளைகள் தங்கள் பேச்சைக் கேட்பதில்லை என்று பெற்றோர் குறைபட்டுக்கொள்கின்றனர். தாங்கள் கடைப்பிடிக்காத ஒன்றை பிள்ளைகள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்பதற்குப் பெற்றோர்களுக்கு எந்தவிதமான தார்மீக உரிமையுமில்லை.

ஒரு வீட்டிலே அப்பா தன் மகனைப் பார்த்து, "உன் வயதில் ஆபிரகாம் லிங்கன் எவ்வளவு கஸ்ரப்பட்டு உழைத்தார். நீ என்னடா எண்டால் ஊரைச் சுற்றிவருகிறாய்" என்றார். அதற்கு அவன், "அப்பா, உங்கட வயதில் ஆபிராகம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். நீங்கள் என்ன செய்கிறீர்கள்" என்று கேட்டான். அப்பா வாயடைத்துப்போய் நின்றார்.

ஆம் இன்று வாழ்க்கைச் சாட்சியங்கள் தேவைப்படுகின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 13

# பணிவுள்ள பிள்ளைகள்



## கட்டுப்பாடற்ற வாழ்க்கையால் கெட்டுப்போக நேரிடும்

சில பயிர்கள், தாவரங்கன், செடிகளைச் சுற்றி சிறிய வேலி அல்லது அடைப்பு வைக்கின்றோம் எதற்காக? அந்தப் பயிர்களை, தாவரங்களைப் பாதுகாப்பதற்காக! ஆடு மாடுகள், அதிக காற்று, வெயில் இவற்றில் இருந்து பாதுகாப்பதற்காகவே இப்படியான வேலியை அடைக்கின்றேம். அந்தத் தாவரம் பெரிதாக வளர்ந்துவிட்டால் இந்த வேலி அங்கே தேவையற்றதாகிவிடும்.

இதேபோன்றுதான் நாம் சிறுவர்களாக இருக்கும்போது நமக்கு சில பாதுகாப்பு வேலிகள் தேவைப்படுகின்றன. கட்டுப்பாடுகள், ஒழுக்கநெறிகள் போன்றவையே இந்த வேலிகள். இவை நாம் சிறுவர்களாக இருக்கும்போது எமக்கு அவசியம் தேவைப்படுகின்றன. நாம் பெரியவர்களாக வளர்ந்தபின்னர் இத்தகைய கட்டுப்பாடுகள் அந்த அளவுக்குத் தேவைப்படுவதில்லை.

ஒரு தாவரம் தான் சிறியதாக இருக்கும்போது "என்னை இப்படி அடைக்கிறீர்களே? எனது சுதந்திரத்தை, உரிமையைக் கட்டுப்படுத்துகிறீர்களே? "என்று முறையிட்டு இந்த வேலியை நீக்கிவிட முயற்சித்தால் என்ன நடக்கும்? அதற்குப் பல ஆபத்துக்கள், இடர்கள் ஏற்படும். அச்சிறிய தாவரம் அழிந்துவிடும். அதுபோலவே சிறுவர்களாக இருக்கும்போது "எனக்குக் கட்டுப்பாடுகள் தேவையில்லை, அவை எனது சுதந்திரத்தைப் பாதிக்கின்றன" என்று நாம் சிந்தித்தால் அது எமக்கே நாம் ஆபத்தைத் தேடிக்கொள்வதாக முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோரின் சொற்கேட்டு நடத்தல்

பிள்ளைகள் பெற்றோரின் சொற்கேட்டு நடக்கவேண்டும் என்பதை ஆண்டவரின் வார்த்தை வலியுறுத்துகின்றது. "பிள்ளாய்! உன் தந்தை தந்த நற்பயிற்சிகளைக் கடைப்பிடி; உன் தாய் கற்பிப்பதைத் தள்ளிவிடாதே" (நீமொ 1:8). "பிள்ளாய்! உன் தந்தையின் கட்டளையைக் கடைப்படி; தாயின் அறிவுரையைப் புறக்கணிக்காதே." (நீமொ 6:20). உன் தந்தையின் நல்லுரையைப் புறக்கணிப்பவர் மூடர் ; கண்டிப்புரையை ஏற்பவர் விவேகமுள்ளவர்" (நீமொ 15:5) இதையே தமிழ் இலக்கியமும் இவ்வாறு சுட்டிக்காட்டுகின்றது, "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" (கொன்றை வேந்தன் 37).

## கீழ்ப்படியுங்கள்

பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற அறிவுரையை இறைவார்த்தை தருகின்றது. "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரைச் சார்ந்தவர்களுக்கு இதுவே தகும்" (கொலோ 3:20) "பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது" (எபே 6:1).

பெற்றோரின் சொற்கேளாத பல பிள்ளைகளை இன்று நாம் பார்க்கின்றோம். பதின்ம வயதை அடைந்த பல பிள்ளைகள் பெற்றோரின் கட்டுப்பாட்டை விரும்பாதவர்களாக, கால்போன திசையில், மனம்போன போக்கில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் இன்று கண்ணீரில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். "தென்னையப் பெத்தா இளநீர், பிள்ளையப் பெத்தா கண்ணீர்" என்ற நிலையில் இவர்களின் வாழ்வு உள்ளது.

## இயேசுவின் கீழ்ப்படிவு

இயேசுவின் குழந்தைப் பருவம் குறித்து திருவிவிலியத்தில் அதிகம் கூறப்படவில்லை. லூக்கா நற்செய்தியாளர் இரத்தினச் சுருக்கமாக இயேசுவின் குழந்தைப் பருவ வாழ்வைப் பதிவுசெய்துள்ளார். "இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்துவந்தார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(லூக். 2:52). இன்றைய பிள்ளைகளும் இயேசுவைப்போல பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து இறைஞானத்திலும், அறிவிலும் வளரவேண்டும்.

கிறிஸ்து தமது பெற்றோருக்கு முப்பது ஆண்டுகள் பணிந்து நடந்தார் (லூக் 2:5-1). சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு தனது வானகத் தந்தைக்குக் கீழ்ப்படிந்தார் (பிலி 2:8). கிறிஸ்துவைப் பின்பற்றிப் பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

## அம்மா நீ ஒரு சும்மா

வீட்டிலும் சில பிள்ளைகள் பெற்றோர்களை மதிப்பதில்லை. ஓர் அம்மா தம் சிறிய மகனிடம் "நான் உன்னைப் பெத்த அம்மாடா. சொன்ன பேச்சைக் கேளுடா" என்றார். அதற்கு அச்சிறுவன் "நீ என்னைப் பெத்ததனால்தான் அம்மா, இல்லைன்னா வெறும் சும்மா" என்றான்.

பிள்ளைகள் தங்களுடைய பெற்றோருக்கு மதிப்பும், மரியாதையும் காட்டக் கடமைப்பட்டுள்ளனர். "உன் தந்தையை உன் முழு உள்ளத்துடன் மதித்து நட. உன் தாயின் பேறுகாலத் துன்பத்தை மறவாதே. அவர்கள் உன்னைப் பெற்றெடுத்தார்கள். அதற்கு ஈடாக உன்னால் "எதையும் செய்ய முடியாது என்பதை நினைவில் இருத்து" (சீஞா 7:27-28).

## அறியாமையில் முதுமையில் இகழாதே

தங்களுடைய பெற்றோரின் அறியாமை, வறுமை, முதுமை ஆகியவற்றின் காரணமாக அவர்களைப் பெற்றோராக அங்கீகரிக்காதபோது, அவர்களை வசைமொழிகூறித் திட்டும்போது, அவர்களை வெறுப்புடன் நடத்தும்போது, அவர்களை அடிக்கக் கையை ஓங்கும்போது, அவர்களைப் பராமரிக்காமல் விட்டுவிடும்போது பிள்ளைகள் 4ஆம் கட்டளைக்கு எதிராகக் கனமான பாவம் செய்கின்றனர்.

ஆனால், புத்தி சுவாதீனம் இல்லாமலோ, குடிபோதையிலோ இயல்புக்கு மாறான செயல்பாடுகளில் ஈடுபடும் பெற்றோரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படுத்துவது அவர்களை அவமதிக்கும் செயலாகக் கருதப்பட மாட்டாது. முதுமையில் பெற்றோர் அறிவுத்திறன் குறைந்து, குழந்தைகளைப்போல் செயல்பட்டு, எரிச்சல் ஊட்டும் வகையில் நடக்கின்றனர். அந்நிலையில் அவர்களைச் சகித்துக்கொள்ள வேண்டும்.

"உன் தந்தையின் முதுமையில் அவருக்கு உதவு. அவர் உள்ளத்தைப் புண்படுத்தாதே. அவரது அறிவாற்றல் குறைந்தாலும் பொறுமையைக் கடைப்பிடி. அவரை இகழாதே" (சீஞா 3:12).

பழைய ஏற்பாட்டில் நோவா என்பவர் குடிபோதையில் நினைவிழந்து ஆடையின்றி இருந்ததைக் கண்ட அவருடைய மகன் காம் என்பவன் தன்னுடைய இரண்டு சகோதரர்களான சேம், எப்பேத்து என்பவர்களைக் கூப்பிட்டுத் தன் தந்தையின் நிர்வாணத்தைக் காட்டி ஏளனம் செய்தான். ஆனால், அவ்விரு சகோதரர்கள் தங்களுடைய தந்தையின் உடல்மேல் போர்வை ஒன்றைப் போர்த்தினர். நோவா நினைவு தெளிந்து நடந்ததை அறிந்து காம் என்பவனைச் சபித்தார். சேரு, எப்பேத்து என்ற இருவரையும் ஆசீர்வதித்தார் (தொநூ 3:20-27).

பெருந்தன்மை உடையவர்கள் மற்றவர்களுடைய குறைகளை மறைப்பர். ஆனால், சில்லறைப் புத்தியுள்ளவர்கள் பிறருடைய குறைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவர்.

## தாலிக்கொடி உறவா? தொப்புள் கொடி உறவா?

உறவுகளுக்கெல்லாம் முதன்மையான உறவு தொப்புள் கொடி உறவு. அதாவது தாய் - சேய் இரத்த உறவு. இப்புனிதமான உறவையும்கூடத் திரைப்படங்களில் கொச்சைப்படுத்துகின்றனர். திரைப்பட நடிகைகளுக்குத் தேவை அழகோ, நடிப்புத் திறமையோ அல்ல மாறாக, தொப்புளும், தொடையும் கவர்ச்சியாக இருந்தால் அதுவே போதுமானது.

வீட்டிலும் தாலிக்கொடி உறவு வந்ததும் தொப்புள் கொடி உறவு தரையில் தள்ளப்பட்டு மிதிபடுகிறது. மனைவியின் பேச்சைக் கேட்டு ஒருசில பிள்ளைகள் பெற்றோரை வீட்டைவிட்டே விரட்டுகின்றனர். தங்களுடைய வீட்டுக்கு 'அன்னை இல்லம்' என்று பெயர் சூட்டிவிட்டு தங்களுடைய அன்னையை அனாதை இல்லத்துக்கோ, முதியோர் இல்லத்துக்கோ விரட்டிவிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன் தாயை வெட்டிய தனயன் கைதாகி மறியலில்

சொத்துக்களுக்காக தமது பெற்றோரை தாக்குகின்ற, கொலை செய்கின்ற பிள்ளைகள் பற்றிய செய்திகளை நாம் பத்திரிகைகளில் படிக்கின்றோம். இதோ ஒரு பத்திரிகைச்செய்தி:

"சொத்துக்களைப் பிரித்துத் தருமாறு கூறித் தனது தாயைக் கோடரியால் தாக்கிய நபரைக் கைதுசெய்துள்ளதாகவும் அவர் எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். நெல்லியடி கரணவாய்ப் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே தனது 72 வயதுடைய தாயைக் கோடரியால் தாக்கியுள்ளார். அதிலிருந்து தப்பிய அத்தாய் அது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

விசாரணைக்கு வருமாறு சந்தேக நபருக்குப் பொலிஸார் அறிவித்தபோதும் அங்கு செல்லாது தலைமறைவாக இருந்து வந்துள்ளார். இந்த நிலையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் ஏற்கனவே அவ்வாறான செயல்களில் ஈடுபடுவதோடு வீட்டிலுள்ள பெறுமதிமிக்க பொருள்களையும் அடித்துநொருக்கி வந்துள்ளார். அவரது அட்டகாசம் அளவுக்குமீறிச் செல்லவே தாயார் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்." (நன்றி - உதயன் 9.10.2014)

## மதித்து நட .... மிதித்து நடக்காதே ....!

"உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடித்திருக்கும்படி உன் தந்தையையும் தாயையும் மதித்து நட" (விப 20:12) "உன் தந்தையையும் தாயையும் மதித்து நட என்பதே வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை. இதனால் நீ நலம் பெறுவாய். மண்ணுலகில் நீ நீடூழி வாழ்வாய் என்பதே அவ்வாக்குறுதி" (எபே. 6: 1-3). 'மதித்து நட' என்றுதான் சொல்லப்படுகின்றதே தவிர 'மிதித்து நட' என்று சொல்லப்படவில்லை!

## கீழ்ப்படியக் கடமையில்லாத சந்தர்ப்பங்கள்

பெற்றோர் தங்களுடைய பிள்ளைகள் அவர்களுடைய வாழ்க்கை நிலையைத் தெரிவுசெய்யத் தேவையான ஆலோசனை வழங்கும் உரிமை கொண்டுள்ளனர். ஆனால், பிள்ளைகளுடைய சுதந்திரத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிக்கும் வகையில் ஒரு குறிப்பிட்ட நபரைத் திருமணம் செய்யும்படி கட்டாயப்படுத்தக்கூடாது. அப்படி கட்டாயப்படுத்தினால் சட்டப்படி அத்திருமணம் செல்லாது.

இறை அழைத்தலை ஏற்காமல் பெற்றோர்கள் தடைசெய்தால், இக்காரியத்தில் பிள்ளைகள் தங்களது பெற்றோர்க்குக் கீழ்ப்படியக் கடமையில்லை. கடவுளுக்கே அவர்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும். "என்னைவிடத் தம் தந்தையிடமோ, தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்" (மத் 10:37).

## எப்படிப்பட்ட நன்றிக் கடன்?

ஒரு நல்ல தாய்க்கு ஒரு மோசமான மகன் இருந்தான். ஊர் மக்கள் "இவ்வளவு தங்கமான தாயின் வயிற்றிலே இப்படி ஒரு தறுதலைப்பிள்ளை பிறந்திருக்கிறதே! என்று வேதனையுடன் கூறினர்.

பிள்ளைகள் பெற்றோருக்குச் செலுத்தவேண்டிய முதல் நன்றிக்கடன் நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து பெற்றோருக்குப் பெருமை சேர்ப்பதாகும். பிள்ளைகளுடைய தீய நடத்தையால் ஒருசில பெற்றோர்கள் மாரடைப்பால் மாண்டுவிடுகின்றனர். தற்கொலையும் செய்துகொள்கின்றனர்.

**மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல்எனுஞ் சொல் (குறள் 703)**

இது குறட்பா. ஆனால், இன்று இக்குறளையே தலை கீழாக மாற்றிப் பின்வருமாறு சொல்கிறது இன்றைய நவீன இளைஞர் உலகம். மகள் தந்தைக்கு ஆற்றும் உதவி தனக்குத்தானே மாப்பிள்ளை தேடிக் கொளல்

## சன்னா? பென் 'சன்' னா?

மூன்று மகன்களின் அப்பாவிடம் அவர் நண்பர், "உங்கள் மூன்று பையன்களில் எந்த 'சன்' (Son) உங்களுக்குச் சாப்பாடு போடுகிறான்?" என்று கேட்டதற்கு அந்த அப்பா "பென்'சன்' (Pension)" என்று பதில் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடந்தே கல்லறைக்குப் போகிறேன்

நான்கு பிள்ளைகளைப் பெற்று வசதியோடு வாழ்ந்த ஓர் அப்பா சாகும் கட்டத்தில் இருந்தார். அவரின் பிள்ளைகள் அவருடைய அடக்கத்தை ஆடம்பரமாகக் கொண்டாடாமல் மிகவும் எளிய முறையில் சிக்கனமாகச் செய்து முடிக்கவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்ததைக் கேட்ட அந்த அப்பா, "நான் பெத்த மகன்களே, எனது அடக்கத்திற்கு நீங்க ஒரு ரூபா செலவழிக்க வேண்டாம். நானே மெதுவாக நடந்து கல்லறைக்குப் போய்விடுகிறேன்" என்றாராம்!

சிலவேளைகளில் இறந்த பெற்றோர்களை நல்லடக்கம் செய்யக்கூடப் பிள்ளைகள் தயங்குகின்றனர். உயிருடன் இருக்கும்போது பெற்றோரைப் பராமரித்து போதிய உணவு, உடை, மருத்துவ வசதி அளித்து, அவர்கள் சாகும்போது இவர்களைக் கிறிஸ்தவ முறைப்படி நல்லடக்கம் செய்து, அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுக்காத பிள்ளைகளின் ஆன்மா ஒருபோதும் சாந்தியடையாது!

## செத்தபிறகு சிறப்புச் செய்யும் பிள்ளைகள்

பலர் தங்களுடைய பெற்றோர் இறந்தபின் அவர்களை மேளதாளத்துடன். வாண வேடிக்கையுடன், பூச்சொரிந்து ஊரார் மெச்சும் வண்ணம் அடக்கம் செய்கின்றனர். இறந்த பெற்றோரின் ஆன்ம சாந்திக்காக 'கிரகோரியார் திருப்பலி' (30 நாள்களுக்குத் தொடர்ந்து) ஒப்புக்கொடுக்கின்றனர். பளிங்குக் கல்லறைகளைக் கட்டுகின்றனர். ஏழைகளுக்கு அன்னதானம் செய்கின்றனர். ஆனால், பெற்றோர்கள் உயிரோடு வாழ்ந்தபோது அவர்களை மதிக்கவோ, பராமரிக்கவோ இல்லை. இரண்டு கண்ணும் கெட்டபின் சூரிய நமஸ்காரம் எதற்கு?

## பத்துப் பிள்ளைகளைப் பெற்றவர் பட்டினி!

ஒரு பாட்டிக்கு ஒரு குருவானவர் நோயில்பூசுதல் அருடையாளம் வழங்கினார். அப்போது அப்பாட்டி தன்னுடைய ஒட்டிப்போன வயிறைக் காட்டி "பத்துப் பிள்ளைகளைப் பெற்ற வயிறு பட்டினியாகக் கிடக்குது" என்று சொல்லி அழுதார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தாய் பத்துப் பிள்ளைகளைப் பெற்று வளர்க்க முடிந்தது. ஆனால், பத்துப் பிள்ளைகளுக்கும் சேர்ந்து அத்தாய்க்குச் சாப்பாடு கொடுக்க முடியாத நிலை. தாய் தன்னுடைய பிள்ளைகளைச் சுமையாகக் கருதவில்லை. ஆனால் பிள்ளைகள் தங்களுடைய தாயைச் சுமையாகக் கருதுகின்றனர். காலத்தின் கோலம்..

## பெற்றோரை மதிப்பதால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

பெற்றோரை மதிக்கும் பிள்ளைகளுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்பற்றி ஆண்டவரின் வார்த்தை இவ்வாறு கூறுகின்றது:

"தந்தையரை மதிப்போர் பாவங்களுக்குக் கழுவாய் தேடிக்கொள்கின்றனர். அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைப்போருக்கு ஒப்பாவர். தந்தையரை மதிப்போருக்கு தங்கள் பிள்ளைகளால் மகிழ்ச்சி கிட்டும்; அவர்களுடைய மன்றாட்டுக் கேட்கப்படும். தந்தையரை மேன்மைப்படுத்துவோர் நீடு வாழ்வர். ஆண்டவருக்குப் பணிந்து நடப்போர் தஙகள் அன்னையருக்கு மதிப்பு அளிப்பர். தலைவர்கள்கீழ்ப் பணியாளர்கள்போல் அவர்கள் தங்கள் பெற்றோருக்குப் பணிசெய்வார்கள். சொல்லாலும் செயலாலும் உங்கள் பெற்றோரை மதியுங்கள். அப்பொழுது உங்களுக்கு ஆண்டவரின் ஆசி கிடைக்கும். தந்தையின் ஆசி பிள்ளைகளின் குடும்பங்களை நிலைநாட்டும். தாயின் சாபம் அவற்றை வேரோடு பெயர்த்தெறிந்துவிடும். உங்கள் தந்தையரை அவமதிப்பதில் பெருமை கொள்ளாதீர்கள்; உங்கள் தந்தையாரின் சிறுமை உங்களுக்குப் பெருமையாகாது. தந்தை மதிக்கப்பெற்றால் அது பிள்ளைகளுக்குப் பெருமை. தாய்க்கு இழிவு ஏற்பட்டால் அது பிள்ளைகளுக்குச் சிறுமை" (சீஞா 3: 3 - 11).

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தோபித்து என்பவரும் அவர் மனைவி அன்னாவும் அன்பு வாழ்க்கை நடத்தினர். அவர்களின் மகன் தோபியாவுக்கு ஒழுக்கநெறிகளைக் கற்பித்து வளர்த்தனர். அந்தக் குடும்பம் ஒரு மகிழ்ச்சியான குடும்பமாகத் திகழ்ந்து. தோபித்து முதிர்வயதில் கண் பார்வை இழந்தார். அவரது மனைவியும் மகனும் அவரை மிகுந்த அன்புடன் பராமரித்து வந்தனர்.

வயதான தோபித்து தன் மகனுக்குக் கூறிய அறிவுரை பின்வருமாறு, "உன் தாயை மதித்து நட. அவள் வாழ்நாள் முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைக் கைவிடாதே. அவளுக்கு விருப்பமானதைச் செய். எவ்வகையிலும் அவளது மனத்தைப் புண்படுத்தாதே. மகனே, நீ அவளது வயிற்றில் இருந்தபோது, உன் பொருட்டு அவள் தாங்கிய பல துன்பங்களை நினைத்துப்பார்'' (தோபி 4:3-4).

தந்தையின் அறிவுரையைத் தோபியா தன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தான். பெற்றோரும் அவனை மதித்து ஆசி வழங்கினர். இவ்வாறு தோபித்து குடும்பம் ஓர் அன்புக் குடும்பமாகத் திகழ்ந்தது.

## தாய் தந்தையைப் பேணும்படி இயேசு கற்பிக்கின்றார்

கிறிஸ்துவின் காலத்தில் ஒரு தீய பழக்கம் சட்டத்தின் தயவுபெற்றுக் கோலோச்சியது. ஒருவர் தம்முடைய சொத்தைக் கடவுளுக்கு நேர்ச்சையாகக் (கோர்போன்) கொடுத்துவிட்டார் என்றால், அவருக்குத் தம் பெற்றோரைப் பராமரிக்க வேண்டிய கடமையில்லை. அக்கடமையிலிருந்து அவர் முற்றிலுமாக விடுவிக்கப்படுகிறார்.

மனிதரால் உருவாக்கப்பட்ட இந்த மனிதநேயமற்ற வழக்கத்தைக் கிறிஸ்து வன்மையாகக் கண்டித்து, தாய் - தந்தையரைப் பேணிப் பராமரிக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். மனித மரபைக் காப்பாற்றுவதற்காகக் கடவுளுடைய கட்டளையை வெறுமையாக்க வேண்டாமென்று எச்சரித்தார் (மாற் 7:9-13).

"தந்தை தாய் பேண்" (ஆத்திசூடி 20), "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" (கொன்றை வேந்தன் 1) என்பன தமிழ் இலக்கியங்கள் பிள்ளைகளுக்கு கூறும் அறிவுரையாகும்.

## அதே அளவையால் அளக்கப்படும்

மகன் தன் அப்பாவிடம் "அப்பா, ஒவ்வொரு வினைக்கும் அதற்குச் சமமான அளவில் எதிர்வினை இருக்கிறது என்று அறிவியல் ஆசிரியர் சொன்னதை நான் நம்பவில்லை. ஏனெனில் அம்மா உங்களைத் திட்டினால், நீங்கள் அம்மாவை எதிர்த்துத் திட்டுவதில்லை. அம்மா உங்களை அடித்தாலும் நீங்கள் பதிலுக்கு அம்மாவை எதிர்த்து அடிப்பதில்லை" என்றான் இது விதிவிலக்கு! விதிமுறையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் தன் அப்பாவை அடித்து வீட்டுக்கு வெளியே இழுத்துக்கொண்டு போனான். அப்போது அப்பா அழுதுகொண்டு, "மகனே, என் அப்பாவை வீட்டுக் கதவுவரைதான் இழுத்துக்கொண்டு போனேன்" என்றார். ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு

பெற்றோர்களை மதிப்பவர்கள் அவர்களுடைய பிள்ளைகளால் மதிப்புப் பெறுவர். பெற்றோர்களைத் தரக்குறைவாய் நடத்துபவர்கள் அவர்களுடைய பிள்ளைகளால் தரக்குறைவாய் நடத்தப்படுவார்கள். "எந்த அளவையால் அளக்கிறீர்களே அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக் 6:38).

விழுதுகள் மரத்தைத் தாங்குவதுபோல் பிள்ளைகள் பெற்றோரைத் பாதுகாத்துத் தாங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 14

# சருகாகும் சகோதர உறவுகள்



'சகோதர பாசம்' என்ற வார்த்தை தனித்துவமான அர்த்தம் நிறைந்தது! குடும்பத்தில் சகோதரங்களாக வாழ்வது சந்தோசமான அனுபவமே! நாம் வளர்ந்து பெரியவர்களாகி, தனித்தனிக் குடும்பங்களாகப் போனபின்னரும் குடும்பத்தில் சகோதரங்களாக வாழ்ந்த நாட்கள் பசுமையாகவே இருக்கும்.

சக உதிரத்தில் பிறந்தவர்களைத்தான் 'சகோதரங்கள்' என்று சொல்கிறோம். நமது சமுதாயம் உடன்பிறந்தவர்களிடையே வலுவான உறவை ஊக்குவிக்கின்றது. அனேகமான குடும்பங்களில் வாழ்நாட்கள் முழுவதும் சகோதர சகோதரிகள் ஒருவரை ஒருவர் கவனித்துக்கொள்வதும், நேசிப்பதும் உண்மையிலேயே போற்றப்படவேண்டிய விடயங்களாகும்.

தாயும் தந்தையும் வேலைக்குப் போகும்போது பல இடங்களில் மூத்த பிள்ளைகள் இளைய பிள்ளைகளைக் கவனித்துக் கொள்கிறார்கள். இது சகோதரங்களுக்கிடையே உள்ள உறவை வலுப்படுத்துகின்றது. பிள்ளைகள் வளரும்போது, சகோதர சகோதரிகள் திருமணம் செய்துகொள்ளும்வரை தமது இளைய சகோதரங்களை ஆதரித்துப் பேணிக்காத்து வருகின்றார்கள். பெற்றோர் உயிரோடு இருக்கும்போதுகூட பெண் சகோதரங்களுக்குத் திருமணம் செய்துவைத்தபின்தான் ஆண்சகோதரங்கள் திருணம் செய்துகொள்கிறார்கள். இளைய சகோதரங்களின் உயர்வுக்காக. மேம்பாட்டுக்காக,, கல்வி வளர்ச்சிக்காக, திருமண வாழ்வுக்காக அரும்பாடுபடுகின்றார்கள். சகோதரங்களுக்காக தம் வாழ்வை அர்ப்பணித்த மனிதர்கள் பலரை நமது சமுதாயச் சூழலில் நாம் சந்தித்திருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் பிறந்தவர்கள் வயதாகும்போது, அவர்களது பழைய உறவு கைகொடுப்பதாக உள்ளது. உதாரணமாக ஒரு சகோதரன் தாரமிழந்தவராக ஆகிவிட்டால், அவர் அவரது தனிமையான அல்லது விதவையான சகோதரியின் வீட்டில் வாழலாம்.

ஒரு தாயின் வயிற்றில் பிறந்து ஒரே வீட்டில் உண்டு, குடித்து உறவாடிய சகோதர சகோரிகள் சிலவேளைகளில் தீராப் பகையாளிகளாக மாறுகின்ற நிலைப்பாடுகளையும் பார்க்கின்றோம். பல இடங்களில் சகோதர உறவுகள் சருகாகிவிடுகின்ற சூழ்நிலைகளைக் கவலையோடு காண்கின்றோம்.

## அன்பே குடும்பத்தின் ஆணி வேர்

கதம்ப மலரைப்போன்றது குடும்ப உறவு. ஒவ்வொரு மலரும் மாலைக்கு அழகு சேர்ப்பதைப்போல, குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய வாழ்வால் அதற்கு மெருகூட்ட வேண்டும். வாழ்வதென்பது மற்றவர்களுடன் தொடர்புகொள்வதில் அடங்கியுள்ளது. மனிதன் ஒரு தனித்தீவு அல்ல. மற்றவர்களை அன்புசெய்வதிலும், மற்றவர்களால் அன்புசெய்யப்படுவதிலும்தான் மனித வாழ்வு சுவை பெறுகிறது. தேடல்கள் உள்ளவரைதான் வாழ்வில் ருசியிருக்கும்.

**உடைந்த கண்ணாடி பிம்பம் காட்டாது,**
**உதிர்ந்த மலர்கள் கிளையில் ஒட்டாது.**
**அன்பில்லாக் குடும்பம் ஆனந்தம் காணாது.**

## அன்பு பல வடிவங்களை எடுக்கின்றது

எல்லா உறவுகளுக்கும் அடிப்படை அன்பு! யாரை நாம் அன்பு செய்கின்றோமோ அதற்கேற்ப அன்பு பல பெயர்களையும், உருவங்களையும், வடிவங்களையும் எடுக்கிறது.

இரு நண்பர்களுக்கிடையே உள்ள அன்பு 'நட்பு', கணவன்-மனைவிக்கிடையே உள்ள அன்பு 'காதல்'. பெற்றோருக்குப் பிள்ளைகள்மேல் உள்ள அன்பு 'பாசம்'. கடவுள்மீது நமக்குள்ள அன்பு 'பக்தி'. கடவுள் நம்மீது காட்டும் அன்பு 'அருள்'. நமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின்மீதும், மொழியின்மீதும் உள்ள அன்பு 'பற்று'. இவ்வாறு எல்லாம் உறவுகளுக்குமிடையே இழையோடுவது அன்பு.

## உன்னுடைய பாசம் என்னுடைய காதல்

தமிழ் ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம் "பாசத்துக்கும், காதலுக்கும் இடையேயுள்ள வேறுபாடு என்ன? "என்று கேட்டதற்கு ஒரு மாணவன். "சார், நீங்கள் உங்க பொண்ணுமேல் வச்சிருக்கிற அன்புக்குப் பெயர் பாசம்" உங்க பொண்ணுமேல நான் வச்சிருக்கிற அன்புக்குப் பெயர் காதல்" என்றான். அதற்கு ஆசிரியர் "சரியான பதில் உட்காருங்க மாப்பிள்ளை" என்றார்.

## அந்நியன் ஆகிவிட்ட அண்ணன்!

அருட்தந்தை எஸ். செர்வாசியுஸ் எழுதிய 'முத்துக்கள்' என்ற நூலில் ஊதாரிப்பிள்ளை உவமையில் வரும் மூத்த மகனின் மனநிலையை கவித்துவத்தோடு விபரிக்கின்றார். தனது இளைய சகோதரனை ஏற்றுக்கொள்ள மனமில்லாத மூத்த சகோதரனின் நிலையை நூலாசிரியர் இவ்வாறு காட்டுகின்றார்.

"அதற்கு ஊழியன், உம் தம்பி வந்துவிட்டார். அவர் நலமாக தம்மிடம் வந்துசேர்ந்ததால் உம் தந்தை கொழுத்த கன்றை அடித்திருக்கின்றார்" என்றான். அவனோ சினந்து உள்ளே நுழைய மனமில்லாதிருந்தான் (லூக் 15: 27).

**சினந்து வெளியே நிற்பவன் யார்?**
**அண்ணனாம்? என்னால் ஏற்க இயலவில்லை.**
**அண்ணனென்றால் - தம்பி**
**வந்திட்ட செய்தி கேட்டு**
**சிந்தை மகிழ்ந்திருப்பான்**
**துள்ளிக் குதித்திருப்பான் - தம்பியை**
**அள்ளி அணைத்திருப்பான்!**
**தந்தையின் நெஞ்சுவக்க – மீண்டும்**
**விருந்து படைத்திருப்பான்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவனோ!
வந்தவனை நெறிகெட்டு வாழ்ந்தவன்
எனத் தூற்றுகின்றான்!
சொத்தை சூறையாடியவன்
என இடித்துரைக்கின்றான்!
இவையனைத்திற்கும் அடிப்படையான – தனது
இழிந்த சுயநலத்தை வெளிப்படுத்துகின்றான்!

இல்லத்தைவிட்டு தம்பி வெளியேறும்போது – அவனைத் தனது
உள்ளத்தைவிட்டே வெளியேற்றுகின்றான்!
தந்தையன்பு அவனது பிரிவைத் தாங்கவியலாது
சிந்தைநொந்து வாடி வதங்குவதை
அவன் பொருட்படுத்தவில்லை!

'சுதந்திரமாக வாழப்' புறப்பட்ட தம்பிக்கு தனது
சுயநலத்தின் காரணமாக இதயத்திலே கல்லறை கட்டிவிட்டான்!

திரும்பி வரமாட்டானா என ஏங்கித்தவிக்கும்
தந்தையுள்ளத்தை அவன் உணரமுன்வரவில்லை!

'போட்டியில்லை தனக்கினி' என்று தம்பியை மறந்து
பெருஞ்செல்வம் ஈட்டுவதிலே ஈடுபட்டிருக்கின்றான்!
'இழந்த செல்வத்தை' என்று பெறுவேனோ என
இதயமுருகும் தந்தையை கவனத்தில் ஏற்கவில்லை!

காணாமற்போனவன் கண்ணெதிரே நின்றது
அவனுக்குப் பிடிக்கவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்டுபோனவன் மீண்டுவந்தது
அவனுக்குப் பிடிக்கவில்லை!
காரணம், அவன் அண்ணனாக இருக்கவில்லை
அந்நியன் ஆகிவிட்டான்!

தம்பியின் வீழ்ச்சியும், மகிழ்ச்சியும்
தன்னுடைய வீழ்ச்சிதான், மகிழ்ச்சிதான்
என ஏற்கத்தெரியாத அண்ணன் ஒரு முரண்பாடு!

தந்தையுடையவும் தம்பியுடையவும்
சொந்தக்காரர்களுக்குத்தான் - அவர்களின்
உள்ள உணர்வுகளை ஏற்க தெரிந்தவர்களுக்குத்தான்
விருந்து என்றால்
'இந்த அண்ணன்' உண்மையிலேயே
வெளியிலே நிற்க வேண்டியவன்தான்!

**அடுத்தடுத்து வாழ்கின்ற அந்நியர்கள் வேண்டாம்:**
**அடுத்தவர்களுக்காக வாழ்கின்ற அண்ணன் தம்பி வேண்டும்!**

## என் சகோதரனுக்கு நான் காவலாளியா?

பிள்ளைகள் தங்களுக்கிடையில் சகோதர பாசத்தை மறந்து பெற்றோரின் சொத்துக்களைப் பிரித்துக்கொள்வதில் சண்டையிட்டுக்கொள்வதைப் பார்க்கின்றோம். சொத்துக்களைப் பிரித்துக்கொள்வதில் ஏற்படும் சண்டை சில இடங்களில் தீராப் பகையாக மாறி நன்மை தீமைகளில்கூட சகோதரங்கள் பங்குகொள்ளாத துர்ப்பாக்கிய நிலைமைகளைக் காண்கின்றோம்.

ஐந்து வயதில் அண்ணன் தம்பி. பத்து வயதில் பங்காளி என்ற நிலையில் சகோதர உறவுகள் இற்று நிலைமாறி வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயீன் தன் சகோதரனைப் படுகொலைசெய்தபோது இறைவன், "உன் சகோதரன் ஆபேல் எங்கே? எனக் கேட்கின்றார். அதற்குக் காயீன் கூறும் பதில் ஆச்சரியமானது, "என் சகோதரனுக்கு நான் என்ன காவலாளியா?" எனக் கேட்கின்றான். இன்றும்கூட இத்தகைய பதில்கள்தான் சொல்லாமல் சொல்லப்படுகின்றன.

## குடும்பங்களில் மூன்று முக்கியமான சொற்கள்

திருத்தந்தை பிரான்சிஸ் எளிமையானவர். அவருடைய போதனைகளும் எளிமையானவை! குடும்பங்களில் பயன்படுத்தவேண்டிய மூன்று முக்கியமான வார்த்தைகளை அவர் எடுத்துக்காட்டுகின்றார். 'தயவுசெய்து' (Please), 'நன்றி' (Thank you), 'மன்னித்துக் கொள்ளுங்கள்' (sorry) என்பவையே அவ்வார்த்தைகள்.

இந்த மூன்று வார்த்தைகளைப் பழக்கப்படுத்தும் குடும்பங்களில், கோபம், வன்முறை ஆகியவை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, ஒப்புரவு, அமைதி போன்ற பண்புகள் நிலவும் வாய்ப்புக்கள் அதிகம் என்ற உறுதியை திருத்தந்தை வழங்குகிறார்.

சகோதர பாசத்தை முதலில் குடும்பத்தில் அனுபவிப்போம். பின்னர் அதைச் சமூகத்தில் வாழுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயல் 15**

# முதுமை ஆசியா? சாபமா?



இன்று பொருளாதார நிலை உயர்ந்திருக்கிறது. தொடர்பு ஊடகங்களின் வீச்சு வளர்ந்துள்ளது. ஆனால், மானுட மதிப்பீடுகள் வளர்ந்துள்ளனவா என்பது கேள்விக்குறியே. மதிப்பீடுகள் சரிந்துள்ளன என்பதற்கான ஓர் அடையாளம் நம் சமுதாயம் முதியோரை நடத்தும் முறை. இன்று முதியோர் இல்லங்கள் பெருகி வருகின்றன. குடும்பங்களில் வாழும் முதியோர் ஒரு பாரமாகவே கருதப்படுகின்றனர். இந்த நிலையை மாற்றி, முதுமைக்கு மதிப்பு அளிக்கவும், முதியோரைப் போற்றவும் நாம் முன்வரவேண்டும்.

**இளமையில் மனைவியின் காவலன் கணவன்**
**முதுமையில் கணவனின் ஊன்றுகோல் மனைவி**
**தாங்கிப் பிடிக்கத் துணை இருந்தால்**
**தள்ளாடும் முதுமையும் இளமையே!**

## ஓட்டுனரும் இடம் கொடுத்திருப்பார்...!

ஒரு பேருந்தில் வயதான ஒரு பெரியவர் ஏறினார். வேறு இருக்கைகளில் இடமில்லாததால் நடத்துனரின் ஆசனத்தில் அமர்ந்தார். நடத்துனர் அவரிடம் கோபத்துடன் "டேய் கிழடா! எழுந்திரு! அது என் இருக்கை என்றார். அப்பெரியவர் மிகுந்த வேதனையுடன் எழுந்தார்.

அடுத்த நிறுத்தத்தில் ஓர் அழகிய இளம் பெண் பேருந்தில் ஏற, நடத்துனர் எழுந்து தன் இருக்கையை அப்பெண்ணுக்குக் கொடுத்தார். பெரியவர் சிரித்துக்கொண்டு, "நல்லவேளை, ஒருத்தி மட்டும் ஏறினா, இன்னொருத்தியும் ஏறியிருந்தால் ஓட்டுனரும் எழுந்து தன் இடத்தைக் கொடுத்திருப்பான்" என்றார். பேருந்தில் இருந்த பயணிகள் வாய்விட்டுச் சிரிக்க நடத்துனர் அவமானம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுமை - இறைவனின் ஆசிகளுள் ஒன்று

விவிலியத்தில் முதுமை என்பது இறைவனின் ஆசிகளுள் ஒன்று. இறைவனால் அழைக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்ட பலரும், முதிய வயதுவரை வாழ்ந்து இறந்ததை விவிலியம் பதிவுசெய்துள்ளது.

“நீ மிகவும் முதிர்த்த வயதில் அமைதியாக உன் மூதாதையரிடம் சென்றபின் நல்லடக்கம் செய்யப்படுவாய்” (தொநூ 15:15) என்பது ஆபிரகாமுக்குக் கடவுள் அளித்த வாக்குறுதி. யாக்கோபு நூற்றுமுப்பது ஆண்டுகள் வாழ்ந்தார் (தொநூ 47:9). யோசேப்பு நூற்றுப்பத்து ஆண்டுகள் உயிர்வாழ்ந்தார். (தொநூ50:22) மோசே இறக்கும்போது அவருக்கு வயது நூற்றிருபது. “அவரது கண்கள் மங்கினதுமில்லை. அவரது வலிமை குறைந்ததுமில்லை” (34:7) என்று அவரைப் போற்றுகிறது இணைச் சட்டநூல் பலவித சோதனைகளால் அலைக்கழிக்கப்பட்டும், இறைநம்பிக்கையில் ஊன்றி நின்ற யோபு, நூற்று நாற்பது ஆண்டுகள் வாழ்ந்தார் (யோபு 42:16). நீதிமானான தோபித்து நூற்றுப் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தார் (தோபி 14:2).

## நரைமுடி மதிப்பிற்குரிய மணிமுடி

முதுமையின் மதிப்பு நீடிய வாழ்வினால் வருவதன்று, ஆண்டுகளின் எண்ணிக்கை அதற்கு அளவுகோலன்று, “ஞானமே மனிதருக்கு உண்மையான நரைதிரை. குற்றமற்ற வாழ்க்கையே உண்மையான பழுத்த முதுமை” (4:9) என்கிறது சாலகோனின் ஞானம்.

“நரைமுடி மதிப்பிற்குரிய மணிமுடி. அது நேர்மையான நடத்தையால் வரும் பயன்” (16:31) என்று வயதுமுதிர்வைப் பாராட்டுகிறது நீதிமொழிகள் நூல்.

முதியோர் ஞானம் நிறைந்தவர்கள். அவர்களது நீண்ட வாழ்வின் அனுபவங்களிலிருந்து ஏராளம் கற்றுக்கொண்டவர்கள். எனவேதான், பிறருக்கு அறிவுரை கூறும், வழிநடத்தும் தகுதியை அவர்கள் பெறுகின்றனர்.

“தீர்ப்பு வழங்குவது நரைதிரை விழுந்தோருக்கு ஏற்றது. அறிவுரை கூறுவது பெரியவர்களுக்குத் தக்கது. முதியோருக்கு ஞானமும் மாண்புடையோருக்குச் சிந்தனையும், அறிவுரையும் எத்தனை சிறந்தவை. பரந்த பட்டறிவே முதியோருக்கு மணிமுடி” (25:4-6) என்று கூறுகிறது சீராக்கின் ஞானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுமைக்கு மரியாதை!

இத்தகைய சிறப்புப்பெற்ற முதியோருக்கு மாண்பும், மதிப்பும் வழங்கப்பட வேண்டும். "நரை திரண்டவருக்குமுன் எழுந்து நில், முதிர்ந்தவர் முகத்தை மதித்து நட. கடவுளுக்கு அஞ்சி வாழ், நானே ஆண்டவர்" (லேவி 19:32) என்கிறார் இறைவன். "முதியோர் எவரையும் இகழாதே" (சீரா 8:6) என்பது நம் அனைவரின் உள்ளத்திலும் பதிய வேண்டிய ஓர் இறைவாக்கு. "முதியோரிடம் கடுமையாய் இராதே. அவர்களைத் தந்தையராய் மதித்து ஊக்குவி" (1திமொ 5:1) என்னும் பவுலடினாரின் அறிவுரை நாம் அனைவரும் கடைப்பிடிக்கவேண்டிய ஒன்று.

## வயதான பெற்றோர் இன்னும் மதிப்புக்குரியவர்கள்

வயது முதிர்ந்த அனைவருமே மரியாதைக்குரியவர்கள் என்றால், வயது முதிர்ந்த சொந்தப் பெற்றோர் இன்னும் அதிக மாண்புக்குரியவர்கள் அல்லவா?

"குழந்தாய், உன் தந்தையின் முதுமையில் அவருக்கு உதவு. அவரது வாழ்நாளெல்லாம் அவரது உள்ளத்தைப் புண்படுத்தாதே" (சீரா 3:12) என்பதை எல்லாப் பிள்ளைகளும் மனத்தில்கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் உயிரோடு இருக்கும்போதே, பெற்றோர் முதியோர் இல்லத்தில் வாழ்வது மாபெரும் இழுக்கு! 'தம் உறவினரை சிறப்பாகத் தம் வீட்டாரை ஆதரியாதோர் விசுவாசத்தை மறுதலிப்பவராவர். அவர்கள் விசுவாசமற்றோரைவிடத் தாழ்ந்தோராவர்" (1திமொ 5:8) என்னும் கடுமையான மொழிகளை இத்தகைய பிள்ளைகள் மனதில் கொள்ளவேண்டும்.

## பாகப்பிரிவினை

'பாகப்பிரிவினை' என்ற பெயரில் நான் எழுதிய கவிதை ஒன்று இன்றைய வயதான பெற்றோரின் துயரநிலையைக் காட்டுவதாக உள்ளது.

வீட்டை விற்று தத்தம் பங்கை எடுத்துக்கொண்ட பிள்ளைகள் இப்போது தமக்குள் வாதிடுகின்றனனர், "அம்மா யாருக்கு? அப்பா யாருக்கு?" பாகப்பிரிவினையில் பிரிக்கப்படுகின்றனர் அம்மாவும் அப்பாவும்! "அம்மா உனக்கு! அப்பா எனக்கு!" ஐம்பது ஆண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைபிரியாத அம்மாவும் அப்பாவும் கண்ணீரோடு கையசைத்துப் பிரிகின்றனர்!

## முதியோர் என்ன செய்யலாம்?

முதியோர் பயனற்றவர்கள், அவர்கள் இந்தச் சமுதாயத்துக்குப் பாரம் என்பதெல்லாம் நம்முடைய மரபுகளுக்கு மாறான சிந்தனை. "பயன்படுத்து, தூக்கி எறி" என்கிற நுகர்வுக் கலாச்சாரத்தின் நச்சுக் கொள்கை. இவ்வுலகில் பயனற்றவர் என்று எவருமிலர். இவ்வுலகம் மேன்மைடைய எல்லாரும் பங்களிப்புச் செய்யலாம்.

"ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டோர் நம் கடவுளின் கோவில் முற்றங்களில் செழித்தோங்குவர். அவர்கள் முதிர்வயதிலும் கனிதருவர், என்றும் செழுமையும், பசுமையுமாய் இருப்பர்" (92:13-14) என்கிறது திருப்பாடல். ஆம், முதியோர் முதிர்வயதிலும் கனிதரலாம், சரியான விதத்தில் ஊக்குவிக்கப்பட்டால்!

தோபித்து தன் வயது முதிர்ந்த காலத்திலும் "வளமாக வாழ்ந்து தருமங்கள் புரிந்துவந்தார். கடவுளைப் போற்றுவதிலும் அவரது பெருமையை அறிக்கையிடுவதிலும் ஓயாது ஈடுபட்டிருந்தார்" (தோபி 14:2). எண்பத்துநான்கு வயது இறைவாக்கினர் அன்னா, "கோவிலைவிட்டு நீங்காமல் நோன்பிருந்து மன்றாடி, அல்லும் பகலும் திருப்பணி செய்துவந்தார்" (லூக் 2:37). "வயது முதிர்ந்த ஆண்கள், அறிவுத் தெளிவு, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்களாய் இருந்து, நம்பிக்கை, அன்பு, மனஉறுதி கொண்டவர்களாய்த் திகழவேண்டும்" (தீத் 2:3) அவ்வாறு, "வயதுமுதிர்ந்த பெண்களும் தூய நடத்தை உடையவர்களாய், நற்போதைனை அளிப்பாவர்களாய்" விளங்கலாம் (தீத் 2:2-3) இவ்வாறு ஞானத்தின் அடையாளமாய் இருப்பர்.

முதியோரைக் கடந்த காலத்திலேயே விட்டுவைக்காமல் நிகழ்காலத்தில் வாழவைப்போம். ஏன் எதிர்காலக் கனவுகளையும் காணச்செய்வோம். "இறுதி நாள்களில் என் ஆவியைப் பொழிவேன், உங்கள் முதியோர் கனவுகளைக் காண்பர்" (திபா 2:17) என்பது ஆண்டவரின் வாக்கு.

## முதியவர்களைச் சமமாகக் கருதவேண்டும்

சில குடும்பங்களில் தாத்தா, பாட்டி, இன்னும் மற்ற உறுப்பினர்கள் கூடிவாழ்வதைக் காண்கிறோம். இது போற்றுதற்குரியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் குடும்ப வளர்ச்சிக்காகக் கடுமையாக உழைத்தவர்கள், அனுபவம் மிகுந்தவர்கள். குடும்பநலனில் அக்கறைகொண்டவர்கள். நமது குடும்பத்திற்காகப் பல தியாகங்களைச் செய்தவர்கள். எனவே நாம் அவர்களை மதிக்க வேண்டும். அவர்களுடைய அறிவுரைகளுக்குச் செவிமெடுக்க வேண்டும், ஆலோசனைகளைக் கேட்க வேண்டும். அவர்களுக்கு உதவிகள் செய்யவேண்டும். இவ்வாறு முதியவர்களும் நம் குடும்பத்தின் உறுப்பினர் என்ற முறையில் அவர்களைச் சமமாகக் கருத வேண்டும்.

## வயதான ஒரு தாயின் மனக்குமுறல்

**ஒரு தாயின் மனக்குமுறலை**
**இந்தக் கவிதையில் தரிசிக்க முடிகிறது.**

அன்று நீ அழுதபோது
உன்னைத் தரதரவென்று இழுத்துப்போய்
பள்ளிக்கூடத்தில் சேர்த்தேன்.
நீ படித்துப் பெரிய ஆளாக
வரவேண்டும் என்ற எண்ணத்தில்

இன்று நான் அழுதேன்.
என்னை இழுத்துப்போய்
முதியோர் இல்லத்தில் சேர்க்கிறாயே
அங்கே நான் எதைப் படிக்க வேண்டுமென்று?

பத்து மாதம் உன்னை வயிற்றில் சுமந்தபோது
பாரமாக நான் நினைக்கவில்லை.
உன் பத்தினி வந்ததும்
உன் வீட்டில் நான் ஓரமாக இருப்பதையே
நீ பாரமாக நினைக்கிறாயே.

நீ ஓடி ஓடி விளையாடியபோது
நீ செல்லும் இடமெல்லாம்
உன் பின்னாலே வந்து
உனக்கு சோறு ஊட்டி
உன் வயிறு நிறைந்ததில்
என் வயிறும் மனமும் நிறைந்தது.
எனக்கு வயிறார உணவு வேண்டாம்.
ஒரு வேளையானாலும் உன்வீட்டு சோறு போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் வருங்காலத்திற்காக
உன்னைப் பெற்று வளர்த்து
படிக்கவைத்துக் கல்யாணம் முடித்து
நீ வாழ்வதற்காக உன்னை ஆளாக்கினேன்.
என் எதிர்காலத்திற்காக
நான் சாவதற்கு என்னை நீ
பார்த்துக்கொள்ளக்கூட மறுக்கிறாய்.

பிள்ளையைப் பெறாமல் இருந்திருந்தால்
மலடியாகியிருப்பேன்.
யாருமே இல்லாதிருந்தால்
அநாதையாகியிருப்பேன்.
பிள்ளையைப் பெற்றும்
இன்று நான் முதியோர் இல்லத்தில்.
நான் மலடியா? நான் அநாதையா?
என் பெயர் என்ன?

\- தமிழினி
(நன்றி – உதயன் - சூரிய காந்தி – 23.11.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 16
# குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை



"திருச்சபை குடும்பத்தின் வழியாகவே பயணிக்கிறது" என்கிறார் திருத்தந்தை இரண்டாம் அருள்சின்னப்பர். குடும்பத்தில்தான் கிறிஸ்து மீண்டும் மீண்டும் பிறக்கிறார், வளர்கிறார், உருமாற்றம் அடைகிறார், இரத்த வியர்வை வேர்க்கிறார், இறக்கிறார், உயிர்க்கிறார்!

"கோவில் என்பதும் ஆலயமே, குடும்பம் என்பதும் ஆலயமே" என்ற பாடலில் நாம் குடும்பத்தை ஒரு கோவிலாகப் பார்க்கின்றோம். கரம் பிடிக்க அருள் செய்கின்ற இறைவனே வழிநடத்தி, கரையேறவும் உதவிசெய்கிறார் என்பதை உணர்ந்து ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும் இறைவனைத் தேடவேண்டும், இறையன்பில் வளரவேண்டும்.

## குடும்பம் - மூவொரு இறைவனின் சாயல்

தந்தை, மகன், தூய ஆவியார் ஆகியோரிடையே நிகழும் உறவு ஒன்றிப்பின் சாயலாகக் குடும்பம் அமைந்துள்ளது. எனவே குடும்பம் மூவொரு இறைவனின் சாயல் எனப்படுகின்றது. குடும்ப உறுப்பினர்களிடையே ஒரேவிதமான உள்ளுணர்வுகளும், பாசப்பிணைப்புகளும், ஈடுபாடுகளும், அனைத்துக்கும் மேலாக ஒருவர் மற்றவர்பால் மதிப்பும் மரியாதையும் எழுகின்றன. இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுவதுபோல, "குடும்பத்தில் பாச உணர்வோடுகூடிய மன ஒன்றிப்பும், மணமக்களின் கூட்டு ஆலோசனையும், குழந்தைகளைப் பயிற்றுவிப்பதில் பெற்றோரின் கருத்தான ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன" (இன்றைய உலகில் திருச்சபை, எண் 52).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஒரு குடும்பத்தில் பிறந்து வாழ்கிறோம். குடும்பமே மனித வாழ்வுக்கு அடித்தளமாகத் திகழ்கிறது. நமது குடும்பம் மகிழ்ச்சியான குடும்பமாக் திகழ அங்கு அன்பு அடிப்படையாக அமைந்திருக்க வேண்டும். அன்பு இருக்கும் குடும்பம் மூவொரு இறைவனைப் பிரதிபலிக்கும்.

இறைவன் தந்தை, மகன், தூயஆவி ஆகிய மூன்று ஆள்களாக உள்ளார். இம்மூன்றும் ஆள்களும் எத்தகைய வேறுபாடுமின்றி சமத்துவ நிலையில் வாழ்க்கின்றனர். ஒருவருக்கொருவர் தம்மை அர்ப்பணிக்கின்றனர். ஒருவரையொருவர் முழுமையாக அன்பு செய்கின்றனர். இதுபோன்று ஒரு குடும்பத்தில் தாயும், தந்தையும், பிள்ளைகளும் அன்பின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் தங்களை அர்ப்பணித்துச் செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்படும் குடும்பம் மூவொரு இறைவனைப் பிரதிபலிப்பதாக அமையுமன்றோ!

## குடும்பம் - மீட்பை வழங்கும் ஓர் சமூகம்

ஒரு வீட்டிலே கணவனும் மனைவியும் இடைவிடாமல் சண்டையிட்டு, ஒருவர் மற்றவரைப் 'பேய்' என்றழைத்தனர், அவர்களின் ஒரே மகளைப் 'பேய்க்குட்டி' என்று திட்டுவர். எனவே அத்தெருவில் வாழ்ந்தவர்கள் அக்குடும்பத்தைப் 'பேய்க்குடும்பம்' என்றழைத்தனர்.

கிறிஸ்தவக் குடும்பம் பேய்க் குடும்பமோ, நோய்க் குடும்பமோ அல்ல. திருச்சபையைப் போலவே கிறிஸ்தவக் குடும்பமும் மீட்படைந்த ஒரு சமூகம். மீட்பை வழங்கும் ஒரு சமூகம். எனவேதான் இரண்டாம் வத்திக்கான் சங்கம் குடும்பத்தை ஓர் 'இல்லத் திருச்சபை' என்றழைக்கிறது (திருச்சபை எண் 11). விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவற்றின் சமூகமான குடும்பம் புதிய ஏற்பாட்டில் தனிப்பட்ட முக்கியத்துவம் பெறுகிறது.

## குடும்பம் - அருள்வாழ்வுக்கு அழைக்கப்படுகின்றது

"கிறிஸ்துவ மணமக்கள் தங்களின் நிலைமயிலிருந்து எழும் கடமைகளையும் மாண்பையும் செயல்படுத்துவதற்கு தனிப்பட்டதோர் அருளடையாளத்தின் வழியாக வலுப்பெறுகின்றனர். ஒருவகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநிலைப்படுத்தப்படுகின்றார்கள். இந்த அருளடையாளத்தின் ஆற்றலால் அவர்கள் தங்களின் திருமண மற்றும் குடும்பக் கடமைகளை நிறைவேற்றுகின்றனர், விசுவாசம், நம்பிக்கை, பரம அன்பு ஆகியவற்றால் தங்களின் வாழ்வு முழுவதையும் நிறைத்து நிற்கும் கிறிஸ்துவின் ஆவியால் நிரப்பப்படுகின்றனர். அதிகமதிகமாகத் தங்களை நிறைவுடையவர் ஆக்குகின்றனர். அவ்விதமே ஒருவர் ஒருவரைப் புனிதப்படுத்துகின்றனர், இவ்வாறு அவர்கள் ஒன்றுசேர்ந்து இறைவனை மாட்சிப்படுத்துகிறார்கள்." (இன்றைய உலகில் திருச்சபை, 4412)

இயேசு, திருமண அருட்சாதனத்தின் வழியாகத் தம்பதியருக்கு அருள் வாழ்வு வாழ அழைத்தலையும் ஆற்றலையும் கொடுக்கிறார். குடும்பத்தில் பெற்றோரும் பிள்ளைகளும் இறைவனோடு உறவில் வளர்கிறார்கள், தங்களுக்குள் நல்லுறவு கொள்கிறார்கள், அடுத்திருப்பவரோடு அன்புறவில் வாழ்கிறார்கள். இதையே 'குடும்ப அருள்வாழ்வு' என்கிறோம்.

## குடும்பம் - இறை உறவில் வளரவேண்டும்

"ஆண்டவராகிய யேசுவின்மேல் நம்பிக்கைகொள்ளும். அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள்" (திப 16: 31) குடும்பம் மீட்படைய வேண்டுமானால் நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை என்றால் என்ன? வெறுமனே இறைவனுடைய இருப்பை நம்புவது மட்டுமல்ல, முழுமையாக அவரிடம் சரணடைதல், ஒப்புக்கொடுத்தல், இறை உறவில் வாழ்தல், வளர்தல்!

ஒரு கிறிஸ்துவக் குடும்பம் இறை உறவில் வளர வழிகள்: 01. செபம் 02. இறைவார்த்தை 03. அருளடையாளங்கள் (அருட்சாதனங்கள்) ஆகிய மூன்று அம்சங்கள் அவசியமானவை.

## குடும்பமும் செபமும்

"கூடிச்செபிக்காத குடும்பம் கூரையில்லாத வீட்டிற்குச் சமம்" என்பார்கள். கூடிச்செபித்தால் கோடி நன்மை விளையும். "இறைவனையும் மனிதனையும் இணைக்கின்ற பொற்சங்கிலி செபம்" என்கிறார் புனித பொன்வாய் அருளப்பர்.

செபத்தின் வழியாகக் குடும்ப உறுப்பினர்கள் இறைவனைச் சந்திக்கிறார்கள், அவரோடு பேசுகிறார்கள், அவர் சொல்வதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறார்கள். அதன் மூலமாகக் கடவுள் அவர்களிடையே வாழ்கிறார், அவர்களை வழிநடத்துகிறார். இவ்வாறு, குடும்பம் செபத்தின் வழியாக இறைஉறவில் வளர்கிறது.

பிள்ளைகளுக்காக மன்றாடுவதும், அவர்களோடு இணைந்து செபிப்பதும் பெற்றோரின் இனிய கடமை. நீண்டநாள் பிரிவுக்குப்பின் மகன் தோபியா வீடு திரும்பியபோது, தோபித்து பெருமகிழ்ச்சியடைந்தார். "கடவுள் போற்றி, அவரது மாபெரும் பெயர் போற்றி" (தோபி 11:14) என்று கடவுளைப் போற்றினார். தம் மகன் சாமுவேலுக்காக அன்னா மன்றாடினார் (1சாமு2:1-10). யோவானுக்காக கடவுளைப் போற்றினார் செக்கரியா (லூக் 1:67–70).

எந்தக் குடும்பத்தில் செபம் இருக்கின்றதோ அங்கே இயேசுவின் பிரசன்னம் இருக்கும். எங்கு இயேசுவின் பிரசன்னம் இருக்கிறதோ அங்கே குறைகள் நிறைவாக்கப்படும். கானாவூர் திருமண வீட்டில் இயேசு பிரசன்னமாக இருந்தார். அந்த வீட்டாரின் குறைகள் நிறைவானது.

## குடும்பமும் இறைவார்த்தையும்

இறைவார்த்தை வழியாக இறைவன் நம்மோடு சிறப்பாகப் பேசுகிறார். குடும்பச் செபத்தின்போதும், மற்ற நிகழ்வுகளிலும், குடும்ப உறுப்பினர்கள் இறைவார்த்தையை வாசித்து, சிந்தித்து, அதன் அடிப்படையில் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும்போது இறைவனுடைய திருவுளத்தை அறிந்துகொள்கிறார்கள். அந்த வார்த்தைவழி வாழ முற்படுகிறார்கள். இவ்வாறு ஒரு கிறிஸ்துவக் குடும்பம் இறைவனுடன் உறவுகொண்டு வாழ இறைவார்த்தை பெரிதும் உதவுகின்றது.

## குடும்பமும் அருளடையாளங்களும்

அருளடையாளக் கொண்டாட்டங்களில் கடவுள் தம்மை வெளிப்படுத்துகிறார். அவற்றில் பங்கேற்கும் குடும்ப உறுப்பினர்கள் கடவுளைச் சந்திக்கின்றனர், அவரை ஏற்றுக்கொள்கின்றனர். இறைவன் அவர்களுக்குத் தம் அருள் வரங்களைப் பொழிகிறார். குடும்ப உறுப்பினர்கள் உறவு வாழ்வில் வளர்வதற்குத் தேவையான ஆற்றலைப் பெறுகிறார்கள். எனவே குடும்பத்திலுள்ள அனைவரும் அருளடையாளக் கொண்டாட்டங்களில், ஞாயிறு திருப்பலிகளில் பங்கேற்பது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப அன்பே சமுதாயத்தில் பிரதிபலிக்கும்

குடும்பமே சமுதாயத்தின் அடித்தளம், உயிர்நாடி. குடும்பங்கள்தான் சமுதாயத்தை உருவாக்குகின்றன, சமுதாய வாழ்வை நிர்ணயிக்கின்றன. எனவே, தாம் வாழும் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் கிறிஸ்துவக் குடும்பங்களுக்கு மிகுந்த பொறுப்பு உண்டு. இதைச் செய்வது எவ்வாறு?

குடும்பத்தில் பெற்றோரும் பிள்ளைகளும் உறவினரும் ஒருவர் ஒருவர்மீது காட்டும் அக்கறை, ஒருவர் மற்றவர்க்கு அளிக்கும் ஆறுதல், ஆற்றும் பணிகள், வழங்கும் தோழமை, கொடுக்கும் ஊக்கம், அளிக்கும் மன்னிப்பு, பகிரும் மகிழ்ச்சி போன்ற அனைத்தும் அன்பின் வெளிப்பாடுகளாக அமைகின்றன. இவை அனைத்தும் குடும்பத்தில் பயிற்றுவிக்கப்படுகின்றன, வாழ்ந்து காட்டப்படுகின்றன. இவ்வாறு குடும்பத்தில் நிலவும் அன்புவாழ்வு சமுதாயத்திலும் பிரதிபலிக்கிறது.

## குடும்பத்தின் ஈடுபாடே சமூகத்தின் மேம்மாடு

தந்தையும் தாயும் பிள்ளைகளும் உறவினர்களும் பல்வேறு வேலைகளைச் செய்கின்றனர். இவர்களது கடின உழைப்பினால் குடும்பம் மேம்பாடு அடைகிறது. அதுமட்டுமன்று, குடும்ப உறுப்பினர்களின் பணிகளால் சமுதாயம் நாளுக்கு நாள் உயர்வடைகிறது. குடும்பத்தின் உறுப்பினர்கள் அறிவியல், அரசியல், பொருளாதாரம், சமூகக் கலை, பண்பாட்டு இலக்கியத் துறைகள் ஆகியவற்றில் முனைப்புடன் ஈடுபடுவதால் சமுதாயம் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் காண்கிறது.

தான் உண்டு, தனது குடும்பம் உண்டு, தனது வேலை உண்டு என்னும் குறுகிய மனப்பான்மை கொண்ட குடும்ப வாழ்வு உண்மையான குடும்ப வாழ்வாக இருக்க முடியாது. இவ்வாறு வாழ்வது மிகவும் எளிது. ஆனால் கிறிஸ்துவக் குடும்பங்கள் இத்தகைய வாழ்வுக்கு அழைக்கப்படவில்லை.

## குடும்ப விழுமியங்கள் சமுதாயத்தை ஊடுருவ வேண்டும்

கிறிஸ்துவக் குடும்பத்தின் மிளிரும் அருள்வாழ்வின் விழுமியங்கள் சமுதாயத்தை ஊடுருவ வேண்டும். அதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரம் தம் குடும்பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளை நிறைவேற்றுவதோடு சமுதாய வளர்ச்சியிலும் ஈடுபாடு காட்ட வேண்டும்.

கிறிஸ்துவின் மதிப்பீடுகளான இறை நம்பிக்கை, உண்மை, அன்பு, நீதி, நேர்மை, பகிர்தல், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை வளர ஒவ்வொரு கிறிஸ்துவக் குடும்பமும் உழைக்க வேண்டும். சமுதாயத்தில் காணும் ஏற்றத்தாழ்வுகள், சுரண்டல்கள், சாதியம், அநீதிகள், மூடநம்பிக்கைகள், வன்முறைகள் முதலியவற்றைக் கடுமையாக எதிர்த்துப் போராட வேண்டும்.

## குடும்பம் பணிவாழ்வுக்கு அழைக்கப்படுகிறது

நாம் குடும்பமாக ஆண்டவருக்கு ஊழியம் செய்ய அழைக்கப்படுகின்றோம். கிறிஸ்தவ அழைப்பு என்பது பணிசெய்வதற்கான அழைப்புத்தானே. "நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்" (யோசு 24: 15) என்று சொன்ன யோசுவாவைப்போல் ஒவ்வொரு குடும்பமும் சொல்ல வேண்டும்.

"குடும்ப உறுப்பினர் ஒருவருக்கொருவர் காட்டும் பற்றாலும், ஒன்றாய்க் குழுமி இவர்கள் கடவுள்பால் எழுப்பும் செபத்தாலும், திருச்சபையின் இல்லத்திருவிடமாய் இக்குடும்பம் விளங்குவதாலும், திருச்சபையின் திருவழிபாட்டில் குடும்பம் முழுவதும் கலந்துகொள்வதாலும், தேவையுறும் சகோதரர் அனைவரின் சேவைக்காக நீதியையும் பிற நற்செயல்களையும் ஊக்குவிப்பதாலும் மறைத்தூதுப் பணியைக் குடும்பம் நிறைவேற்றும்." (பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணி 11/4)

## முப்பணிகளில் பங்கேற்க அழைப்பு

இறைமக்களின் திருக்கூட்டமே திருச்சபை. இறை மக்கள் வாழ்வது குடும்பங்களில். எனவே கிறிஸ்துவக் குடும்பமே திருச்சபையின் அடித்தளம். திருச்சபை பிரதிபலிக்கப்படுவதும் குடும்பங்களில்தான். எனவே திருச்சபையின் அனைத்துப் பணிகளிலும் பங்கேற்றுப் பொறுப்புடன் செயலாற்ற வேண்டியவை குடும்பங்களே.

ஒவ்வொரு கிறிஸ்துவக் குடும்பமும் கிறிஸ்துவின் முப்பணிகளாகிய 1. இறைவாக்குப் பணி, 2. புனிதப்படுத்தும் பணி, 3. வழிநடத்தும் பணி ஆகியவற்றில் பங்கேற்க அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் இறைவாக்குப் பணிகளாக குடும்பத்தில் திருவிவிலியத்தை வாசித்தல், இறைவார்த்தையைப் பகிர்ந்துகொள்ளல், வார்த்தைவழி வாழ்தல், மறைக்கல்வி கற்பித்தல், நற்செய்தி அறிவித்தல், அன்பியங்களில் நற்செய்திப் பகிர்வு செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

குடும்பத்தின் புனிதப்படுத்தும் பணிகளாக குடும்பச் செபம் செபித்தல், பல்வேறு பக்தி முயற்சிகளில் பங்கேற்றல், திருப்பலி மற்றும் அருள்சாதனங்களில் குடும்பமாகப் பங்கேற்றல், இவற்றில் மற்றவர்களும் பங்கேற்கச் செய்தல், ஒருவர் ஒருவருக்காகத் தியாகம் செய்தல், தங்கள் பிள்ளைகளைக் குருக்களாக, துறவிகளாக அர்ப்பணித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

குடும்பத்தின் வழிநடத்தும் பணிகளாக குடும்பத்தைப் பொறுப்புடன் பராமரித்தல், பிள்ளைகளை அறநெறியில் வழிநடத்துதல், பங்கின் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுதல், பக்திசபைகள் - பங்கிலுள்ள பல்வேறு இயக்கங்கள் - பங்குப் பேரவை ஆகியவற்றுடன் இணைந்து செயற்படல், அரசியலிலும் சமூகப் பொருளாதாரத் துறைகளிலும் ஈடுபடுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## திருக்குடும்பமா தெருக்குடும்பமா?

இறைபிரசன்னம் இல்லாத குடும்பம் திருக்குடும்பமாக இருக்க முடியாது. அது தெருக்குடும்பமாகத்தான் இருக்க முடியும்! எனவே மூவொரு இறைவனின் சாயலில் பிரதிபலித்து அருள்வாழ்வை குடும்பங்கள் வாழ வேண்டும். செபத்தில் நிலைத்து இறைவார்த்தையில் வேரூன்றி அருட்சாதனங்களை உரியமுறையில் அடிக்கடி பங்கேற்க வேண்டும். கிறிஸ்துவின் முப்பணிகளில் குடும்பங்கள் பங்கெடுக்க வேண்டும். இவ்வாறு குடும்பம் ஒரு குட்டித் திருச்சபையாக முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை

"மரம் பலன்தர பல நாட்களாகும். நல்ல குடும்பம் உடனே பலன் தருகிறது" என்கிறார் தாமஸ் கார்லோ.

**நல்ல குடும்பம்** : ஒரு அன்புக் களஞ்சியம், நன்மக்களை உருவாக்கும் பயிற்சிப் பாசறை, குணக்குன்றுகளின் பிறப்பிடம், முழுமையான மனிதனை உருவாக்கும் பல்கலைக்கழகம், நசரேத்தூர் திருக்குடும்பத்தின் மறுபதிப்பு.

**நல்ல குடும்பம்** : குவலயம் சிறப்புறுவதற்கான முதல்படி, ஒளிமயமான சமுதாயத்தின் அடித்தளம், திருச்சபையின் உயரணு, குட்டித்திருச்சபை.

**நல்ல குடும்பம்** : ஒரு வார்ப்பு, ஒரு வரைபடம் (Blue Print), பிள்ளைகளின் எதிர்காலக் குணநலன்கள் அங்கே வடிவமைக்கப்படுகின்றன.

வாருங்கள் நமது குடும்பங்களை மீளக்கட்டுவோம். உலகம் உருண்டுகொண்டேயிருந்தால் மட்டும் போதாது, உயிருள்ள மற்ற எதையும்போல, அது தொடர்ந்து உருவாகிக்கொண்டும் உன்னதத்தை நோக்கித் தன்னை உயர்த்திக்கொண்டும் இருக்கவேண்டும்.

நாமும் ஏதோ பிறந்தோம், இருந்தோம், இறந்தோம் என்பதல்ல வாழ்க்கை. இந்த உலக வாழ்வு ஒருமுறை மட்டுமே. அது உயர்வானதாக, உன்னதமானதாக இருக்க வேண்டும்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கொப்ப இந்நூலை வாசித்த நீங்கள் இது மற்றவர்களுக்கும் பயன்படும் எனக் கண்டால் இதை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

இந்நூல் தொடர்பான உங்கள் மனப்பதிவுகளை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

தொலைபேசி : 077-7420811
மின்னஞ்சல் : nesanmnr@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

**திருவிவிலியம் (விளக்கவுரைகளுடன்),** கிளரேசியன் கொமினிக்கேசன், சென்னை, 600 045, மூன்றாம் பதிப்பு, 2014.

**இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்,** தேடல் வெளியீடு, தூய பவுல், இறையியல் கல்லூரி, திருச்சி, (4ம் பதிப்பு) 2001.

**திருச்சபையின் சட்டத் தொகுப்பு (The Code of Canon Law, Tpi, Bangalore, 2005)**

**கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி ஏடு (CCC)**

இருதயராஜ், வை., **சுகமான சுமைகள் (பத்துக் கட்டளைகள்),** நம் வாழ்வு வெளியீடு, சென்னை 600 004, 2ம் பதிப்பு, 2013.

குமார் ராஜா, **இறைமொழி விருந்து,** வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், 2008.

செர்வாசியுஸ், **முத்துக்கள்,** குமரி மாவட்டம், 1991.

மார்ட்டின், கோவை எம்.எம். ஜே., **இனிமையான இல்வாழ்விற்கு,** புனித மரியன்னை அச்சகம், பெஸ்கி, கல்லூரி, 2014.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. **தண்ணீருக்குள் தாகமா?**
(இறைவனின் இயல்புகள்) - 2007.

2. **வெளிச்சத்தின் வேர்கள்**
(செபம் பற்றிய புரிதல்கள்) – 2007
(2007ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த சமய நூலுக்கான விருது பெற்றது)

3. **நெருடல்கள்** (கவிதைத் தொகுதி) - 2009

4. **கல்வாரிக் காலடிகள்**
(திருவிவிலியச் சிலுவைப் பாதை) - 2012

5. **சிலுவையின் பாதையில் சின்னக் காலடிகள்**
(சிறுவர் சிலுவைப் பாதை) – 2013

6. **அன்பின் அதிர்வுகள்**
(சிலுவைப் பாதை) - 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூல் பற்றி

இது குடும்பம் பற்றிய நூல்! குடும்பத்தில் பல்வேறு வகிபாகங்களைக் கொண்டிருக்கும் கணவன், மனைவி, அம்மா, அப்பா, பெற்றோர், பிள்ளைகள், சகோதரர்கள், மூத்தோர் என ஒவ்வொரு தரப்பினரின் கடமைகளை, பொறுப்புக்களை இந்நூல் வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றது. விவிலிய மேற்கோள்களோடு, நடைமுறை வாழ்வின் யதார்த்தங்களோடு, உளவியல் கண்ணோட்டத்தோடு, நகைச்சுவை உணர்வோடு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு தரப்பினருக்கும் இந்நூலில் செய்தி உண்டு. உங்கள் குடும்ப வாழ்வில் மாற்றமும் ஏற்றமும் காண இந்நூல் மருந்தாக, விருந்தாக நிச்சயம் அமையும்.



## நூலாசிரியர் பற்றி

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்பணியாளர் பாவிலு கிறிஸ்து நேசரெட்னம் அவர்கள் தமிழிலக்கிய உலகில் 'தமிழ் நேசன்' என அறியப்படுகின்றார். யாழ்ப்பாணம் மற்றும் கண்டி குருத்துவக் கல்லூரிகளில் பயின்ற இவர் 1997ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்டார்.

வங்காலை, மன்னார், தலைமன்னார் ஆகிய பங்குகளில் பங்குப்பணியாற்றிய இவர், மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநராக ஐந்து வருடங்கள் பணிபுரிந்தார். யாழ் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டத்தை நிறைவுசெய்த இவர் தற்போது மன்னார் மறைமாட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் இயக்குனராகப் பணியாற்றுகின்றார்.

மன்னார் மறைமாவட்ட மாதாந்தப் பத்திரிகையான 'மன்னா' என்ற பத்திரிகையின் ஆசிரியராக கடந்த 12 ஆண்டுகளாக சேவையாற்றி வருகின்றார். மன்னார் சர்வமதப் பேரவையின் தலைவராகவும், மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் உள்ளார். இவர் பல நூல்களின் ஆசிரியர். பல நூறு இலக்கிய விழாக்களை நடத்தியவர். பல உலகத் தமிழ் மாநாடுக-ளில் பங்குபற்றியதுடன் மன்னாரில் சில மாநாடுகளை நடத்தியும் உள்ளார்.

- திருமதி. பெப்பி விக்ர் லெம்பேட்,
உதவிக் கல்வி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cyber City Printers
Tel : 0715797597